القرآن الكريم والحديث الصحيح وحي من الله
لا إمكان للتعارض بينهما

ஸஹீஹான ஹதீஸ் அல்குர்ஆனுக்கு
ஒருபோதும் முரண்படாது

تأليف

حسن علي بن حميد العمري والنذيري

ஆசிரியர்:

ஹசன் அலீ உமரீ

تقديم

فضيلة الشيخ د . ار.كي نور محمد العمري والمدني

மேலாய்வு:

ஷெய்க் டாக்டர் ஆர்.கே. நூர் முஹம்மது உமரீ மதனி

أصحاب الحديث

ASHAABUL HADEETH PUBLICATION

THE RIGHT SOURCES TO ACQUIRE KNOWLEDGE

Title of the Book	:	**Saheehana Hadees AlQuranukku Orupodhum Muranpadathu**
Author	:	**H. Hasan Ali Umari**
Language	:	Tamil
© Copy Right	:	Author
No.of Pages	:	112
Publisher	:	**Ashaabul Hadeeth Publication** Chennai.
Layout Design	:	Grow Graphics, Chennai-2.
Sole Distributors	:	**Darussalam India** 324, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005. Tamil Nadu, India. Ph: 044-45566249 email: info@darussalam.in Web: www.darussalam.in **Darul Huda** 211 (102), Linghi Street, Mannady, Chennai - 600 001. Ph: 044-2524 7866, 98401 74121 web: www.darulhuda.net

Price : ₹ 60/-

பொருளடக்கம்

முன்னுரை 4

சுன்னா வரைவிலக்கணம் 9

அல்குர்ஆன் மற்றும் சுன்னாவிற்கு மத்தியிலுள்ள தொடர்பு 14

ஹதீஸ்களும் வஹீயே (இறைச்செய்தியே) 17

ஹதீஸ்களும் பாதுகாக்கப்பட்டுள்ளன 27

ஹதீஸ்களின் எண்ணிக்கை 31

சுன்னாவை மறுப்பவர்களின் வாதமும் பதிலும் - 1 32

சுன்னாவை மறுப்பவர்களின் வாதமும் பதிலும் - 2 34

ஸஹீஹான ஹதீஸிற்கான நிபந்தனைகள்: 37

அறிவிப்பாளர் தொடரை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு... 39

ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்பட்டால்... 43

உமர் ﵁ அவர்கள் ஃபாத்திமா பின்த் கைஸின் ஹதீஸை... 52

இறந்தவர்களுக்காக அழுவதால் கப்றில் வேதனை அளிக்கப்படுமா? 59

மூஸா நபி வானவரை தாக்கினார்களா? 67

அல்குர்ஆனில் நீக்கம் செய்யப்பட்டதா? 84

பருவ வயதையடைந்த சாலிம் ﵁ அவர்கள் பால் அருந்தினார்களா? 96

முடிவுரை 112

முன்னுரை

அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அகிலத்தாருக்கு அருட்கொடையாக அனுப்பப்பட்ட எங்கள் நபி முஹம்மத் ﷺ அவர்கள் மீதும் அன்னாரின் உறவினர், உத்தமத் தோழர்கள் மீதும் ஸலவாத்தும் ஸலாமும் உண்டாவதாக!

நபி ﷺ அவர்களை தூதராக ஏற்று ஒருவர் சாட்சி கூறினால், அவர் நபி ﷺ அவர்கள் எதனை கட்டளையிட்டார்களோ அதில் அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டும், எதனை விட்டு தடுத்தார்களோ அதைவிட்டு விலகிட வேண்டும், எதுபற்றி அறிவித்தார்களோ அதனை உண்மைப்படுத்த வேண்டும். மற்றும் அவர்கள் காட்டித் தந்த வழியினிலேயே அல்லாஹ்வை வணங்க வேண்டும். இந்த நான்கு அடிப்படைகளை ஒருவர் ஏற்று அதனைப் பின்பற்றினால் மட்டுமே அவர் நபி ﷺ அவர்கள்மீது உண்மையில் ஈமான் கொண்டவராக ஆவார்.

இந்த நான்கு அடிப்படைகளையும், நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களிலேயே பெற முடியும். ஆகவேதான் ஹதீஸ்களை ஏற்று அதனடிப்படையில் செயல்படுவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாக இருக்கிறது. மேலும் ஹதீஸ்களை முறையாக ஏற்று அதனடிப்படையில் செயல்படுவதன் மூலமே ஒருவரால் நேர்வழியைப் பெற முடியும். இதுபற்றி அல்லாஹ் கூறுகிறான்,

وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகின்றாரோ அப்போது அவர் திட்டமாக மகத்தான வெற்றியாக வெற்றியடைந்து விட்டார். (அல்அஹ்ஜாப்: 71)

நபி ﷺ அவர்களுக்கு கீழ்ப்படிவது மற்றும் பின்பற்றி நடப்பது என்பது அவர்களின் ஹதீஸ்களை ஏற்று அவற்றை செயல்படுத்துவதையே குறிக்கிறது.

ஒருவர் ஹதீஸ்களை முறையாக நம்பாமலும், அதனடிப்படையில் செயல் படாமலும் இருந்தால் அவர் வழிகேட்டில் விழுந்து விடுவார். இதுபற்றி அல்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்,

وَمَنْ يَعْصِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ ضَلَّ ضَلَالًا مُبِينًا

அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எவர் மாறு செய்கிறாரோ

அவர், பகிரங்கமான வழிகேடாக திட்டமாக வழிகெட்டு விட்டார். (அல்அஹ்ஜாப்: 36)

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள், என் சமுதாயத்தார் அனைவரும் சொர்க்கம் செல்வார்கள், ஏற்க மறுத்தவர்களைத் தவிர என்று கூறினார்கள். அல்லாஹ்வின் தூதரே! ஏற்க மறுத்தவர்கள் என்றால் யார்? என ஸஹாபாக்கள் கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் பதிலளித்தார்கள், எனக்குக் கீழ்படிந்தவர் சொர்க்கம் செல்வார், எனக்கு மாறு செய்தவர் ஏற்க மறுத்தவர் ஆவார்.

(அறிவிப்பாளர்: அபூஹுரைரா, நூல்: புகாரி - 7280)

இஸ்லாமிய வரலாற்றை ஆய்வு செய்தால், சிலர் ஹதீஸ் மறுப்புக் கொள்கையை செயல்படுத்தி வழிகேட்டில் வீழ்ந்ததை நாம் பார்க்க முடியும். இன்றுகூட நாம் வாழும் தமிழகத்தில் குர்ஆன் மற்றும் ஹதீஸை பின்பற்றுவதாக கூறிக்கொள்ளும் 'தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்' எனும் ஓர் அமைப்பு ஹதீஸ் மறுப்புக் கொள்கையை தூய இஸ்லாம் என்ற பெயரில் மக்களிடம் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பதை நாம் காணலாம். ஒரு ஹதீஸ் ஸஹீஹானதாக இருந்தாலும் அந்த ஹதீஸ், குர்ஆனுக்கோ அல்லது அறிவிற்கோ அல்லது நிதர்சனத்திற்கோ முரண்பட்டால் அந்த ஹதீஸை நிராகரிக்க வேண்டும், மறுக்க வேண்டும் என்று கூறி காலங்காலமாக அனைத்து தரப்பு முஸ்லிம் அறிஞர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல ஸஹீஹான ஹதீஸ்களை இந்த ஜமாத் மறுத்து வழிகேட்டிலே இருந்து கொண்டிருக்கிறது.

நபி ﷺ அவர்கள் அறிவித்த செய்திகளை உண்மைப்படுத்துவது நபி மீது ஈமான் கொள்வதில் ஓர் அடிப்படையாக இருக்கிறது. ஆனால் இவர்களோ இந்த அடிப்படைக்கு மாற்றமாக நபி ﷺ அவர்கள் கூறிய ஹதீஸ்களை ஏற்காமல் அறிவிற்கு முக்கியத்துவம் அளித்து பல ஸஹீஹான ஹதீஸ்களை மறுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு காலகட்டத்திலும் இஸ்லாத்தின் பெயரால் எழுந்த வழிகேடான வாதங்களையும், தவறான விளக்கங்களையும் கூறுபவர்களைப் பற்றி நாம் ஆய்வு செய்து பார்த்தால், அவர்கள் மார்க்கத்தைப் பற்றி சரியாக விளங்காதவர்களாகத்தான் இருப்பார்கள். ஆக மார்க்கத்தைப் பற்றிய அறியாமையே அனைத்து வழிகேட்டிற்கும் அடிப்படையான காரணமாக இருக்கிறது. இதே அறியாமைதான் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் எனும் அமைப்பினிடமும் உள்ளது. இந்த அறியாமைதான் இவர்களை

மார்க்கத்தின் அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக ஹதீஸ் துறையில் மிகப் பெரிய வழிகேட்டில் தள்ளிவிட்டது. (அல்லாஹ் இவர்களுக்கு நேர்வழி காட்ட வேண்டும்.)

ஹதீஸ் மறுப்புக் கொள்கையில் சென்று வழிகெட்டுப் போனவர்களுக்கு ஏற்பட்ட ஒரு நிலை நமக்கு ஏற்படக் கூடாது எனில், ஹதீஸ் தொடர்பான சரியான கல்வியை நம்மில் ஒவ்வொருவரும் அறிந்திருப்பது மிக மிக அவசியமானதாகும். அத்தகைய கல்வியைப் பற்றியே இந்நூலில் தெளிவுபடுத்தியுள்ளேன்.

- சுன்னா வரைவிலக்கணம்
- ஹதீஸ்கள் வஹீயாகும்
- ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன
- ஹதீஸ்கலை பற்றிய விவரம்
- ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்படும் என ஹதீஸ்கலையில் எந்த ஒரு விதியும் இல்லை
- ஹதீஸ்களை மறுப்பவர்களின் வாதங்களும் - பதில்களும்

இதுபோன்று ஹதீஸோடு தொடர்புடைய அடிப்படையான கல்வியை விரிவாக இந்நூலில் முதல் பகுதியில் தெளிவுபடுத்தியுள்ளேன்.

மேலும் அல்குர்ஆனுக்கு முரண்படுகிறது என்ற வாதத்தை வைத்து சில ஸஹீஹான ஹதீஸ்களை தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் எனும் அமைப்பு மறுத்து வருகிறது. அத்தகைய ஹதீஸ்களில்

1) உமர் ؓ அவர்கள் ஃபாத்திமா பின்த் கைஸின் ஹதீஸை மறுத்தார்களா?
2) இறந்தவர்களுக்காக அழுவதால் கப்றில் வேதனை அளிக்கப்படுமா?
3) மூஸா நபி வானவரை தாக்கினார்களா?
4) அல்குர்ஆனில் நீக்கம் செய்யப்பட்டதா?
5) பருவ வயதையடைந்த சாலிம் ؓ அவர்கள் பால் அருந்தினார்களா?

இந்த ஐந்து ஹதீஸ்களை மறுப்பதற்கு இவர்கள் என்ன வாதங்களை முன்வைக்கிறார்களோ, அதே வாதங்களை முன்சென்ற வழிகேடர்களான முஅதஜிலாக்கள், ஜஹமிய்யாக்கள் போன்ற வழிகெட்ட கொள்கை யுடையவர்கள் இவர்களுக்கு முன்பே வைத்து இந்த ஹதீஸ்களை

மறுத்துள்ளார்கள். அந்த வழிகேடர்களின் வாதங்களையே இவர்கள் ஆய்வு என்ற பெயரில் தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்கள்.

முஅதஜிலாக்களுக்கும் ஜஹமிய்யாக்களுக்கும் முன்சென்ற நல்ல மார்க்க அறிஞர்கள் என்ன பதிலை அளித்தார்களோ அந்த பதிலையே நானும் இவர்களுக்கு இந்நூலில் இரண்டாம் பகுதியில் அளித்திருக்கிறேன்.

இறுதியாக இந்நூலை எழுதுவதற்கு எனக்கு கிருபை செய்த அல்லாஹ்வுக்கு நான் முதலில் நன்றி செலுத்துகிறேன். ஹதீஸ்கலை பற்றிய அடிப்படையான கல்வியை தெளிவுபடுத்தி ஒரு நூலை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டபோது அதற்கான வழிகாட்டுதல்களையும், ஆலோசனைகளையும் தந்து உதவிய எனது ஆசிரியரான பெரும் மதிப்பிற்குரிய ஷெய்க் ஆர்.கே. நூர் முஹம்மத் மதனீ அவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக! அவர்களின் மார்க்கப் பணியை பொருந்திக் கொள்வானாக! அவர்களின் வாழ்விலும், பணியிலும் அபிவிருத்தி செய்வானாக! மேலும் இந்நூலை வெளியிடும் அஸ்ஹாபுல் ஹதீஸ் பதிப்பகத்தார்களுக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக! ஆமீன்!

இந்நூலை நல்லெண்ணத்துடன் படிக்கும் அனைவருக்கும் சுன்னா தொடர்பான நம்பிக்கையில் தெளிவான விளக்கத்தை அளித்திட வேண்டி அல்லாஹ்விடமே பிரார்த்திக்கின்றேன்! அல்லாஹ்வே! அறியாமை எனும் இருளை போக்கி கல்வி வெளிச்சத்தை எங்களுக்கு நீ ஏற்படுத்துவாயாக! ஆமீன்!

அன்புடன்

ஹசன் அலீ உமரி
IRGC – Chennai
hasanumari@gmail.com

بسم الله الرحمن الرحیم

جمعیت اہلحدیث ہند - تملناڈو و پانڈیچری

ஜம்யிய்யத் அஹ்லே ஹதீஸ் ஹிந்த் - தமிழ்நாடு & பாண்டிச்சேரி

JAMIAT AHL - E - HADEES HIND - TAMILNADU & PONDY

Affiliated to : Markazi Jamiat Ahl-E-Hadees Hind, New Delhi. Regd No. 11016 / 1980

President Shaik **Mohammed Abdullah** *Sb.* *Hydrabadi, Umari, Madani*

Secretary Shaik **Dr.R.K.Noor Mohammed** *Sb.* *Umari, Madani*

Treasurer Janab **P.Ataullah Basha** *Sb.*

Ref. Date : ....

الحمد لله رب العالمين والصلاة والسلام على سيد الأنبياء والمرسلين نبينا محمد وعلى آله وصحبه أجمعين ومن تبعهم بإحسان إلى يوم الدين.

وبعد،،، فإن حديثَ الرسولِ صلى الله عليه وسلم المصدرُ الثاني للشريعة الإسلامية بعد كتاب الله عز وجل، وهو وحيٌ منزّلٌ من الله تعالى، وقد شهد بذلك القرآن في مواضع عديدة منها قوله سبحانه (وَمَا يَنْطِقُ عَنِ الْهَوَى إِنْ هُوَ إِلَّا وَحْيٌ يُوحَى) [النجم ٣-٤]، وقد أمر الله عز وجل عباده المؤمنين بالطاعة المطلقة للرسول صلى الله عليه وسلم فقال: (وَمَا أَرْسَلْنَا مِنْ رَسُولٍ إِلَّا لِيُطَاعَ بِإِذْنِ اللَّهِ) [النساء:٦٤] وقال: (وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانْتَهُوا) [الحشر: ٧].

ومن معجزات نبينا محمد صلى الله عليه وسلم وعلامات صدق نبوته أنه وقع كما تنبأ به صلى الله عليه وسلم أنه سيكون ناس ممن ينتسبون إلى أمته يأخذون ما في القرآن ويرفضون حديث من أنزل عليه القرآن، فترى هؤلاء يتكلمون في الأحاديث الصحيحة التي لا غبار عليها سنداً ومتناً وقد تلقتها الأمة بالقبول وينكرونها بحجة أنها تعارض القرآن كما زعموا، وما ذلك إلا لفهمهم السقيم وعقلهم المعكوس، وإلا فلن تجد في الأحاديث الصحيحة الثابتة ما يعارض القرآن البتة.

من أولئك المنحرفين عن الجادة بي. زين العابدين رئيس جماعة التوحيد في تاملنادو الذي أنكر عدداً من أحاديث الصحيحين بحجة أنها تعارض القرآن الكريم، وتكلم في الصحابة ونال منهم رضي الله عنهم وأرضاهم، وأنكر وجوب تكرار الزكاة في

المال المزكى وجاء بطامات لم يأت بها أحد في طوال أربعة عشر قرنا من الماضي، وما ذاك إلا لقلة علمه في الدين وجهله باللغة العربية ودعواه الفاسد أنه هو وجماعته فهموا الدين أحسن من الصحابة والعياذ بالله.

أحمد اللهَ عزَّ وجلَّ أنه وفق أخانا الفاضل حسن علي العمري النذيري للتصدي لما يبتدعه بي زين العابدين وأذنابُه من الباطل، وبيان الحق للناس في هذه الرسالة النافعة، فقد قام ببذل جهد مشكور في البحث والتحقيق عن بعض ما أثير من الشبهات حول الأحاديث الصحيحة والرد عليها وبيان زيفها وكشف عوارها، وأنار الحق لمن أراد الصراط المستقيم، وبين مكانة السنة المطهرة في الشريعة الإسلامية، وللمؤلف جهود سابقة في ترجمة وتأليف كتب مهمة إلى اللغة التاملية، أسأل الله سبحانه وتعالى أن يوفقه لمزيد من تأليف الكتب النافعة لإحقاق الحق وإبطال الباطل، وأن يبارك في علمه وعمله ويجعله ذخرا ليوم القيامة. آمين.

والسلام عليكم ورحمة الله وبركاته

كتبه في تاريخ ١٥ رجب ١٤٣٥هـ

د/ أركي نور محمد

الأمين العام لجمعية أهل الحديث في ولاية تامل نادو وبانديشري

شناي- الهند

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

ஷெய்க் ஆர்.கே நூர் முஹம்மத் மதனீ அவர்கள் மனமுவந்து இந்நூலுக்கு அளித்த மதிப்புரையின் தமிழாக்கம்.

الحمد لله رب العالمين والصلاة والسلام على سيد الأنبياء والمرسلين نبينا محمد وعلى آله وصحبه أجمعين ومن تبعهم بإحسان إلى يوم الدين

இஸ்லாமிய மார்க்கத்தில் அல்லாஹ்வின் வேதமான அல்குர்ஆனுக்கு அடுத்து நபி ﷺ அவர்களின் ஹதீஸ்கள்தான் இரண்டாவது அடிப்படை ஆதாரமாக உள்ளது. மேலும் இந்த ஹதீஸ்கள் அல்லாஹ்வின் புறத்திலிருந்து இறக்கியருளப்பட்ட வஹீயாகவும் இருக்கிறது. இதனை அல்லாஹ்வே அல்குர்ஆனில் பல இடங்களில் தெரியப்படுத்துகிறான்.

وَمَا يَنْطِقُ عَنِ الْهَوَى إِنْ هُوَ إِلَّا وَحْيٌ يُوحَى

அவர் தன் மனஇச்சையின்படி (எதையும்) பேசுவதுமில்லை. இது அறிவிக்கப்படும் (வஹீயாகிய) அறிவிப்பே தவிர (வேறு) இல்லை. (அந்நஜ்ம், 3-4)

அல்லாஹ் இறைநம்பிக்கைக் கொண்ட தனது அடியார்களுக்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களை கட்டாயமாக பின்பற்ற வேண்டும் என்று கட்டளையிடுகிறான்.

وَمَا أَرْسَلْنَا مِنْ رَسُولٍ إِلَّا لِيُطَاعَ بِإِذْنِ اللَّهِ

இன்னும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப கீழ்ப்படிதல்களுக்கு உரித்தாக்கப் பட்டவராகவே தவிர நாம் யாதொரு தூதரையும் (மனிதர்களிடம்) அனுப்ப வில்லை. (அன்னிஸா, 64)

وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانْتَهُوا

நம்முடைய தூதர் உங்களுக்கு எதைக் கொடுத்தாரோ அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். அவர் எதனை விட்டும் உங்களைத் தடுத்தாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். (அல்ஹஷ்ர், 7)

நபி ﷺ அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதமாகவும், அவர்களின் நபித்துவத்தை உண்மைப்படுத்துவதற்கு அடையாளமாகவும் நபி ﷺ அவர்கள் கூறிய பல முன்னறிவிப்புகள் அப்படியே நடந்து வருகிறது. அவ்வாறான முன்னறிவிப்புகளில் ஒன்றுதான் தங்களை நபி ﷺ அவர்களின் உம்மத்தவர்கள் என்று கூறிக்கொண்டு சிலர் தோன்றுவார்கள். அவர்கள் அல்குர்ஆனில் உள்ளதை மட்டுமே ஏற்பார்கள். அல்குர்ஆனுக்கு தெளிவுரையாக இருக்கின்ற ஹதீஸ்களை ஏற்காமல் விட்டு விடுவார்கள். அறிவிப்பாளர் தொடர் மற்றும் அறிவிக்கப்படும் செய்தியில் எந்த விதமான குறையுமில்லை என இந்த உம்மத்தவர்களால் ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களை அவர்கள் விமர்சனம் செய்வதை நீங்கள் காணலாம். அவர்கள், தங்களுடைய தவறான புரிதலினாலும், குறையான மதியினாலும் சில ஹதீஸ்களை அல்குர்ஆனிற்கு முரண்படுகிறது என்று தவறான ஆய்வின் அடிப்படையில் நிராகரிப்பார்கள். உண்மையில் ஒரு ஹதீஸ் 'ஸஹீஹ்' என நிரூபணமாகி விட்டால் அது ஒருபோதும் அல்குர்ஆனோடு முரண்படவே செய்யாது.

இவ்வாறு நேர்வழியை விட்டு வழிதவறியவர்களில் குறிப்பிடும் படியாக தமிழகத்தில் தவ்ஹீத் ஜமாத் எனும் அமைப்பின் தலைவரான பீ. ஜைனுல் ஆபிதீன் இருக்கிறார். இவர், ஸஹீஹான ஹதீஸ்கள் என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல ஹதீஸ்களை அல்குர்ஆனிற்கு முரண்படுகிறது என்று கூறி மறுத்து வருகிறார். அல்லாஹ்வால் பொருந்திக் கொள்ளப்பட்ட ஸஹாபாக்களை விமர்சனம் செய்கிறார். மேலும் ஜகாத் கொடுக்கப்பட்ட பொருளிற்கு மீண்டும் ஜகாத் கொடுக்க வேண்டியதில்லை என்றும் கூறுகிறார். இவ்வாறு இஸ்லாமிய வரலாற்றில் பதினான்கு நூற்றாண்டு காலமாக எவருமே சொல்லாத பல குழப்பமான கருத்துகளை இவர் கூறி வருகிறார்.

இவரின் இந்த குழப்பத்திற்கு அடிப்படையான காரணமாக இருப்பது இவருக்கு மார்க்கத்தை பற்றிய சரியான ஞானம் இல்லாததும், அரபி மொழியை பற்றிய அறியாமையும் மற்றும் அவரும் அவரது ஜமாத்தினரும் ஸஹாபாக்களைவிட மார்க்கத்தை நன்றாக விளங்கி வைத்திருப்பதாக அவர் எண்ணுவதே ஆகும். (அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக!)

அல்லாஹ்விற்கு நான் நன்றி செலுத்துகிறேன். அந்த அல்லாஹ்தான், பீ. ஜைனுல் ஆபிதின் மற்றும் அவரது அமைப்பின் அழைப்பாளர்கள்

ஏற்படுத்திய குழப்பத்திற்கு தெளிவையும், தீர்வையும் அளிக்கும் விதமாக இந்நூலை எழுதுவதற்கு நமது சகோதரர் ஹசன் அலீ உமரீ, நதிரீ அவர்களுக்கு கிருபை செய்திருக்கிறான். இந்நூலிலுள்ள தகவல்களைக் கொண்டு அல்லாஹ் மக்களுக்கு சத்தியத்தை தெரியப்படுத்த வேண்டி பிரார்த்திக்கிறேன்!

நூலாசிரியர் இந்நூலில், ஸஹீஹான ஹதீஸ்களை பற்றிய அவர்களின் விமர்சனத்திற்கு பதிலளித்தும், அவர்களின் வாதங்களுக்கு மறுப்பளித்தும், அவர்களின் ஆய்விலுள்ள குறைகளை தெளிவுப்படுத்தும் விதமாக பல தகவல்களை முயற்சி செய்து திரட்டியிருக்கிறார். நேர்வழியை அறிய விரும்புபவர்களுக்கு சத்திய பாதையை தெளிவாக்கியுள்ளார். மேலும் இஸ்லாமிய மார்க்கத்தில் சுன்னாவின் அந்தஸ்து என்ன என்பதையும் விளக்கிக் கூறியுள்ளார்.

இந்நூலாசிரியர் இதற்கு முன்பு தமிழ் மொழியில் சில முக்கியமான நூல்களை எழுதியும், மொழிபெயர்த்தும் உள்ளார். அல்லாஹ் மென்மேலும் நூலாசிரியருக்கு பயனளிக்க கூடிய பல நூல்களை எழுதுவதற்கு கிருபை செய்ய வேண்டி பிரார்த்திக்கிறேன்! அதன்மூலம் சத்தியத்தை நிலைநாட்டவும், அசத்தியத்தை அழிக்கவும் செய்வானாக! அல்லாஹ் நூலாசிரியரின் ஞானத்திலும், அமலிலும் பரக்கத் செய்வானாக! அவற்றை மறுமை நாளுக்கான சேமிப்பாக ஆக்கி வைப்பானாக! ஆமீன்

والسلام عليكم ورحمة الله وبركاته

ஹிஜ்ரி 1435, ரஜப் மாதம் 15ஆம் தேதி அன்று எழுதப்பட்டது.

இப்படிக்கு

டாக்டர் ஆர்.கே. நூர் முஹம்மத்

பொதுச் செயலாளர் ஜம்மிய்யத் அஹ்லே ஹதீஸ் தமிழ்நாடு, பாண்டிச்சேரி

بسم الله الرحمن الرحيم

சுன்னா வரைவிலக்கணம்

நபி ﷺ அவர்களின் செய்திகளை குறிப்பிடுவதற்கு இஸ்லாமிய வழக்கில் சுன்னா மற்றும் ஹதீஸ் என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. சுன்னா என்பதற்கு அரபி அகராதியில் வழி அல்லது வழிமுறை என்று பொருள். ஹதீஸ் என்பதற்கு அரபி அகராதியில் புதியது, சொல் என்று பொருள்.

சுன்னா மற்றும் ஹதீஸ் அகராதி ரீதியாக வெவ்வேறான பொருளை தரக்கூடிய வார்த்தைகளாக இருந்தாலும் இஸ்லாமிய வழக்கில் சுன்னா மற்றும் ஹதீஸ் என்று குறிப்பிடப்படும்போது அவை இரண்டும் ஒரே பொருளையே தரும்.

ما أضيف إلى النبي صلى الله عليه وسلم من قول أو فعل أو تقرير أو صفة (تيسير مصطلح الحديث)

நபி ﷺ அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் மற்றும் பண்புகளை நபி ﷺ அவர்கள் வரை தொடர்புப்படுத்துவது. (நூல்: தய்ஸிருல் முஸ்தலஹுல் ஹதீஸ் 1/9)

இஸ்லாமிய வழக்கில் சுன்னா மற்றும் ஹதீஸ் இவை இரண்டும் ஒரே பொருளை தந்தாலும் இவைகளுக்கு மத்தியில் சில வித்தியாசங்களும் இருக்கின்றன. ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களை மட்டுமே நபி ﷺ அவர்களின் சுன்னா என்று கூறமுடியும். பலவீனமான மற்றும் இட்டுக் கட்டப்பட்ட ஹதீஸ்களை நபி ﷺ அவர்களின் சுன்னா என்று கூறமுடியாது.

அவ்வாறே சுன்னா எனும்போது நபி ﷺ அவர்களின் சொல், செயல்

மற்றும் அங்கீகாரம் ஆகிய மூன்றை மட்டுமே குறிப்பிடப்படும். நபி ﷺ அவர்களின் பண்புகளைப் பற்றி குறிப்பிடப்படாது.

நபி ﷺ அவர்களின் சொல், செயல் அங்கீகாரம் மற்றும் பண்புகளைப் பற்றிய விவரங்ளை தெரியப்படுத்தியே ஹதீஸ்கள் அனைத்தும் இருக்கும். அத்தகைய ஹதீஸ்களின் விளக்கத்தினை சுருக்கமாகக் காண்போம்.

நபி ﷺ அவர்களின் சொல்லிற்கான உதாரணம்,

إِنَّمَا الأَعْمَالُ بِالنِّيَّاتِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், செயல்கள் அனைத்தும் எண்ணங்களை பொருத்தே உள்ளன. (புகாரி - 1)

الْحَلاَلُ بَيِّنٌ وَالْحَرَامُ بَيِّنٌ ، وَبَيْنَهُمَا مُشَبَّهَاتٌ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், ஹலால் தெளிவானதாக இருக்கிறது, ஹராம் என்பதும் தெளிவானதாக இருக்கிறது. இவற்றிக்கு மத்தியில் சில சந்தேகமான விஷயங்களும் இருக்கிறது. (புகாரி - 52)

இவ்வாறு நபி ﷺ அவர்களின் கூற்றுகளை தெரிவிக்கும் விதமாக ஸஹாபாக்கள் பல ஹதீஸ்களை அறிவித்திருக்கிறார்கள்.

நபி ﷺ அவர்களின் செயலிற்கான உதாரணம்,

كَانَ النَّبِيُّ صلى الله عليه وسلم يُفْطِرُ قَبْلَ أَنْ يُصَلِّيَ عَلَى رُطَبَاتٍ فَإِنْ لَمْ تَكُنْ رُطَبَاتٌ فَتُمَيْرَاتٍ فَإِنْ لَمْ تَكُنْ تُمَيْرَاتٌ حَسَا حَسَوَاتٍ مِنْ مَاءٍ

நபி ﷺ அவர்கள் பழுத்து வரும் பருவத்திலுள்ள பேரித்தம் பழங்களைக் கொண்டு நோன்பு துறப்பார்கள். அவை இல்லையெனில் நன்கு பழுத்த பழங்களைக் கொண்டு நோன்பு துறப்பார்கள். அதுவும் இல்லையெனில் ஒரு சிரங்கை தண்ணீர் அள்ளி அருந்தி, நோன்பு துறப்பார்கள். (அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் رضي الله عنه, நூல்: திர்மிதி, 700 - ஸஹீஹ்)

நபி ﷺ அவர்கள் ஒளூ செய்த முறையை தெரியப்படுத்தி வந்துள்ள ஹதீஸ்களையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இவ்வாறு நபி ﷺ அவர்களின் செயல்களை தெரிவிக்கும் விதமாக ஸஹாபாக்கள் பல ஹதீஸ்களை அறிவித்திருக்கிறார்கள்.

நபி ﷺ அவர்களின் அங்கீகாரத்திற்கான உதாரணம்,

عن ابْنَ عَبَّاسٍ أَخْبَرَهُ أَنَّ خَالِدَ بْنَ الْوَلِيدِ الَّذِى يُقَالُ لَهُ سَيْفُ اللَّهِ أَخْبَرَهُ أَنَّهُ دَخَلَ مَعَ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم عَلَى مَيْمُونَةَ وَهْىَ خَالَتُهُ وَخَالَةُ ابْنِ عَبَّاسٍ فَوَجَدَ عِنْدَهَا ضَبًّا مَحْنُوذًا ، قَدِمَتْ بِهِ أُخْتُهَا حُفَيْدَةُ بِنْتُ الْحَارِثِ مِنْ نَجْدٍ ، فَقَدَّمَتِ الضَّبَّ لِرَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم وَكَانَ قَلَّمَا يُقَدِّمُ يَدَهُ لِطَعَامٍ حَتَّى يُحَدَّثَ بِهِ وَيُسَمَّى لَهُ ، فَأَهْوَى رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يَدَهُ إِلَى الضَّبِّ ، فَقَالَتِ امْرَأَةٌ مِنَ النِّسْوَةِ الْحُضُورِ أَخْبِرْنَ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم مَا قَدَّمْتُنَّ لَهُ ، هُوَ الضَّبُّ يَا رَسُولَ اللَّهِ . فَرَفَعَ رَسُولُ اللَّهِ – صلى الله عليه وسلم يَدَهُ عَنِ الضَّبِّ ، فَقَالَ خَالِدُ بْنُ الْوَلِيدِ أَحَرَامٌ الضَّبُّ يَا رَسُولَ اللَّهِ قَالَ لاَ وَلَكِنْ لَمْ يَكُنْ بِأَرْضِ قَوْمِى فَأَجِدُنِى أَعَافُهُ . قَالَ خَالِدٌ فَاجْتَرَرْتُهُ فَأَكَلْتُهُ وَرَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم يَنْظُرُ إِلَىَّ

அல்லாஹ்வின் வாள் என்றழைக்கப்படும் காலித் இப்னு வலீத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நான் இறைத்தூதர் ﷺ அவர்களுடன் (அன்னை) மைமூனா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் இல்லத்திற்குச் சென்றேன். அவர்கள் எனக்கும் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் சிறிய தாயாராவார்கள். (அன்னை) மைமூனாவிடம் பொறிக்கப்பட்ட உடும்பு ஒன்றைக் கண்டேன். அதை அவர்களின் சகோதரி ஹுதைஃபா பின்த் ஹாரிஸ் ரலியல்லாஹு அன்ஹா நஜ்திலிருந்து கொண்டு வந்திருந்தார்கள். (அன்னை) மைமூனா ரலியல்லாஹு அன்ஹா அந்த உடும்பு இறைச்சியை இறைத்தூதர் ﷺ அவர்கள் முன் வைத்தார்கள். இறைத்தூதர் அவர்களோ எந்த உணவாயினும் அதன் பெயர் தமக்குக் கூறப்பட்டு அதைப் பற்றிய விவரம் சொல்லப்படாத

வரை அதன் பக்கம் தம் கையை நீட்டுவது அரிதாகும். (இந்நிலையில்) இறைத்தூதர் ﷺ அவர்கள் தம் கையை அந்த உடும்பின் பக்கம் நீட்ட அங்கிருந்த பெண்களில் ஒருவர் 'நீங்கள் பரிமாறியிருப்பது என்னவென்று இறைத்தூதர் ﷺ அவர்களுக்குத் தெரிவியுங்கள். அது உடும்பு இறைத்தூதர் அவர்களே!' என்று கூறினார். உடனே இறைத்தூதர் ﷺ அவர்கள் உடும்பைவிட்டுத் தம் கையை எடுத்துக்கொண்டார்கள். அப்போது நான் 'உடும்பு தடை செய்யப்பட்டதா? இறைத்தூதர் அவர்களே!' என்று கேட்க நபி ﷺ அவர்கள் 'இல்லை; ஆயினும் அது என் சமுதாயத்தாரின் பூமியில் இல்லை. எனவே என் மனம் அதை விரும்பவில்லை' என்று கூறினார்கள். உடனே நான் அதைத் துண்டித்துச் சாப்பிட்டேன். அப்போது இறைத்தூதர் ﷺ அவர்கள் என்னைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். (புகாரி - 5391)

நபி ﷺ அவர்களின் முன்னிலையில் ஒரு காரியம் நடந்து அதனை நபியவர்கள் தடுக்கவில்லையென்றால் அக்காரியம் நபியவர்களின் அங்கீகாரத்தில் அடங்கும். அவ்வாறே நாங்கள் நபி ﷺ அவர்களின் காலத்திலே இவ்வாறு செய்து கொண்டிருந்தோம் என்று ஒரு காரியத்தை குறிப்பிட்டு ஒரு ஸஹாபி கூறினால் அதுவும் நபி ﷺ அவர்களின் அங்கீகாரத்தில் அடங்கும் என ஹதீஸ்கலை வல்லுநர்கள் கூறுகிறார்கள். ஏனெனில் அது தடுக்கப்பட்ட காரியமாக இருந்தால் அதனை அல்லாஹ் நபி ﷺ அவர்களுக்கு வஹீயின் மூலமாக தெரியப்படுத்தி விடுவான். எனவே அவ்வாறு தடுக்கப்படவில்லையெனில், அக்காரியமும் நபி ﷺ அவர்களின் அங்கீகாரத்தில் அடங்கும்.

இதற்கு உதாரணமாக,

عَنِ ابْنِ عُمَرَ قَالَ كُنَّا نَشْرَبُ وَنَحْنُ قِيَامٌ وَنَأْكُلُ وَنَحْنُ نَمْشِى عَلَى عَهْدِ
رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم (أحمد)

நாங்கள் நபி ﷺ அவர்களின் காலத்தில் நின்றவாறு நீர் அருந்தவும், நடந்தவாறு உண்ணவும் செய்திருக்கிறோம். (அறிவிப்பாளர்: இப்னு உமர் ؓ, நூல்: அஹமத் 4938) ஸஹீஹ்[1]

---

1. நின்றவாறு உண்ணுவதும், பருகுவதும் ஹராம் என்ற வகையில் தடுக்கப்படவில்லை, அது அனுமதிக்கப்பட்ட செயலாகும் என்பதை இந்த ஹதீஸ் தெரியப்படுத்துகிறது. எனினும் அமர்ந்தவாறு நீர் அருந்துவதும், உண்ணுவதும் விரும்பத்தக்க சுன்னத்தாகும்.

நபி ﷺ அவர்களின் பண்புகளுக்கான உதாரணம்,

عَنْ سَعْدِ بْنِ هِشَامِ بْنِ عَامِرٍ قَالَ أَتَيْتُ عَائِشَةَ فَقُلْتُ يَا أُمَّ الْمُؤْمِنِينَ أَخْبِرِينِى بِخُلُقِ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم قَالَتْ كَانَ خُلُقُهُ الْقُرْآنَ

(أحمد)

நான் ஆயிஷா ؓ அவர்களிடம் வந்து, இறைநம்பிக்கையாளர்களின் தாயே! நபி ﷺ அவர்களின் குணநலன்களைப் பற்றி எனக்கு அறிவியுங்கள் என்று கேட்டேன். நபியவர்களின் குணம் அல்குர்ஆனாக இருந்தது என்று ஆயிஷா ؓ அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பாளர்: சஅத் பின் ஹிஷாம் பின் ஆமிர், நூல் அஹமத் - 25338) ஸஹீஹ்

இவ்வாறு நபி ﷺ அவர்களின் குணநலன்கள் மற்றும் அவர்களின் அங்க அமைப்பின் தன்மைகளைப் பற்றி ஸஹாபாக்கள் சில ஹதீஸ்களை அறிவித்திருக்கிறார்கள். இமாம் திர்மிதி அவர்கள் அஷ்ஷமாயில் என்ற நூலில் நபி ﷺ அவர்களின் அங்க அடையாளங்களை பற்றிய ஹதீஸ்களை மட்டுமே திரட்டித் தொகுத்திருக்கிறார்கள்.

அல்குர்ஆன் மற்றும் சுன்னாவிற்கு மத்தியிலுள்ள தொடர்பு

அல்குர்ஆன் மற்றும் சுன்னாவிற்கு மத்தியிலுள்ள தொடர்பை மூன்று வகைகளில் பிரிக்கலாம் என இமாம் இப்னுல் கய்யிம் ﵀ அவர்கள் இஅலாமுல் முவக்கியீன் (2/468) என்ற தனது நூலில் குறிப்பிடுகிறார்கள்.

1. ஒரு தகவல் அல்குர்ஆனில் வந்துள்ள அதே நடையில் சுன்னாவிலும் இடம்பெறுதல்.

அல்குர்ஆனில் பல இடங்களில் தொழுகையை நிலைநாட்டுங்கள், ஜகாத்தை கொடுங்கள் என்று வந்துள்ளது. இந்த கட்டளையானது தொழுகை மற்றும் ஜகாத் கடமையானது என்பதினை தெளிவுப்படுத்துகிறது.

நபி ﷺ அவர்களின் சுன்னாவிலும் தொழுகை மற்றும் ஜகாத் கடமையானது என்பதினை தெளிவுப்படுத்தி தகவல்கள் வந்துள்ளன.

عَنِ ابْنِ عُمَرَ رضى الله عنهما قَالَ قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم بُنِىَ الإِسْلاَمُ عَلَى خَمْسٍ شَهَادَةِ أَنْ لاَ إِلَهَ إِلاَّ اللَّهُ وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللَّهِ ، وَإِقَامِ الصَّلاَةِ ، وَإِيتَاءِ الزَّكَاةِ ، وَالْحَجِّ ، وَصَوْمِ رَمَضَانَ

'வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை என்றும் முஹம்மத் ﷺ அவர்கள் இறைத்தூதர் என்றும் உறுதியாக நம்புதல், தொழுகையை நிலைநிறுத்துதல், ஜகாத் வழங்குதல், ஹஜ் செய்தல், ரமாலானில் நோன்பு நோற்றல், ஆகிய ஐந்து காரியங்களின் மீது இஸ்லாம் நிறுவப்பட்டுள்ளது' என்று இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: என இப்னு உமர் ﵄ அறிவிக்கிறார்கள். (புகாரி - 8)

அல்குர்ஆன் மற்றும் சுன்னா ஆகிய இரண்டிலும் ஒரே கருத்தைத் தரும் தகவல்கள் இடம்பெற்றிருக்கும்.

2. அல்குர்ஆனில் விளக்கமாக கூறப்படாத தகவல்களை சுன்னாவில் விளக்கமாக கூறப்பட்டிருக்கும்.

அல்குர்ஆனில் பல இடங்களில் தொழுகையை நிறைவேற்றுங்கள், ஹஜ்ஜை

நிறைவேற்றுங்கள் என்று வந்துள்ளது. ஆனால் தொழுகையை எவ்வாறு தொழ வேண்டும், ஹஜ்ஜை எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்ற தகவல் அல்குர்ஆனில் தெளிவுபடுத்தப்படவில்லை. தொழுகையை எவ்வாறு தொழுவது, ஹஜ்ஜை எவ்வாறு நிறைவேற்றுவது என்ற தகவல்களை நபி ﷺ அவர்கள் தனது சுன்னாவின் மூலம் விளக்கமாக கூறியிருக்கிறார்கள்.

صَلُّوا كَمَا رَأَيْتُمُونِى أُصَلِّى

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே நீங்களும் தொழுங்கள். (புகாரி 631)

خُذُوا عَنِّى مَنَاسِكَكُمْ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், உங்களின் ஹஜ் செய்யும் முறையை என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். (அஹமத் - 1479) ஸஹீஹ்

சுன்னா அல்குர்ஆன் வசனத்திலுள்ள தெளிவற்றதை தெளிவுபடுத்தியும், பொதுவானவற்றை வரையறுத்தும், எது குறித்தும் குறிப்பிடாதவற்றை குறிப்பிட்டும் கூறுகிறது. ஆக சுன்னா இல்லாமல் அல்குர்ஆன் வசனங்களை விளங்கவே முடியாது.

3. அல்குர்ஆனில் இல்லாத சில தகவல்கள் சுன்னாவில் மட்டுமே இருக்கும் அல்குர்ஆனில் ஒரே திருமண பந்தத்தில் ஒரு பெண்ணையும் அவளது உடன் பிறந்த சகோதரியையும் திருமணம் முடிப்பதை மட்டுமே ஹராம் என குறிப்பிட்டு வந்துள்ளது. ஆனால் சுன்னாவில் ஒரே திருமண பந்தத்தில் ஒரு பெண்ணையும், அவளது சின்னம்மாவையும் திருமணம் முடிப்பது ஹராமாகும் அவ்வாறே ஒரு பெண்ணையும், அவளது மாமியையும் திருமணம் முடிப்பது ஹராமாகும் என்று அல்குர்ஆனில் இல்லாத ஒரு தகவலை நபி ﷺ அவர்கள் சுன்னாவின் மூலம் நமக்கு கூடுதலாக தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

عَنْ أَبِى هُرَيْرَةَ رضى الله عنه أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ لاَ يُجْمَعُ بَيْنَ الْمَرْأَةِ وَعَمَّتِهَا ، وَلاَ بَيْنَ الْمَرْأَةِ وَخَالَتِهَا

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், (ஒருவர்) ஒரு

பெண்ணையும் அவளுடைய தந்தையின் சகோதரியையும் ஒரு சேர மனைவியராக்கிக் கொள்ளலாகாது. (இதைப் போன்றே) ஒரு பெண்ணையும் அவளுடைய தாயின் சகோதரியையும் ஒருசேர மனைவியராக்கிக் கொள்ளலாகாது. (புகாரி - 5109)

இவ்வாறு அல்குர்ஆனில் இல்லாத சில தகவல்கள் சுன்னாவில் மட்டுமே உள்ளது. உதாரணத்திற்கு தஜ்ஜாலைப் பற்றிய ஹதீஸ்கள், மஹதீ (அலை) அவர்களைப் பற்றிய ஹதீஸ்கள். இவ்வாறு அல்குர்ஆனில் இல்லாமல் சுன்னாவில் மட்டுமே வந்திருந்தாலும் அதனையும் கட்டாயமாக ஏற்க வேண்டும். ஏனெனில் அந்த ஹதீஸ்களையும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்தான் கூறினார்கள். அல்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான்:

مَنْ يُطِعِ الرَّسُولَ فَقَدْ أَطَاعَ اللهَ

யார் இத்தூதரை பின்பற்றுகிறாரோ அவர் அல்லாஹ்வை பின்பற்றியவர் ஆவார். (4:80) ஆக அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் சொல்லுக்கு கீழ்ப்படிந்தவர் அல்லாஹ்வின் சொல்லுக்கே கீழ்ப்படிந்தவர் ஆவார் என்று இவ்வசனம் கூறுகிறது. ஆனால் இன்று சிலர் ஒரு தகவல் அல்குர்ஆனில் இல்லாமல் சுன்னாவில் மட்டுமே வந்திருந்தால் அந்தத் தகவலை நம்ப மறுக்கிறார்கள், அதில் சந்தேகம் கொள்கிறார்கள். இவ்வாறு சுன்னாவில் மட்டும் வந்துள்ள தகவல்களை ஒருவர் நம்பாமல் இருப்பது வழிகேடாகும். மார்க்கத்தின் அடிப்படை ஆதாரங்களில் ஒன்றான சுன்னாவை ஏற்க மறுப்பதும், அதனை புறக்கணிப்பதும் குஃப்ராகும்.

ஹதீஸ்களும் வஹீயே (இறைச்செய்தியே)

அல்குர்ஆனின் வசனங்கள் அனைத்தும் வஹீ என்பதில் எந்த முஸ்லிமுக்கும் மாற்றுக் கருத்து இருக்காது. ஆகவேதான் தங்களை முஸ்லிம் என்று கூறிக்கொள்ளும் எவரும் அல்குர்ஆன் தொடர்பாக சந்தேகங்களை எழுப்பியதில்லை. அல்குர்ஆன் எவ்வாறு வஹீயாக இருக்கிறதோ அவ்வாறே நபி ﷺ அவர்களின் சுன்னாவும் வஹீயாக இருக்கிறது என்பதைச் சிலர் நம்பிக்கை கொள்ளாமல் இருக்கிறார்கள். இந்த நம்பிக்கையற்ற தன்மையே அவர்களுக்கு சுன்னாவில் சிலவற்றை மறுக்கவும், சுன்னா முழுவதையுமே மறுக்கவும் காரணமாக இருக்கிறது.

நபி ﷺ அவர்களின் சுன்னாவிலுள்ள தகவல்கள் அல்லாஹ்வால் வஹீயாக தரப்பட்டவை என்று நம்புவது, இஸ்லாமிய மார்க்கத்தின் அடிப்படை நம்பிக்கைகளில் உள்ள ஒன்றாகும்.

وَمَا يَنْطِقُ عَنِ الْهَوَى إِنْ هُوَ إِلَّا وَحْيٌ يُوحَى

அவர் மனோஇச்சையின்படி பேசுவதில்லை. இது அவருக்கு அறிவிக் கப்படும் வஹியேயன்றி வேறில்லை. (அல்குர்ஆன் 53: 3-4)

நபி ﷺ அவர்கள் மார்க்கத்தின் பெயரால் சொல்கின்ற அனைத்து தகவல் களும் வஹீயாகும் என்று இவ்வசனம் கூறுகிறது. அது அல்குர்ஆன் வசனங்களாக இருந்தாலும் சரியே! அல்லது நபி ﷺ அவர்களின் சுன்னாவாக இருந்தாலும் சரியே!

وَأَنْزَلَ اللهُ عَلَيْكَ الْكِتَابَ وَالْحِكْمَةَ

அல்லாஹ் உம்மீது வேதத்தையும் ஞானத்தையும் இறக்கியுள்ளான். (அல்குர்ஆன் 4:113)

இமாம் ஷாஃபியீ ﵀ அவர்கள் கூறுகிறார்கள், அல்லாஹ் அல்குர்ஆனில் அல்கிதாப் என்கிறான், அது அல்குர்ஆனை குறிக்கும். மேலும் அல்ஹிக்மா என்று கூறுகிறான். அல்குர்ஆன் கல்வியை நன்றாக கற்றுத் தேர்ந்த கல்விமான்களிடம் அல்ஹிக்மா என்பதைப் பற்றி வினவியபோது, அவர்கள் அனைவரும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களின் சுன்னாவே அல்ஹிக்மா ஆகும் என்றார்கள். (நூல்: அர்ரிஸாலா, பக்கம் - 78)

அல்ஹிக்மா என்பது நபி ﷺ அவர்களின் சுன்னாவையே குறிக்கும் என்று இமாம் ஹசன் பஸரி, கதாதா, மகாதில், அபூ மாலிக் ﷺ ஆகியோரும் மற்ற அறிஞர்களும் கூறுகிறார்கள். (நூல்: தஃப்ஸிர் இப்னு கஸீர்)

وَاذْكُرْنَ مَا يُتْلَى فِي بُيُوتِكُنَّ مِنْ آيَاتِ اللهِ
وَالْحِكْمَةِ إِنَّ اللَّهَ كَانَ لَطِيفًا خَبِيرًا

மேலும் உங்கள் வீடுகளில் ஓதப்படுகின்ற அல்லாஹ்வின் வசனங்களையும் ஹிக்மத் (எனும் சுன்னத்)தையும் நினைவு கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நுட்பமானவனாக (யாவையும்) நன்கறிந்தோனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 33:34)

இமாம் தப்ரி ﷺ அவர்கள் இவ்வசனத்திற்கு விளக்கமாக கதாதா ﷺ அவர்களின் கூற்றை அறிவிப்பாளர் தொடருடன் பதிவு செய்கிறார்கள், அல்குர்ஆனில் இறக்கப்படாமல் நபி ﷺ அவர்கள்மீது வஹீயாக அறிவிக்கப்பட்ட மார்க்க சட்டங்களே அல்ஹிக்மா ஆகும். அது நபி ﷺ அவர்களின் சுன்னாவையே குறிக்கிறது. (நூல்: ஜாமியுல் பயான்)

நபி ﷺ அவர்களும் சுன்னா தனக்கு வஹீயாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதினை தெளிவுப்படுத்தும் விதமாக கூறினார்கள்,

عَنِ الْمِقْدَامِ بْنِ مَعْدِيكَرِبَ عَنْ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم أَنَّهُ قَالَ
أَلاَ إِنِّى أُوتِيتُ الْكِتَابَ وَمِثْلَهُ مَعَهُ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக நான் குர்ஆனும், அதைப் போன்றதும் (ஹதீஸும்) சேர்த்தே வழங்கப்பட்டுள்ளேன்

(அறிவிப்பாளர்: மிக்தாம் பின் மஹதைகரிப் ﷺ. நூல்: அபூதாவூத், 4606- ஸஹீஹ்)

ஹதீஸ்களும் வஹியாக நபி ﷺ அவர்களுக்கு தரப்பட்டுள்ளது என்பதற்கு மற்றொரு ஹதீஸையும் ஆதாரமாகக் கூறலாம்:

யஃலா ﷺ அறிவித்தார்கள்: நபி ﷺ அவர்களுக்கு வஹீ (இறைச்செய்தி) வரும்பொழுது எனக்குக் காட்டுங்கள் என்று உமர் ﷺ அவர்களிடம்

கேட்டேன். நபி ﷺ அவர்களும் அவர்களின் தோழர்களில் சிலரும் ஜிஇர்ரானா எனுமிடத்தில் இருந்தபோது ஒருவர் வந்து 'இறைத்தூதர் அவர்களே! நறுமணம் பூசிய நிலையில் உம்ராவுக்காக இஹ்ராம் அணிந்தவர் பற்றி என்ன கூறுகிறீர்கள்?' என்று கேட்டார். நபி ﷺ அவர்கள் சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள். அப்போது அவர்களுக்கு வஹீ (இறைச்செய்தி) வந்தது. உமர் رضي الله عنه என்னை சைகை செய்து அழைத்ததும் நான் சென்றேன். நபி ﷺ அவர்களுக்கு நிழல் தருவதற்காக ஒரு துணி கட்டப்பட்டிருந்தது. அத் துணிக்குள் நான் தலையை நுழைத்தேன். நபி ﷺ அவர்கள் முகம் சிவந்த நிலையில் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு (சிறிது சிறிதாக) அந்த நிலை மாறியது. அப்போது நபி ﷺ அவர்கள் 'உம்ராவைப் பற்றிக் கேட்டவர் எங்கே?' என்றார்கள். கேட்ட மனிதர் அழைத்து வரப்பட்டார். அவரிடம் 'உம் மீதுள்ள நறுமணத்தை மூன்று முறை கழுவுவீராக! தைக்கப்பட்ட உடைகளைக் களைவீராக! உம்முடைய ஹஜ்ஜில் செய்வது போன்றே உம்முடைய உம்ராவிலும் செய்வீராக!" என்று கூறினார்கள். (புகாரி - 1536)

இமாம் பத்ருத்தீன் அஜ்ஜர்கஸீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள், அல்குர்ஆன் வஹீயாக இறக்கப்பட்டது போல நபி ﷺ அவர்களின் சுன்னாவும் வஹீயாக இறக்கப்பட்டது என்பதற்கு இந்த ஹதீஸ் உறுதியான ஆதாரமாகும். (அல்பஹருல் முஹீத் ஃபீ உஸூலுல் ஃபிக்ஹ் 8/251)

عن أَبَي سَعِيدٍ الْخُدْرِيَّ رضى الله عنه يُحَدِّثُ أَنَّ النَّبِىَّ صلى الله عليه وسلم جَلَسَ ذَاتَ يَوْمٍ عَلَى الْمِنْبَرِ وَجَلَسْنَا حَوْلَهُ فَقَالَ إِنِّى مِمَّا أَخَافُ عَلَيْكُمْ مِنْ بَعْدِى مَا يُفْتَحُ عَلَيْكُمْ مِنْ زَهْرَةِ الدُّنْيَا وَزِينَتِهَا فَقَالَ رَجُلٌ يَا رَسُولَ اللَّهِ أَوَيَأْتِى الْخَيْرُ بِالشَّرِّ فَسَكَتَ النَّبِىُّ صلى الله عليه وسلم فَقِيلَ لَهُ مَا شَأْنُكَ تُكَلِّمُ النَّبِىَّ صلى الله عليه وسلم وَلاَ يُكَلِّمُكَ فَرَأَيْنَا أَنَّهُ يُنْزَلُ عَلَيْهِ . قَالَ فَمَسَحَ عَنْهُ الرُّحَضَاءَ فَقَالَ أَيْنَ السَّائِلُ وَكَأَنَّهُ حَمِدَهُ فَقَالَ إِنَّهُ لاَ يَأْتِى الْخَيْرُ بِالشَّرِّ ، وَإِنَّ مِمَّا يُنْبِتُ الرَّبِيعُ يَقْتُلُ أَوْ يُلِمُّ إِلاَّ .

آكِلَةَ الْخَضْرَاءِ ، أَكَلَتْ حَتَّى إِذَا امْتَدَّتْ خَاصِرَتَاهَا اسْتَقْبَلَتْ عَيْنَ الشَّمْسِ ، فَثَلَطَتْ وَبَالَتْ وَرَتَعَتْ ، وَإِنَّ هَذَا الْمَالَ خَضِرَةٌ حُلْوَةٌ ، فَنِعْمَ صَاحِبُ الْمُسْلِمِ مَا أَعْطَى مِنْهُ الْمِسْكِينَ وَالْيَتِيمَ وَابْنَ السَّبِيلِ أَوْ كَمَا قَالَ النَّبِيُّ صلى الله عليه وسلم وَإِنَّهُ مَنْ يَأْخُذُهُ بِغَيْرِ حَقِّهِ كَالَّذِي يَأْكُلُ وَلاَ يَشْبَعُ ، وَيَكُونُ شَهِيدًا عَلَيْهِ يَوْمَ الْقِيَامَةِ

அபூ ஸயீத் அல் குத்ரீ ﵁ அறிவிக்கிறார்கள்:

ஒரு நாள் நபி ﷺ அவர்கள் மிம்பரில் அமர்ந்தார்கள். நாங்களும் அவர்களைச் சுற்றி அமர்ந்தோம். அப்போதவர்கள் ‘என் வாழ்விற்குப் பின் உங்களுக்கிடையே உலக வளங்களும் அதன் கவர்ச்சிப் பொருட்களும் தாராளமாகத் திறந்து விடப்படுவதைப் பற்றியே நான் அஞ்சுகிறேன்’ எனக் கூறினார்கள். ஒருவர் ‘இறைத்தூதர் அவர்களே! (செல்வம் என்ற) நன்மை தீயதை உருவாக்குமா?’ எனக் கேட்டதும், நபி ﷺ அவர்கள் மௌனமானார்கள். உடனே அந்த நபரிடம், ‘என்ன ஆனது உம்முடைய நிலைமை? நீர் நபி ﷺ அவர்களிடம் பேசுகிறீர்; ஆனால் நபி ﷺ அவர்களோ உம்மிடம் பேசாமாலிருக்கிறார்களே!’ எனக் கேட்கப்பட்டது. நாங்கள் நபி ﷺ அவர்களுக்கு வஹீ (இறைச்செய்தி) அருளப்படுகிறது எனக் கருதினோம். அப்போது நபி ﷺ அவர்கள் வியர்வையைத் துடைத்துவிட்டு, ‘கேள்வி கேட்டவர் எங்கே?’ என அவரைப் பாராட்டுவது போன்று கேட்டார்கள்.

பிறகு, ‘நன்மையானது தீயதை உருவாக்காதுதான்; நிச்சயமாக நீர்நிலைகளின் கரைகளில் விளைகிற தாவரங்களில் சில (தம் நச்சுத் தன்மையால் அவற்றை மேய்கின்ற) கால்நடைகளைக் கொன்று விடுகின்றன. அல்லது மரணத்தின் விளிம்புக்கே (அவற்றைக்) கொண்டு போகின்றன... பசுமையான (நல்ல வகைத்) தாவரங்களைத் தின்பவற்றைத் தவிர! அவற்றைக் கால்நடைகள் வயிறு புடைக்கத் தின்று சூரிய ஒளியை முன்னோக்குகின்றன. மேலும், சாணம் போட்டு, சிறுநீர் கழித்து மீண்டும் மேய்கின்றன. (இது போன்றே உலகிலுள்ள) இச்செல்வம் பசுமையானதும் இனிமையானதும் ஆகும்.

எனவே, ஒரு முஸ்லிம் தன்செல்வத்திலிருந்து ஏழைகளுக்கும் அனாதை களுக்கும் வழிப்போக்கர்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கும்வரை

அது அவனுக்குச் சிறந்த தோழனாகும். யார் முறையின்றி அதை எடுத்துக் கொள்கிறானோ... அவன் உண்டும் வயிறு நிரம்பாதவனைப் போன்ற வனாவான். மேலும் மறுமை நாளில் அச்செல்வம் அவனுக்கு எதிராக சாட்சி சொல்லும்" எனக் கூறினார்கள். (புகாரி - 1465)

நபி ﷺ அவர்களிடம் யூதர்கள் வந்து கேட்ட கேள்விகள்:

عَنْ أَنَسٍ قَالَ سَمِعَ عَبْدُ اللَّهِ بْنُ سَلاَمٍ بِقُدُومِ رَسُولِ اللَّهِ صلى الله عليه وسلم وَهْوَ فِى أَرْضٍ يَخْتَرِفُ ، فَأَتَى النَّبِيَّ صلى الله عليه وسلم فَقَالَ إِنِّى سَائِلُكَ عَنْ ثَلاَثٍ لاَ يَعْلَمُهُنَّ إِلاَّ نَبِىٌّ فَمَا أَوَّلُ أَشْرَاطِ السَّاعَةِ وَمَا أَوَّلُ طَعَامِ أَهْلِ الْجَنَّةِ وَمَا يَنْزِعُ الْوَلَدُ إِلَى أَبِيهِ أَوْ إِلَى أُمِّهِ قَالَ « أَخْبَرَنِى بِهِنَّ جِبْرِيلُ آنِفًا »

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் மதீனாவிற்கு வந்த செய்தி கிடைத்தபோது அப்துல்லாஹ் பின் சலாம் ؓ அவர்கள் ஒரு தோட்டத்தில் பழம் பறித்துக் கொண்டிருந்தார்கள். உடனே அவர்கள் நபி ﷺ அவர்களிடம் வந்து, நான் உங்களிடம் மூன்று கேள்விகளை கேட்கப்போகிறேன் அவற்றை ஒரு நபியால் மட்டுமே அறிய முடியும் என்றார்கள். பிறகு 1, மறுமை நாளின் அடையாளங்களில் முதலாவது எது? 2, சொர்க்கவாசிகளில் முதலாவது உணவு எது? 3, குழந்தை தன் தந்தை சாயலில் அல்லது தாயின் சாயலில் இருப்பது ஏன்? என்று கேட்டார்கள். நபி அவர்கள் சற்று முன்புதான் ஜிப்ரில் ؑ அவர்கள் எனக்கு இதுபற்றி விளக்கம் அளித்தார்கள் என்றார்கள். (அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் ؓ, நூல்: புகாரி - 4480)

ஹஸ்ஸான் பின் அதிய்யா ؒ அவர்கள் கூறுகிறார்கள்: ஜிப்ரில் ؑ அவர்கள், நபி ﷺ அவர்கள் மீது அல்குர்ஆனை வஹீயாகக் கொண்டு இறங்கியது போல சுன்னாவையும் வஹீயாகக் கொண்டு இறங்கினார்கள். (நூல்: சுனன் அத்தாரமி - 599)

நபிமார்களின் கனவுகளும் வஹீயின் வகைகளில் ஒன்றாகும். எனவே நபி ﷺ அவர்கள் தன் கனவில் கண்டு கூறிய தகவல்களும், அல்லாஹ் அவர்களுக்கு இறைசெய்தியாக கொடுத்தவையாகும்.

عن سَمُرَةُ بْنُ جُنْدَبٍ رضى الله عنه عَنِ النَّبِىِّ صلى الله عليه وسلم

فِى الرُّؤْيَا قَالَ أَمَّا الَّذِى يُثْلَغُ رَأْسُهُ بِالْحَجَرِ فَإِنَّهُ يَأْخُذُ الْقُرْآنَ فَيَرْفِضُهُ وَيَنَامُ عَنِ الصَّلاَةِ الْمَكْتُوبَةِ

நபி ﷺ அவர்கள் தன் கனவில் தலை நசுக்கப்படும் அந்த நபர் அல்குர்ஆனை பெற்றிருந்தும் கடமையான தொழுகையில் அதனை ஓதாமல் உறங்கியவர் ஆவார் என்றார்கள். (அறிவிப்பாளர்: சமுரா பின் ஜுன்துப் ؓ, நூல்: புகாரி - 1143)

மேலும் அல்லாஹ் நபிமார்களுக்கு எவ்வாறு இறைசெய்தியை அறிவிக்கிறான் என்பதை பற்றி அல்குர்ஆனில் கூறுகிறான்,

وَمَا كَانَ لِبَشَرٍ أَنْ يُكَلِّمَهُ اللهُ إِلَّا وَحْيًا أَوْ مِنْ وَرَاءِ حِجَابٍ أَوْ يُرْسِلَ رَسُولًا فَيُوحِيَ بِإِذْنِهِ مَا يَشَاءُ إِنَّهُ عَلِيٌّ حَكِيمٌ (الشورى)

வஹீயின் மூலமோ, அல்லது திரைக்கு அப்பாலிருந்தோ அல்லது ஒரு தூதரை அனுப்பியோ தவிர எந்த மனிதருக்கும் அல்லாஹ் அவருடன் பேசுவது (சாத்தியம்) இல்லை. (அத்தூதர்) அவன் நாடியதை அவன் அனுமதி கொண்டு அவர் அறிவிப்பார். நிச்சயமாக அவன் மிக உயர்ந்தவன், தீர்க்கமான அறிவுடையவன். (அல்குர்ஆன் 42:51)

இம்மூன்று வழிகளிலும் இறைச்செய்தி நபி ﷺ அவர்களுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அல்லாஹ்வின் வேதமான அல்குர்ஆன் இம்மூன்று வழிகளில் மூன்றாவது வழியான வானவர்களில் இருந்து ஒரு தூதரை அனுப்பி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஜிப்ரில் ؑ அவர்கள் முழு குர்ஆனையும் இவ்வழியிலேயே நபி ﷺ அவர்களுக்கு அறிவித்துத் தந்தார்கள். ஆனால் ஹதீஸ்கள் நபி ﷺ அவர்களுக்கு இம்மூன்று வழிகளிலுமே வழங்கப்பட்டுள்ளது.

- வஹீயின் மூலம் என்பது மலக்குகளை அனுப்பாமல் அல்லாஹ் நபி ﷺ அவர்களின் உள்ளத்தில் சில எண்ணங்களை போடுவதை குறிக்கிறது.
- திரைக்கு அப்பாலிருந்து என்பது அல்லாஹ் நபி ﷺ அவர்களுடன் மிஅராஜ் பயணத்தில் பேசியதை குறிக்கிறது. மிஅராஜில் நடந்த முழுத் தகவல்களும் ஹதீஸ்களில் மட்டுமே உள்ளது.

- ஒரு தூதரை அனுப்பி என்பது, நபி ﷺ அவர்களிடம் மலக்குகள் வந்து சென்றதை குறிக்கும் சம்பவங்களாக, நபி ﷺ அவர்களிடம் ஜிப்ரில் عليه السلام அவர்கள் வந்து இஸ்லாம், ஈமான், இஹ்சான் தொடர்பான ஹதீஸை குறிப்பிடலாம். மேலும் நபி ﷺ அவர்கள் யூதர்கள் சில கேள்விகளை கேட்டபோது, இப்போதுதான் இதுபற்றிய விளக்கத்தை ஜிப்ரில் عليه السلام அவர்கள் எனக்கு அளித்தார்கள் என்ற ஹதீஸை குறிப்பிடலாம்.

இதுவரை நபி ﷺ அவர்களுக்கு ஹதீஸ்கள் வஹீயாக தரப்பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்களை அல்குர்ஆன் மற்றும் சுன்னாவிலிருந்து பார்த்தோம். அதன்மூலம் இஸ்லாத்தின் அடிப்படை ஆதாரங்களில் ஒன்றான சுன்னா அல்லாஹ்வின் புறத்திலிருந்து வஹீயாக தரப்பட்டது என்பதை எவ்வித சந்தேகத்திற்கிடமின்றி அறிந்துக் கொண்டோம்.

மேலும் நபி ﷺ அவர்கள் கூறிய ஹதீஸ்கள் வஹீயாகும் என்ற நம்பிக்கையே சரியானதாகும் என்பதை அறிவுப்பூர்வமாகவும் நிரூபிக்க முடியும்.

يَا أَيُّهَا النَّبِيُّ لِمَ تُحَرِّمُ مَا أَحَلَّ اللَّهُ لَكَ تَبْتَغِي
مَرْضَاتَ أَزْوَاجِكَ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ

நபியே! உமது மனைவியர்களின் திருப்தியை நாடி அல்லாஹ் உமக்கு ஆகுமாக்கியதை நீர் ஏன் தடை செய்துகொள்கிறீர்? அல்லாஹ் மிக்க மன்னிப்பவன் நிகரற்ற அன்புடையவன். (அல்குர்ஆன் 66:1)

இந்த வசனம் எப்போது இறங்கியது என்பது தொடர்பாக புகாரியில் வந்துள்ள ஹதீஸ்,

ஆயிஷா رضي الله عنها அறிவிக்கிறார்கள்:

நபி ﷺ அவர்கள் (தம் துணைவியார்) ஸைனப் பின்த் ஜஹ்ஷ் رضي الله عنها அவர்களிடம் (அவர்களின் அறையில் அதிக நேரம்) தங்கியிருந்து தேன் சாப்பிடுவது வழக்கம். எனவே, (இது பிடிக்காமல் நபியவர்களுடைய துணைவியரான) நானும் ஹஃப்ஸாவும் எங்களுக்குள் 'நபி ﷺ அவர்கள் (ஸைனபின் அறைக்குச் சென்றுவிட்டு) நம்மில் யாரிடம் முதலில் வந்தாலும் தங்களிடமிருந்து கருவேலம் பிசினின் துர்வாடை வருகிறதே! பிசின் சாப்பிட்டீர்களா? என்று கூறிட வேண்டும்' என்று கூடிப் பேசி முடிவு செய்து

கொண்டோம். எங்களில் ஒருவரிடம் நபி ﷺ அவர்கள் வந்தபோது முன்பு பேசிவைத்திருந்தபடி கூறினோம். அதற்கு இறைத்தூதர் ﷺ அவர்கள், '(அப்படியெல்லாம்) ஒரு குறையும் நடந்திடவில்லை. ஸைனப் பின்த் ஜஹ்ஷிடம் (அவரின் அறையில்) தேன் அருந்தினேன். (அவ்வளவுதான் சத்தியமாக) இனிமேல் ஒருபோதும் இவ்வாறு செய்யமாட்டேன்' என்று கூறினார்கள். எனவே, 'நபியே! உங்களுடைய துணைவியரின் திருப்தியை எதிர்பார்த்து அல்லாஹ் உங்களுக்கு அனுமதித்த ஒன்றை நீங்கள் ஏன் விலக்கிக் கொள்கிறீர்கள்?' என்று தொடங்கி 'நீங்கள் இருவரும் - இதற்காக அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கோரினால் (அது உங்களுக்கே நன்று)' என முடியும் (திருக்குர்ஆன் 66:1-4) வசனங்களை அல்லாஹ் அருளினான். (புகாரி - 5267)

நபி ﷺ அவர்கள் சுயமாக தன்மீது தேனை ஹராமாக்கி கொண்டதற்கே அல்லாஹ் அவர்களை எச்சரிக்கிறான். ஒரு பொருளை நபி ﷺ அவர்கள் தன்னளவில் சுயமாக ஹராமாக்கவே அனுமதியில்லை எனில், ஹதீஸ்களில் ஹராம் மற்றும் ஹலால் என வந்துள்ளதை நபி ﷺ அவர்கள் எங்கிருந்து சொல்லியிருப்பார்கள்?

நபி ﷺ அவர்கள் மார்க்கத்தின் பெயரால் கூறிய அனைத்து தகவல்களும், அது அல்குர்ஆனாக இருந்தாலும் சரியே! அல்லது ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களாக இருந்தாலும் சரியே! அவை அனைத்தும் வஹீயின் அடிப்படையில் தான் கூறினார்கள் என்பதை சிந்தனையுடையவர்கள் அறிந்து கொள்வார்கள்.

மார்க்க விவகாரங்களில் நபி ﷺ அவர்களின் இஜ்திஹாத்

நபி ﷺ அவர்கள் தனது சுய ஆய்வைக்கொண்டு மார்க்கத்தில் ஒரு விஷயத்தைக் கூறுகிறார்கள், அதற்கு எவ்வித மறுப்பும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து தெரிவிக்கப்படவில்லையென்றால், அதுவும் அல்லாஹ் வினால் அங்கீகரிக்கப்பட்டதை போன்றதாகும். நபி ﷺ அவர்களுக்கு வஹீயாக தரப்பட்டது என்ற அடிப்படையில் அடங்கும் என மார்க்க அறிஞர்கள் கூறுகிறார்கள். ஏனெனில், அது தவறானதாக இருந்திருந்தால் அல்லாஹ் அதுபற்றி அவசியம் தெரியப்படுத்தியிருப்பான். இதற்கு உதாரணமாக பத்ர் கைதிகள் தொடர்பாக நபி ﷺ அவர்கள் எடுத்த முடிவை ஆதாரமாகக் கூறலாம்,

مَا كَانَ لِنَبِيٍّ أَنْ يَكُونَ لَهُ أَسْرَى حَتَّى يُثْخِنَ فِي الْأَرْضِ تُرِيدُونَ عَرَضَ الدُّنْيَا وَاللَّهُ يُرِيدُ الْآخِرَةَ وَاللهُ عَزِيزٌ حَكِيمٌ

எந்த நபிக்கும் இரத்தத்தைப் பூமியில் ஓட்டாத வரையில் போர்க்கைதிகள் அவருக்கு இருப்பது தகுமானதல்ல. நீங்கள் இவ்வுலக பொருளை நாடுகிறீர்கள். அல்லாஹ்வோ மறுமையை நாடுகிறான். இன்னும் அல்லாஹ் மிகைத்தவன், தீர்க்கமான அறிவுடையவன். (அல்குர்ஆன் 8:67)

எனவே நபி ﷺ அவர்கள் சுய ஆய்வு செய்து கூறிய தகவல்களுக்கு மறுப்பு தெரிவிக்கப்படவில்லையென்றால், அதுவும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து நபி ﷺ அவர்களுக்கு கிடைத்த அங்கீகாரமாகவே கருதப்படும்.

நபி ﷺ அவர்களின் சுன்னாவும் வஹீயாகும் என்பதற்கான அடுக்கடுக்கான ஆதாரங்களை இதுவரையில் கண்டோம். இனி இரண்டு வஹீக்கு மத்தியில் என்ன வித்தியாசம் உள்ளது என்பதை பற்றி பார்ப்போம்.

இரண்டு வஹீக்கும் இடையில் உள்ள வித்தியாசம்

அல்குர்ஆன் மற்றும் சுன்னா இரண்டுமே வஹீயாக இருந்தாலும் இந்த இரண்டு வஹீக்கு மத்தியில் சில வித்தியாசங்கள் உள்ளன.

1. அல்குர்ஆனில் உள்ள வார்த்தைகள் அல்லாஹ்வின் வார்த்தைகளாகும். அவ்வார்த்தைகள் மாற்றப்படாமல் அருளிய வடிவில் அப்படியே பாதுகாப்பதற்கு அல்லாஹ் உத்தரவாதம் அளித்துள்ளான்.

ஹதீஸ்கள் அல்லாஹ்வினால் வஹீயாக கொடுக்கப்பட்டதாகும். அதிலுள்ள தகவல்களும், சட்டங்களும் பாதுகாக்கப்படும் என்று அல்லாஹ் உத்தரவாதம் அளித்துள்ளான். எனினும் அதிலுள்ள வார்த்தைகள் பாதுகாக்கப்படும் என்பதற்கு அல்லாஹ் உத்தரவாதம் அளிக்கவில்லை. எனவேதான், ஹதீஸ்களில் வேறு வார்த்தைகளைக்கொண்டு அறிவிப்பதற்கும் அனுமதி யளிக்கப்பட்டுள்ளது. எனினும் நபி ﷺ அவர்கள் கூறிய கருத்து மாறாமல் இருப்பது நிபந்தனையாகும். இதனையே 'ரிவாயத் பில்மஅனா' என்று ஹதீஸ்கலையில் கூறுவார்கள்.[1]

1. ஹதீஸ் குத்ஸீ எனும் ஹதீஸ்களும் நபி ﷺ அவர்களின் மற்ற ஹதீஸ்களைப் போன்றதாகும். எனினும் ஹதீஸ் குத்ஸீயில் நபி ﷺ அவர்கள், அல்லாஹ்வே கூறுகிறான் என்ற வார்த்தையைக் கூடுதலாகச் சொல்வார்கள். ஹதீஸ் குத்ஸீ அல்லாத ஹதீஸ்களில் அல்லாஹ் கூறுகிறான் என்ற வார்த்தையை நபி ﷺ அவர்கள் கூறமாட்டார்கள்.

2. அல்குர்ஆன் ஓதினால் ஒரு வார்த்தைக்கு இவ்வளவு நன்மை என்பது நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அலிஃப் லாம் மீம் என்பது ஒரு வார்த்தை அல்ல. அலிஃப் ஒரு வார்த்தை லாம் ஒரு வார்த்தை மீம் ஒரு வார்த்தை. இதில் ஒவ்வொரு வார்த்தையையும் ஓதுவதினால் பத்து நன்மைகள் கிடைக்கும் என நபி ﷺ அவர்கள் கூறினார்கள்.

ஹதீஸ்களில் ஒரு ஹதீஸை படித்தால் இவ்வளவு நன்மை என்பது நிர்ணயம் செய்யப்படவில்லை. எனினும் ஹதீஸ்களை படிப்பதினாலும், மனப்பாடம் செய்வதினாலும் நன்மை கிடைக்கும். அவ்வாறே அதனை செயல்படுத்துவதினாலும் நன்மை கிடைக்கும்.

3. அல்குர்ஆனைப் போன்ற வசனங்களை கொண்டு வருவதற்கு சவால் விடப்பட்டது.

சுன்னாவிற்கு அவ்வாறு சவால் விடப்படவில்லை.

ஹதீஸ்களும் பாதுகாக்கப்பட்டுள்ளன

ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் பாதுகாக்கப்படவில்லை என்ற தவறான நம்பிக்கையே சுன்னாவின் விஷயத்தில் வழிகேடான பாதையில் செல்வதற்கும், அதில் பல சந்தேகங்களை எழுப்புவதற்கும் அடிப்படைக் காரணமாக இருக்கிறது. அல்குர்ஆன், சுன்னாவை ஆழ்ந்து பார்த்தால் அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்டுள்ளதுபோல் சுன்னாவும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாம். மேலும் சுன்னாவும் பாதுகாப்பட்டுள்ளது என்பதில் அனைத்து அறிஞர்களும் ஏகோபித்த முடிவில் இருக்கிறார்கள்.

ஹதீஸ்கள் பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்களை இனி காண்போம்.

1. ஹதீஸ்களை அல்லாஹ்வே பாதுகாப்பதாக உத்தரவாதம் அளித்துள்ளான்

لَا تُحَرِّكْ بِهِ لِسَانَكَ لِتَعْجَلَ بِهِ (١٦) إِنَّ عَلَيْنَا جَمْعَهُ وَقُرْآنَهُ (١٧) فَإِذَا قَرَأْنَاهُ فَاتَّبِعْ قُرْآنَهُ (١٨) ثُمَّ إِنَّ عَلَيْنَا بَيَانَهُ (١٩)

நபியே வஹீ மூலம் அறிவிக்கப்படுபவை தவறிவிடுமோ என பயந்து அதற்காக நீர் அவசரப்பட்டு உமது நாவை அசைக்காதீர். (உம் உள்ளத்தில்) அதனை ஒன்று சேர்ப்பதும், (உமது நாவால்) அதனை ஓதச்செய்வதும் நிச்சயமாக நம்மீதா(ன கடமையா)கும். ஆகவே (ஜிப்ரில் மூலம்) அதனை நாம் (உமக்கு) ஓதுவோமாயின் (ஓதப்படும்) அதன் ஓதுதலை நீர் பின்தொடர்(ந்து ஓது)வீராக. பின்னர் நிச்சயமாக அதனை தெளிவுசெய்வதும் நம்மீதா(ன கடைமையா)கும். (75:16-19)

அல்குர்ஆனுக்கு தெளிவுரையாக இருக்கின்ற சுன்னா பாதுகாக்கப்பட்டாலே அல்குர்ஆனுக்கு தெளிவு கிடைக்கும். ஆகவேதான் அல்லாஹ் இந்த வசனத்தில் அல்குர்ஆனிற்கு தெளிவுரையாக இருக்கின்ற சுன்னாவை பாதுகாப்பது தம்மீதுள்ள பொறுப்பாகும் என்கிறான். ஆக அல்லாஹ் அல்குர்ஆனை பாதுகாப்பதாக உத்தரவாதம் அளித்துள்ளதைப்போல் ஹதீஸ்களையும் பாதுகாப்பதாக உத்தரவாதம் அளித்திருக்கிறான் என்பதை இவ்வசனம் நமக்கு தெரியப்படுத்துகிறது.

2. ஸஹாபாக்களில் சிலர் ஹதீஸ்களை நினைவில் வைத்தும், சிலர் எழுதி வைத்தும் பாதுகாத்துள்ளார்கள்.

ஸஹாபாக்களின் காலத்தில் எழுதுவதற்கான சாதனங்கள் குறைவாக இருந்ததால் அவர்கள் தங்களின் நினைவாற்றலையே பெரிதும் நம்பி யிருந்தார்கள். அல்குர்ஆனை இப்படித்தான் பல ஸஹாபாக்கள் மனப்பாடம் செய்திருந்தார்கள். அவ்வாறே ஹதீஸ்களையும் ஸஹாபாக்கள் மனப்பாடம் செய்திருந்தார்கள். மேலும் நபி ﷺ அவர்களும் ஹதீஸ்களை மனப்பாடம் செய்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தை ஸஹாபாக்களுக்கு ஏற்படுத்தினார்கள்.

عَنْ أَبِى الدَّرْدَاءِ قَالَ خَطَبَنَا رَسُولُ اللهِ صلى الله عليه وسلم فَقَال نَضَّرَ اللهُ امْرَأً سَمِعَ مِنَّا حَدِيثاً فَبَلَّغَهُ كَمَا سَمِعَهُ

நபி ﷺ அவர்கள் எங்களுக்கு பிரசங்கம் செய்தார்கள். அதில், எவரொருவர் நமது சொல்லை செவிமடுத்து அதனை அப்படியே பிறருக்கு எத்திவைக்கிறாரோ அவரை அல்லாஹ் செழிப்பாக்கட்டும் என்று கூறினார்கள். (அறிவிப்பாளர்: அபூதர்தா ؓ, நூல்: சுனன் அத்தாரமி - 236)

மற்றொருபுறம் நபி ﷺ அவர்கள், தான் கூறாத எந்த ஒரு பொய்யான தகவலும் தன் பெயரில் வந்துவிடக் கூடாது என்பதிலும் ஸஹாபாக்களுக்கு எச்சரிக்கை செய்தார்கள்.

عَنِ الْمُغِيرَةِ رضى الله عنه قَالَ سَمِعْتُ النَّبِىَّ صلى الله عليه وسلم يَقُولُ إِنَّ كَذِبًا عَلَىَّ لَيسَ كَكَذِبٍ عَلَى أَحَدٍ ، مَنْ كَذَبَ عَلَىَّ مُتَعَمِّدًا فَلْيَتَبَوَّأْ مَقْعَدَهُ مِنَ النَّارِ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள், என் மீது பொய்யுரைப்பது மற்றொருவர் மீது பொய்யுரைப்பது போன்றதன்று. ஏனெனில், எவர் என் மீது வேண்டுமென்றே பொய்யுரைப்பாரோ அவர் தன் இருப்பிடத்தை நரகத்தில் ஆக்கிக்கொள் ளட்டும். (அறிவிப்பாளர்: முகிரா பின் ஷுஅபா ؓ, நூல்: புகாரி - 1291)

நபி ﷺ அவர்களின் இத்தகைய எச்சரிக்கையை அறிந்த ஸஹாபாக்கள் நபி ﷺ அவர்களின் செய்திகளைக் கூறுவதில் மிகக் கவனமாக செயல்பட்டார்கள்.

நபி ﷺ அவர்களின் பெயரால் அவர்கள் கூறாத தகவல்கள் எதுவும் வந்துவிடக் கூடாது என்பதில் மிக உறுதியாக இருந்தார்கள்.

அதிகமான ஹதீஸ்களை அறிவிக்கும் ஸஹாபாக்கள்

அபூஹுரைரா ؓ அவர்கள் 5374 ஹதீஸ்களை அறிவிக்கிறார்கள். இந்த எண்ணிக்கை முழுவதையும் அவர்கள் மனப்பாடம் செய்திருந்தார்கள்.

அப்துல்லாஹ் பின் உமர் ؓ அவர்கள் 2640 ஹதீஸ்களை அறிவிக்கிறார்கள்.

அனஸ் பின் மாலிக் ؓ அவர்கள் 2284 ஹதீஸ்களை அறிவிக்கிறார்கள்.

ஆயிஷா ؓ அவர்கள் 2210 ஹதீஸ்களை அறிவிக்கிறார்கள். அந்த ஹதீஸ்களை உர்வா பின் ஜுபைர் ؓ அவர்கள் தொகுத்திருந்தார்கள்.

அப்துல்லாஹ் பின் அப்பாஸ் ؓ அவர்கள் 1610 ஹதீஸ்களை அறிவிக்கிறார்கள்.

ஜாபிர் பின் அப்துல்லாஹ் ؓ அவர்கள் 1540 ஹதீஸ்களை அறிவிக்கிறார்கள்.

அபூ சயித் அல்குத்ரி ؓ அவர்கள் 1170 ஹதீஸ்களை அறிவிக்கிறார்கள்.

3. ஸஹாபாக்களில் சிலர் ஹதீஸ்களை எழுதியும் வைத்திருந்தனர்.

ஸஹாபாக்களில் சிலர் அல்குர்ஆனை எழுதி வைத்திருந்து பாதுகாத்தது போல், நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களையும் சிலர் எழுதி வைத்துப் பாதுகாத்தார்கள்.

நபி ﷺ அவர்களின் தோழர்களிலேயே என்னைவிட அதிகமாக ஹதீஸ்களை அறிவிக்கவில்லை. அப்துல்லாஹ் பின் அம்ர் ؓ அவர்களைத் தவிர. அவர்கள் ஹதீஸ்களை எழுதிக்கொள்வார்கள். நான் மனப்பாடம் செய்து கொள்வேன். (அறிவிப்பாளர்: அபூஹுரைரா நூல்: புகாரி - 113)

அலி ؓ அவர்களிடம், நஷ்டஈடுகள், சிறைக்கைதிகளை விடுவிப்பது, காஃபிர் கொலை செய்யப்பட்டதற்காக முஸ்லிம் கொல்லப்படக் கூடாது போன்ற தகவல்களைக் கொண்ட ஏடு இருந்தது (நூல்: புகாரி - 111)

ஜாபிர் ﷺ அவர்கள், நபி ﷺ அவர்கள் ஹஜ் செய்த முறை மற்றும் ஹஜ்ஜத்துல் விதாவில் ஆற்றிய உரையையும் எழுதி இருந்தார்கள். (நூல்: முஸ்லிம்)

அபூஷாஹ் என்பவர் நபி ﷺ அவர்கள் மக்கா வெற்றிக்குப் பிறகு ஆற்றிய உரையை எழுதித் தரும்படி நபி ﷺ அவர்களிடம் கேட்டார்கள். நபி ﷺ அவர்களும் அவருக்காக எழுதித்தரும்படி ஸஹாபாக்களுக்கு கட்டளையிட்டார்கள். (புகாரி - 2434)

இவ்வாறு ஸஹாபாக்களில் சிலர் ஹதீஸ்களை எழுதி வைத்தும் பாதுகாத்தார்கள்.

ஹதீஸ்களின் எண்ணிக்கை

ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களின் உண்மையான எண்ணிக்கையை அறிந்திருப்பது ஹதீஸ்கள் தொடர்பானவற்றில் பல குழப்பங்களுக்கும், சந்தேகங்களுக்கும் தெளிவை ஏற்படுத்துவதாக இருக்கும்.

இமாம் அஹமத் பின் ஹம்பல் ﵀ அவர்கள் ஏழு இலட்சம் ஹதீஸ்களை மனப்பாடம் செய்திருந்தார்கள் என பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு விளக்கம் கூறும் அறிஞர்கள் நபி ﷺ அவர்களின் ஹதீஸ்கள் பல அறிவிப்பாளர் தொடரைக் கொண்டு வந்துள்ள அறிவிப்புகள், ஸஹாபாக்கள் மற்றும் தாபியீன்களின் செய்திகளையும் சேர்த்தே அந்த ஏழு இலட்சம் எண்ணிக்கையாகும் என்கிறார்கள்.

இமாம் புகாரி ﵀ அவர்கள் ஒரு இலட்சம் ஹதீஸ்களை மனப்பாடம் செய்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு விளக்கம் கூறும் அறிஞர்கள் ஒரு ஹதீஸ் பல அறிவிப்பாளர் தொடரை கொண்டு இடம்பெற்றிருக்கும் அத்தகைய அனைத்து அறிவிப்புகளின் எண்ணிக்கையே ஒரு இலட்சம் ஆகும் என்கிறார்கள்.

இமாம் நவவீ ﵀ அவர்கள் நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களில் ஸஹீஹான அறிவிப்பாளர் தொடரைக் கொண்டு வரும் எண்ணிக்கை பத்தாயிரம் ஆகும் என்கிறார்கள்.

ஆக நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களில் ஒரே ஹதீஸ் பல அறிவிப்பாளர் தொடரைக் கொண்டு வந்திருக்கும் அத்தகைய அறிவிப்புகளை ஒரே ஹதீஸாக ஆக்கி அவற்றின் எண்ணிக்கையை பார்த்தால் ஹதீஸ்களின் எண்ணிக்கை பத்தாயிரத்திற்கும் சற்று கூடுதலாக இருக்கும். இத்தகைய எண்ணிக்கையில் அடங்கிய ஹதீஸ்களை நினைவில் கொண்டும், எழுதியும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதை ஏற்பதற்கு சில மனங்கள் ஏன் முரண்டுபிடிக்கின்றன?

சுன்னாவை மறுப்பவர்களின் வாதமும் பதிலும் - 1

சுன்னாவை மறுப்பவர்களும், அதில் சந்தேகத்தை ஏற்படுத்துபவர்களும் நபி ﷺ அவர்களின் காலத்தில் ஹதீஸ்கள் எழுதப்படவில்லை அவர்களின் காலத்திற்குப் பிறகுதான் ஹதீஸ்கள் எழுதப்பட்டது என்ற வாதத்தை முன் வைத்து ஹதீஸ்களை மறுக்கின்றனர். இதற்குப் பிரதான ஆதாரமாக முஸ்லிம் நூலில் வந்துள்ள ஒரு ஹதீஸை குறிப்பிடுகிறார்கள்.

عَنْ أَبِى سَعِيدٍ الْخُدْرِىِّ أَنَّ رَسُولَ اللهِ صلى الله عليه وسلم قَالَ لاَ تَكْتُبُوا عَنِّى وَمَنْ كَتَبَ عَنِّى غَيْرَ الْقُرْآنِ فَلْيَمْحُهُ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: என்னிடமிருந்து குர்ஆனைத் தவிர வேறு ஏதேனும் எழுதியிருந்தால் அதனை அழித்துவிடுங்கள். (அறிவிப்பாளர்: அபூசயீத் அல்குத்ரி, நூல்: முஸ்லிம்)

இந்த ஹதீஸை ஆதாரமாக வைத்து நபி ﷺ அவர்கள் ஹதீஸ்களை எழுதுவதற்கு தடை செய்தார்கள் என்று கூறுகிறார்கள்.

நமது பதில்: ஸஹாபாக்களில் சிலர் ஹதீஸ்களை எழுதுவது தொடர்பாக வந்துள்ள செய்திகளை நாம் மேலே பார்த்தோம். இந்த ஹதீஸ் நபி ﷺ அவர்கள் எழுதுவதை தடை செய்ததைப் போன்று இருக்கிறது. இவ்வாறு ஒரு ஹதீஸ் மற்றொரு ஹதீஸோடு மேலோட்டமாக முரண்படும்போது அவற்றில் ஒன்றை ஏற்று மற்றொன்றை மறுக்காமல், அவை இரண்டையும் இணைப்பதற்கான வழிகள் இருக்கின்றனவா என்று முதலில் பார்க்க வேண்டும். அவை இரண்டையும் இணைப்பதற்கான வழிகள் இல்லாத நிலையில் ஹிஜ்ரி ஆண்டினை கணக்கிட்டு முதலில் வந்த ஹதீஸ் எது பின்னர் வந்த ஹதீஸ் எது என்பதைப் பார்க்க வேண்டும் என்பது ஹதீஸ்கலையிலுள்ள விதியாகும்.

இந்த இரு ஹதீஸ்களையும் இணைத்து முன்சென்ற மார்க்க அறிஞர்கள் சில பதில்களை தந்துள்ளார்கள்.

1. ஸஹாபாக்கள் குர்ஆனையும் அதற்கு விளக்கமாக ஹதீஸ்களையும் ஒரே

இடத்தில் எழுதினார்கள். அவ்வாறு எழுதுவதைத்தான் நபி ﷺ அவர்கள் தடை செய்தார்களே தவிர ஹதீஸ்களையே எழுதக் கூடாது என்று தடை செய்யவில்லை. ஆகவேதான் முஸ்லிமிலுள்ள ஹதீஸில் என்னிடமிருந்து குர்ஆனைத் தவிர வேறு ஏதேனும் எழுதியிருந்தால் அதனை அழித்து விடுங்கள் என்று கூறினார்கள். எழுதாதீர்கள்! என்று கூறாமல் அழித்து விடுங்கள்! என்று கூறுவதின் மூலம் இதனை அறியலாம்.

2. ஹதீஸ்களை எழுத வேண்டாம் என்பது பொதுவான சட்டமல்ல. ஆகவேதான் ஸஹாபாக்களில் சிலருக்கு ஹதீஸ்களை எழுதுவதற்கு நபி ﷺ அவர்கள் அனுமதியளித்தார்கள். (அப்துல்லாஹ் பின் அம்ர் பின் ஆஸ், அலி رضي الله عنه போன்ற ஸஹாபாக்களுக்கு நபி ﷺ அவர்கள் அனுமதியளிக்கவே தான் அவர்கள் ஹதீஸ்களை எழுதியுள்ளார்கள்)

3. வேறுசில மார்க்க அறிஞர்கள் முதலில் கூறப்பட்ட சட்டம், பின்னர் மாற்றப்பட்ட சட்டம் என்ற நாசிக் மன்சூக் என்ற விதியின் அடிப்படையில் கூறும்போது ஹதீஸ்களை எழுத வேண்டாம் என்பது முன்னிருந்த சட்டம் பிறகு சட்டம் மாற்றப்பட்டு விட்டது என்கிறார்கள். ஆகவேதான் நபி ﷺ அவர்கள் மக்கா வெற்றிக்குப் பிறகு ஆற்றிய உரையை அபூ ஷாஹ் என்ற ஸஹாபிக்கு எழுதித் தரும்படி கட்டளையிட்டுள்ளார்கள்.

இந்தப் பதில்களின் மூலம், சுன்னா நபி ﷺ அவர்களின் காலத்திலேயே எழுதப்பட்டிருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

சுன்னாவை மறுப்பவர்களின் வாதமும் பதிலும் - 2

நபி ﷺ அவர்கள் இறந்து கிட்டத்தட்ட 200 வருடங்கள் ஆன பிறகு நபி ﷺ அவர்கள் பெயரால் இட்டுக்கட்டுவது அதிகமான காலத்தில், ஹதீஸைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இமாம்கள் ஹதீஸைத் தொகுக்கும் முயற்சியை முடுக்கிவிட்டார்கள். (நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 24)

நமது பதில்: இவ்வாறான தவறான வாதங்களை எழுப்பி ஹதீஸ்கள் தொடர்பாக குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள், அல்குர்ஆன் மட்டுமே போதும் என்று ஹதீஸ்களை மறுப்பவர்களாக இருந்தால் அதில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஆனால் தங்களைத் தவ்ஹீத்வாதிகள் என்று கூறும் இவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள் என்றால் இவர்களின் இறைநம்பிக்கையை என்னவென்று சொல்வது? நபி ﷺ அவர்களின் மரணத்திற்குப் பிறகு 200 வருடங்கள் வரை ஹதீஸ்கள் தொகுக்கப்படாமல் இருந்தது என்று கூறுபவர்களை எந்தப் பட்டியலில் சேர்ப்பது?

ஹதீஸ்கள் ஸஹாபாக்களின் காலத்தில்

அப்துல்லாஹ் பின் அம்ர் ؓ அவர்கள் நபி ﷺ அவர்களிடமிருந்து கேட்ட ஹதீஸ்களை ஒரு ஏட்டில் எழுதி வைத்துக் கொண்டார்கள். அந்த ஏட்டிற்கு 'அஸ்ஸயீஃபத்து ஸாதிக்கா' (உண்மையை உரைக்கக்கூடிய ஏடு) என்ற பெயரையும் சூட்டினார்கள். அவ்வேட்டில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஹதீஸ்கள் இருந்தது. அந்த ஏட்டிலுள்ள அறிவுப்புகளை அப்துல்லாஹ் பின் அமர் பின் ஆஸ் ؓ அவர்களின் பேரக்குழந்தையான அமர் பின் ஷுஐப் அவர்கள் அறிவிக்கிறார்கள். (பார்க்க تهذيب التهذيب ص 48–49 ج 8)

உமர் ؓ அவர்கள் ஜகாத், ஸதகா தொடர்பான சட்டங்களைப் பற்றிய ஹதீஸ்களை ஒரு புத்தகத்தில் தொகுத்திருந்தார்கள். உமர் பின் அப்துல் அஜிஸ் ؒ அவர்களுக்கு அவர்களின் குடும்பத்தினரின் வழியாக உமர் ؓ அவர்களின் புத்தகம் கிடைத்தது. அந்தப் புத்தகத்தை இமாம் மாலிக் ؒ அவர்கள் படித்ததாக தனது அல்முஅத்தா நூலில் கூறுகிறார்கள். (நூல்: அல்முஅத்தா 2/285)

அலி ؓ அவர்களிடமும் ஒரு ஏடு இருந்தது அதில் நஷ்டஈடுகள், சிறைக்கைதிகளை விடுவிப்பது, காஃபிர் கொலை செய்யப்பட்டதற்காக

முஸ்லிம் கொல்லப்படக் கூடாது என்ற சட்டங்களை தெரியப்படுத்தும் ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டிருந்தது. (நூல்: புகாரி- 111)

அபூ ஹுரைரா ﵁ அவர்கள் அறிவித்த ஹதீஸ்களை முஸ்னத் அபூ ஹுரைரா என்ற பெயரில் தொகுக்கும் பணி ஸஹாபாக்களின் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஹதீஸ்களின் தொகுப்பின் ஒரு பிரதி உமர் பின் அப்துல் அஜீஸ் ﵀ அவர்களின் தந்தையும், எகிப்தின் கவர்னரான அப்துல் அஜீஸ் பின் மர்வான் அவர்களிடம் இருந்தது. பிறகு அவர்களின் மகனான உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்களுக்கு அந்நூல் கிடைத்தது. உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்கள் கஸீர் பின் முர்ரா என்ற ஹதீஸ்கலை இமாமிற்கு ஹதீஸ்களை தொகுக்கும் பணியை செய்வதற்கு ஆணையிட்ட போது அபூ ஹுரைரா ﵁ அவர்களின் அறிவிப்புகள் எங்களிடம் ஏற்கனவே தொகுக்கப்பட்டு இருப்பதால் மற்ற ஸஹாபாக்களின் ஹதீஸ்களை தொகுக்க கட்டளையிட்டார்கள். (தப்காத் இப்னு சஅத் 7/157)

ஹம்மாம் பின் முனப்பஹ் ﵀ அவர்கள், அபூ ஹுரைரா ﵁ அவர்களின் பிரபலமான மாணவராவார். அபூ ஹுரைரா ﵁ அவர்கள் அறிவிக்கும் 138 ஹதீஸ்களை ஹம்மாம் பின் முனப்பஹ் ﵀ அவர்கள் தொகுத்திருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தை சில ஆண்டுகளுக்கு முன்னர் டாக்டர் ஹமீதுல்லாஹ் ஹைதராபாதி அவர்கள் வெளியிட்டார்கள்.

ஆயிஷா ﵂ அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்களை அவர்களின் மாணவரான உர்வா பின் ஜுபைர் அவர்கள் தொகுத்தார்கள். (நூல்: தஅஜிபு தஅஜிப்)

அப்பாஸ் ﵁ அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்களை அவர்களின் மாணவரான சயீத் பின் ஜுபைர் அவர்கள் தொகுத்தார்கள். (நூல்: அல்இலல் - இமாம் திர்மிதி)

இவ்வாறு ஸஹாபாக்களும் ஸஹாபாக்களின் மாணவர்களான தாபீயின்களும் ஹதீஸ்களை எழுதவும், அவற்றை திரட்டி தொகுக்கவும் ஆரம்பித்தார்கள். ஹிஜ்ரி முதல் நூற்றாண்டின் கடைசியில் இஸ்லாமிய அரசாங்க ரீதியாக இப்பணியை செய்திட உமர் பின் அப்துல் அஜீஸ் அவர்கள் (99,ஹிஜ்ரி) 12 ஹதீஸ்கலை வல்லுநர்களை தேர்வு செய்து அவர்களின் தலைவராக முஸ்லிம் பின் ஷிஹாப் அஜ்ஜுஹரி அவர்களை தேர்ந்தெடுத்து இப்பணியை அரசாங்க ரீதியாக ஆரம்பித்தார்கள்.

மறுபுறம் மார்க்க அறிஞர்களும், ஹதீஸ்கலை வல்லுநர்களும் தங்களின்

முயற்சியைக்கொண்டு ஹதீஸ்களை தொகுக்க ஆரம்பித்தார்கள். இமாம் மாலிக் ﵀ அவர்கள் 1800க்கும் மேற்பட்ட ஹதீஸ்களை திரட்டி அல்முஅத்தா என்று அந்நூலிற்கு பெயர் சூட்டினார்கள். இந்நூலை இமாம் மாலிக் ﵀ அவர்கள் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக முயற்சி செய்து தொகுத்து ஹிஜ்ரி 130ஆம் ஆண்டு நிறைவு செய்தார்கள். இமாம் மாலிக் ﵀ அவர்கள் தொகுத்த அல்முஅத்தா என்ற நூல் இன்றும் பல மதரஸாக்களின் நூலகங்களில் இருப்பதைக் காணமுடிகிறது.

உண்மை இப்படியிருக்க 200 ஆண்டு காலம்வரை ஹதீஸ்களை பாதுகாக்கும் பணி நடைபெறாமல் இருந்தது. நபி ﷺ அவர்களின் பெயரால் இட்டுக்கட்டுவது அதிகரிக்கும்போது இமாம்கள் ஹதீஸ்களை தொகுக்கும் பணியை முடுக்கிவிட்டார்கள் என்று எப்படி ஒரு முஸ்லிம் கூறமுடியும்?

ஹதீஸ்கள் தொடர்பான அடிப்படையான நம்பிக்கையைக்கூட அறிந்திடாத இவர்களெல்லாம் ஹதீஸ்கலையைப் பற்றி பேசுகிறார்கள் என்றால் அதனை என்னவென்று சொல்வது?

ஹதீஸ்கள் 200 ஆண்டுகள் வரை பாதுகாக்கப்படாமல் இருந்தது என்று கூறுவது சுன்னா தொடர்பான நம்பிக்கையில் தவறான, வழிகேடான மற்றும் குஃப்ரான வாதமாகும்.

ஹதீஸ்கள் ஸஹாபாக்களின் உள்ளத்தில் மனப்பாடமாகவும், ஏடுகளில் பதியப்பட்டும் பாதுகாக்கப்பட்டது. தாபியீன்கள் இப்பணியில் தங்களின் வாழ்க்கையை தியாகம் செய்து ஸஹாபாக்களிடமிருந்து ஹதீஸ்களை திரட்டி தங்கள் நூல்களில் பதிவு செய்தார்கள். ஒவ்வொரு ஹதீஸையும் பெறுவதற்காக பல மைல்கள் தூரம் கடந்து சென்றார்கள்.

மேலும் அல்லாஹ் ஹதீஸ்கலை வல்லுனர்களின் மூலமாகவும் பிரத்யேகமான முறையில் ஹதீஸ்களை பாதுகாத்து உள்ளான். அவர்கள் நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களில் அவர்களின் பெயரால் மற்றவர்களின் வார்த்தைகள் வந்துவிடக் கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்து செயல்பட்டிருக்கிறார்கள். பொய்யர்கள் நபி ﷺ அவர்களின் பெயரால் இட்டுக்கட்டிய செய்திகளை அடையாளம் காட்டியுள்ளார்கள். நபி ﷺ அவர்களின் ஹதீஸ்களில் ஆதாரப்பூர்வமான செய்தி மற்றும் ஆதாரமற்ற செய்தி எது என்பதை தரம்பிரித்து காட்டியுள்ளார்கள், அதற்கான விதிகளை வகுத்து தந்திருக்கிறார்கள். அதுபற்றி இனி பார்ப்போம்.

ஸஹீஹான ஹதீஸிற்கான நிபந்தனைகள்:

ஸஹீஹ்: ஒரு ஹதீஸ், 'ஸஹீஹ்' என்ற நிலையை அடைவதற்கு 5 நிபந்தனைகள் இருக்க வேண்டும். அதில் ஏதேனும் ஒரு நிபந்தனை குறைந்தாலும் அது ஸஹீஹ் என்ற நிலையை விட்டு இறங்கி 'ளயீஃப்' அல்லது 'மவ்ளூ' என்ற நிலையைப் பெற்றுவிடும்.

அந்த 5 நிபந்தனைகள்

1. அறிவிப்பாளர்கள் நம்பகமானவர்களாக இருக்க வேண்டும்.

ஹதீஸ்களை அறிவிக்கும் அறிவிப்பாளர் நம்பகமானவராகவும், நேர்மை யானவராகவும் இருக்க வேண்டும். அறிவிப்பாளரின் நம்பகத்தன்மையில் குறை ஏற்பட்டால் அவரின் அறிவிப்பு 'ஸஹீஹ்' என்ற தரத்தில் வராது. அறிவிப்பாளரின் நம்பகத்தன்மையை அறிந்து கொள்வதற்கென பல நூல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அந்நூல்களில் அறிவிப்பாளரைப் பற்றிய முழுத் தகவலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. அறிவிப்பாளர்கள் நல்ல நினைவாற்றல் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நல்ல நினைவாற்றல் உள்ளவராக இருந்தால் அந்த அறிவிப்பாளரின் அறிவிப்பு 'ஸஹீஹ்' என்ற தரத்தில் அமையும். அறிவிப்பாளரின் நினைவாற்றல் சற்று குறைந்தால் அவரின் அறிவிப்பு 'ஹசன்' என்ற தரத்தில் அமையும். 'ஹசன்' என்ற தரத்தில் அமையும் ஹதீஸ்களும் ஆதாரமாக ஏற்கத் தக்கதாகும். அறிவிப்பாளரின் நினைவாற்றல் மிகக் குறைந்தால் அவரின் அறிவிப்பு 'ளயீஃப்' என்ற தரத்தில் அமையும்.

3. அறிவிப்பாளர்களின் சங்கிலித்தொடர் அறுபடாததாக இருக்க வேண்டும். அறிவிப்பாளர்களின் சங்கிலித்தொடர் அறுபட்டால் அந்த ஹதீஸ் 'ளயீஃப்' என்ற தரத்தில் வந்துவிடும்.

4. ஷாத்தாக இருக்க கூடாது. 'ஷாத்' என்பதன் வரைவிலக்கணம், நம்பகமான ஓர் அறிவிப்பாளர், அவரைவிட மேலான நம்பகத்தன்மையில் இருக்கும் அறிவிப்பாளரின் அறிவிப்புக்கு முரணாக அறிவித்தல். உதாரணத்திற்கு, ஒரு ஆசிரியரிடமிருந்து அறிவிக்கும் அறிவிப்பாளர்களில் ஒருவர், அவரைவிட எண்ணிக்கையில் கூடுதலாக அல்லது நினைவாற்றலில் மிகைத்திருப்பவருக்கு மாற்றமாக ஒரு செய்தியை அறிவிப்பது.

5. இல்லத் (பாதிப்பை ஏற்படுத்தும் மறைமுகமான குறை) இருக்கக் கூடாது. அறிவிப்பாளர் தொடரில் அல்லது செய்தியில் மறைமுகமான குறை ஏற்படுதல். இந்தக் குறையை ஹதீஸ்கலையில் ஆழ்ந்த ஞானம் உள்ளவர்களால் மட்டுமே அறிய முடியும்.

ஒரு ஹதீஸ் 'ஸஹீஹ்' என்ற தரத்தைப் பெறுவதற்கு இந்த ஐந்து நிபந்தனைகள் தான் உள்ளது. இது அனைத்து ஹதீஸ்கலை வல்லுநர்களிடமும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இஜ்மா ஆகும்.

அறிவிப்பாளர் தொடரை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு ஹதீஸ்கள் ஸஹீஹ் என்று கூறப்படுகிறதா?

நபி ﷺ அவர்கள் இறந்து, கிட்டத்தட்ட 200 வருடங்கள் ஆன பிறகு நபி ﷺ அவர்கள் பெயரால் இட்டுக்கட்டுவது அதிகமான காலத்தில் ஹதீஸை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இமாம்கள் ஹதீஸைத் தொகுக்கும் முயற்சியை முடுக்கிவிட்டார்கள். பெரும்பாலமான அறிஞர்கள் அறிவிப்பாளர் தொடர்களை ஆராய்ந்து பார்த்த அளவிற்கு செய்திகளை ஆராயவில்லை. (ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 24)

நமது பதில்:

- ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்படும் என்று கூறும் இவர்கள் ஹதீஸ்கலையின் விதிகளைப் பற்றிக் கூறும்போது ஹதீஸ் கலையின் பெரும்பாலான அறிஞர்கள், அறிவிப்பாளர் தொடர்களை ஆராய்ந்து பார்த்த அளவிற்கு செய்திகளை ஆராயவில்லை என்று கூறுகிறார்கள். இவர்கள் கூற்றுப்படி ஹதீஸ்கலையில் பெரும்பாலமான அறிஞர்கள் ஹதீஸ்களுக்கு அளித்த தரத்தில் தவறான தீர்ப்பையே அளித்துள்ளார்கள் என்ற கருத்து வரும்.

- இவர்களின் கூற்றுப்படி பெரும்பாலான ஹதீஸ்கலை வல்லுநர்கள் ஹதீஸ்களுக்கு தீர்ப்பளிக்கும் விஷயத்தில் சரியாக செயல்படவில்லை. அத்தகைய பெரும்பான்மையான ஹதீஸ்கலை வல்லுநர்களின் பெயர்கள் என்ன? ஹதீஸ்கலையில் சரியாக தீர்ப்பளித்த அறிஞர்களின் பெயர்கள் என்ன?

- ஹதீஸ்கலை அறிஞர்களைப் பற்றியே இவர்கள் தவறான மனநிலையில் இருக்கிறார்கள் எனும்போது, அவர்கள் தரம்பிரித்து தந்த ஹதீஸ்களை பற்றி இவர்களின் நம்பிக்கை எங்கிருந்து சரியாக இருக்கும்?

- ஹதீஸ்கலை இமாம்கள் 'சனத்' எனும் அறிவிப்பாளர் தொடரை கவனமாக பார்த்ததுபோல் 'ம(த்)தன்' எனும் செய்தியைப் பார்க்கவில்லை என்பது அடிப்படையில் தவறான வாதமாகும். ஏனெனில், ஹதீஸ்கலை வல்லுநர்கள் ஒரு ஹதீஸைக் குறிப்பிட்டு 'ஸஹீஹ்' என்றால் அந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடரான சனத், அந்த ஹதீஸின் செய்தியான 'ம(த்)தன்' ஆகிய இரண்டையும் ஆய்வு செய்து சரிபார்த்த பிறகே ஸஹீஹ் என்று கூறுவார்கள்.

ஹதீஸ்கள் ‘ஸஹீஹ்’ என்பதற்கான ஐந்து நிபந்தனைகளில் முதல் மூன்று நிபந்தனைகள் அறிவிப்பாளர் தொடரோடு மட்டுமே சம்பந்தப்பட்டதாகும். நான்காவது மற்றும் ஐந்தாவது நிபந்தனைகளான ‘ஷாத்’ மற்றும் பாதிப்பை ஏற்படுத்தும் மறைமுகமான குறை என்பது அறிவிப்பாளர் தொடரான சனத், ம(த்)தன் எனும் அறிவிக்கப்படும் செய்தி ஆகிய இரண்டிலும் ஏற்படும் என்பது ஹதீஸ்கலையோடு தொடர்புடைய அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

ஹதீஸ்கலை அறிஞர்களின் கூற்றுகள்:

السابع : قولهم هذا حديث صحيح الإسناد أو حسن الإسناد دون قولهم هذا حديث صحيح أو حديث حسن لأنه قد يقال : هذا حديث صحيح الإسناد ولا يصح لكونه شاذا أو معللا (مقدمة إبن الصلاح)

ஹதீஸ்கலை வல்லுநர்கள் ஒரு ஹதீஸை குறிப்பிட்டு இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் ‘ஸஹீஹ்’ தரத்திலுள்ளது அல்லது ‘ஹசன்’ தரத்திலுள்ளது என்று கூறுவதற்கும், இந்த ஹதீஸ் ஸஹீயாகும் அல்லது இந்த ஹதீஸ் ஹசனாகும் என்று கூறுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. இரண்டும் வெவ்வேறானது என்கிறார்கள். ஏனெனில், ஒரு ஹதீஸை குறிப்பிட்டு இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர் (மட்டும்) ‘ஸஹீஹ்’ தரத்தில் அமைந்துள்ளது என்று கூறப்படுவது, அந்த ஹதீஸின் ம(த்)தன் எனும் அறிவிக்கப்படும் செய்தியில் ‘ஷாத்’ அல்லது பாதிப்பை ஏற்படுத்தும் மறைமுகமான குறை இருக்கிறது என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது. (முகதம்மது இப்னு ஸலாஹ் பாகம்: 1, பக்கம் - 20)

قال النووي في التقريب أن صحة الإسناد لا تقتضي صحة المتن

இமாம் நவவீ ﵀ கூறுகிறார்கள்: சனத் எனும் அறிவிப்பாளர் தொடர் சரியாக இருப்பதால் அறிவிக்கப்படும் செய்தியான ம(த்)தனும் சரியானதாக தான் இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை. (அத்தக்ரீப்)

قال السخاوي قد يصح السند أو يحسن لاستجماع شروطه من الاتصال، والعدالة، والضبط دون المتن لشذوذ أو علة

இமாம் ஸகாவி ﵀ அவர்கள் கூறுகிறார்கள்: அறிவிப்பாளர் தொடர் ‘ஸஹீஹ்’

அல்லது 'ஹசன்' என்பது, அறிவிக்கப்படும் செய்தியான ம(த்)தனில் 'ஷாத்' குறை ஏற்படுத்தும் மறைமுகமான குறை என்ற இரு நிபந்தனைகளை தவிர்த்து, அறிவிப்பாளர் சங்கிலித் தொடர் நம்பகத்தன்மை மற்றும் நினைவாற்றால் ஆகிய (மூன்று) நிபந்தனைகள் ஒன்றிணைந்திருக்கின்றன என்று பொருளாகும். (ஃபத்ஹுல் முகீஸ்: 1/106)

எனவே ஹதீஸ்கலை வல்லுநர்கள் ஒரு ஹதீஸை குறிப்பிட்டு ஸஹீஹ் என்றால் அதன் அறிவிப்பாளர் தொடரான சனதும் சரியானதாக இருக்கிறது, செய்தியான ம(த்)தனும் சரியானதாக இருக்கிறது என ஏற்க வேண்டும். இது அனைத்து அறிஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

அறிவிப்பாளர் தொடர் மட்டும் சரியாக இருந்து அறிவிக்கப்படும் செய்தியில் குறை இருந்தால் அவர்கள் அந்த ஹதீஸை 'ஸஹீஹ்' என்று கூறாமல் ஸஹீஹுல் இஸ்னாத் (அறிவிப்பாளர் தொடர் மட்டுமே சரியாக இருக்கிறது, அறிவிக்கப்படும் செய்தி சரியானதாக இல்லை) என்று பிரித்துக் கூறுவார்கள்.

எனவே ஹதீஸ்கலையில் இவ்வாறு விதி இருக்கும்போது ஹதீஸ்கலை வல்லுநர்கள் அறிவிப்பாளர் தொடரை மட்டும்தான் ஆய்வு செய்தார்கள். ம(த்)தன் எனும் அறிவிக்கப்படும் செய்தியை ஆய்வு செய்யவில்லை என்று கூறுவது தவறாகும்.

இவ்விதியில் விதிவிலக்கு: ஹதீஸ்கலை வல்லுநர்களில் பிரபலமாக அறியப்பட்டவர்களில் எவரேனும் அறிவிப்பாளர் தொடர் சரியாக இருக்கிறது, ஹதீஸ் சரியாக இருக்கிறது என்ற அளவுகோலைப் பிரித்துக் கூறும் வழக்கம் இல்லாதவராக இருந்தால் அவர் ஒரு ஹதீஸைக் குறிப்பிட்டு அதன் அறிவிப்பாளர் தொடரான சனத் சரியானது என்று கூறினால், அந்த ஹதீஸிலுள்ள செய்தியையும் சரியானது என்று கூறுகிறார் என ஏற்க வேண்டும். ஹதீஸ் சரியாவதற்கான ஐந்து நிபந்தனைகளும் அதில் இருக்கிறது என்று தீர்ப்பளிக்க வேண்டும். இவ்விதியானது முன்சென்ற ஹதீஸ்கலை வல்லுநர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

غير أن المصنف المعتمد منهم إذا اقتصر على قوله: إنه صحيح الإسناد،

ولم يذكر له علة، ولم يقدح فيه، فالظاهر منه الحكم له بأنه صحيح في نفسه؛ لأن عدم العلة والقادح هو الأصل والظاهر. "

இமாம் இப்னு ஸலாஹ் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: பிரபலமான ஹதீஸ்கலை அறிஞர்களில் எவரும் ஒரு ஹதீஸை குறிப்பிட்டு அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹாக இருக்கிறது என்று கூறுவதோடு நிறுத்திக் கொள்கிறார், மற்ற எவ்வித குறைகளையும் தெரிவிக்கவில்லை எனில், அந்த ஹதீஸை 'ஸஹீஹ்' என்று அவர் தீர்ப்பளிப்பதாக ஏற்க வேண்டும். ஏனெனில், குறைகளை தெரிவிக்காமல் இருப்பது அந்த ஹதீஸ் 'ஸஹீஹ்' என்பதற்கு அசலாகும், வெளிப்படையான தீர்ப்பாகும். (முகதம்மது இப்னு ஸலாஹ் பாகம்: 1 பக்கம் - 20)

ஹதீஸ்களில் அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹாக இருக்கிறது; ஹதீஸ் ஸஹீஹாக இருக்கிறது என்று பிரித்துக் கூறும் வழிமுறை பின்வந்த ஹதீஸ்கலை வல்லுநர்கள் கூறியதாகும். முன்சென்ற ஹதீஸ்கலை வல்லுநர்களிடத்தில் இவ்வாறு பிரித்துக் கூறும் வழக்கமில்லை.

எனவே ஹதீஸ்கலை வல்லுநர்கள் அறிவிப்பாளர் தொடரை மட்டுமே ஆய்வு செய்தார்கள், ம(த்)தன் எனும் அறிவிக்கப்படும் செய்தியை பார்க்கவில்லை என்று கூறுவது அடிப்படையில் தவறான வாதமாகும், ஹதீஸ்கலை ஞானம் இல்லாதவர்களின் கூற்றாகும்.

உண்மையில் ஹதீஸ்கலை வல்லுநர்கள் சனத், ம(த்)தன் ஆகிய இரண்டையும் ஆய்வு செய்த பிறகே 'ஸஹீஹ், ளயீஃப்' என்று பிரித்துக் கூறுவார்கள்.

முக்கியத் தகவல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? என்ற நூலில் எந்த ஹதீஸ்களை இவர்கள் விமர்ச்சிக்கின்றார்களோ, அத்தகைய ஹதீஸ்களை எந்த ஹதீஸ்கலை வல்லுநரும் அறிவிப்பாளர் தொடர் மட்டுமே சரியாக இருக்கிறது, அறிவிக்கப்படும் செய்தியான ம(த்)தனில் குறை இருக்கிறது என்று கூறவில்லை. மாறாக அந்த ஹதீஸ்களை இந்த இமாம்களும் ஸஹீஹானவை எனத் தீர்ப்பளித்துள்ளார்கள்.

ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்பட்டால் அந்த ஹதீஸ்களை ஏற்கக் கூடாது என்ற விதி ஹதீஸ்கலையில் உண்டா?

நாம் மேலே குறிப்பிட்ட ஐந்து நிபந்தனைகளை தவிர்த்து வேறு எந்த நிபந்தனையும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களுக்கு கூறப்படவில்லை. மேலும் இந்த ஐந்து நிபந்தனைகளும் ஒரு சேர இருக்கும் நிலையிலேயே அந்த ஹதீஸ் ஸஹீஹ் என்ற நிலையை அடையும். இவ்வாறு ஸஹீஹ் என்ற நிலையை பெற்ற ஒரு ஹதீஸை ஆறாவது நிபந்தனையாக அல்குர்ஆனோடு முரண்படுகிறதா என்று பார்க்க வேண்டும் என்று கூறுவது ஹதீஸ்கலையில் இல்லாத விதியாகும்.

அல்குர்ஆன், ஹதீஸ்கள் ஆகிய இரண்டுமே வஹீயாக இருக்கிறது, இரண்டுமே பாதுகாக்ககப்பட்டிருக்கிறது என்பதை பற்றி நாம் மேலே பார்த்தோம். இந்நிலையில் ஒரு வஹீ மற்றொரு வஹீயோடு எப்படி முரண்படும்? ஒரு வஹீ மற்றொரு வஹீயோடு முரண்படுகிறதா என்று பார்ப்பதற்கான அவசியம் என்ன?

ஹதீஸ்கலை வல்லுநர்கள், இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களை அறிந்து கொள்வதற்கான அடையாளங்கள் பலவற்றை தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அதில் ஒன்றாக அச்செய்தி அல்குர்ஆனுக்கு முரண்படக் கூடியதாக இருக்கும் என்று கூறுகிறார்கள்.

இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களுக்காக கூறப்பட்ட இந்த விதியானதை ஸஹீஹான ஹதீஸ்களுக்கும் இருக்கிறது என்று தவறாக விளங்கியதே இவர்கள் செய்த அடிப்படை தவறாகும். ஆகவே ஹதீஸ்கலை தொடர்பான விதியை முறையாக கற்பதே இவர்களின் குழப்பத்திற்கு தெளிவான தீர்வாகும்.

ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்படுமா? என்ற தங்களின் நூலில் சில ஆதாரங்களை சுட்டிக்காட்டி ஹதீஸ்கலையில் இப்படி ஒரு விதி இருப்பதாக நிரூபிக்க முயற்சி செய்திருக்கிறார்கள். அத்தகைய ஆதாரங்களையும் அதற்கான பதிலையும் இனி காண்போம்.

خبر الواحد إذا تكاملت شروط صحته هل يجب عرضه على الكتاب

قال الشافعي رضي الله عنه لا يجب لأنه لا تتكامل شروطه إلا وهو غير مخالف للكتاب

(அவர்களின் தமிழாக்கம்)

1. ஒரு ஹதீஸ் சரியாவதற்கான நிபந்தனைகள் முழுமை பெற்றுவிட்டால் அதைக் குர்ஆனுடன் ஒப்பிட்டு பார்ப்பது கட்டாயமா? என்று ஷாஃபி இமாமிடத்தில் வினவப்பட்டது. இதற்கு இமாம் ஷாஃபி பதிலளிக்கையில், கட்டாயமில்லை. ஏனென்றால், அந்த ஹதீஸ் குர்ஆனுக்கு முரண்படாமல் இருந்தால்தான் அதன் நிபந்தனைகள் முழுமையடையும் என்று கூறினார்கள். நூல்: அல்மஹ்சூல். பாகம் 4 பக்கம் 438) (நூல் ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 16

சரியான தமிழாக்கம்

ஒரு அறிவிப்பாளர் அறிவிக்கும் செய்தி சரியாவதற்கான நிபந்தனைகள் முழுமை பெற்றுவிட்டால் அதனை அல்குர்ஆனுடன் ஒப்பிட்டு பார்ப்பது அவசியமா? என இமாம் ஷாஃபியிடம் கேட்கப்பட்டது. இமாம் ஷாஃபி அவர்கள் அவசியமில்லை என்றார்கள். ஏனெனில், அந்த செய்தி அல்குர்ஆனுக்கு முரண்படாமல் இருந்தால்தான் அதன் நிபந்தனைகள் முழுமை பெறும் என்றார்கள். (அல்மஹ்சூல்)

நமது பதில்:

- இமாம் ஷாஃபி ﵀ அவர்களிடம் ஒரு ஹதீஸ் என்று பொதுவாக கேட்கப்படாமல் ஹதீஸ்களில் ஒரு வகையான ஒரு அறிவிப்பாளரைக் கொண்டு வருகின்ற செய்தி என்றுதான் கேட்கப்பட்டது. ஏனெனில் ஹதீஸில் முதவாதிர் மற்றும் ஆஹாத் என்று இருவகை இருக்கிறது. ஆஹாத் முதவாதிர் தரத்தை அடையாத அனைத்து ஹதீஸ்களும் ஆஹாத் ஆகும். ஆஹாத் தரத்தில் இருக்கும் ஹதீஸ்களின் அறிவிப்பாளார்களின் எண்ணிக்கை ஒன்று, இரண்டு அல்லது மூன்றாக மட்டுமே இருக்கும். அந்த எண்ணிக்கையைவிடக் கூடுதலாகாது. ஒரு அறிவிப்பாளர் அறிவிக்கும் செய்தி என்று தமிழாக்கம் செய்யாமல் ஒரு ஹதீஸ் என்று பிழையான தமிழாக்கம் செய்து ஒட்டுமொத்த ஹதீஸ்களையும் குறிக்கிறது என்ற நிலையை உருவாக்குவது தவறாகும்.

- இந்த செய்தியை பக்ருத்தீன் அர்ராஜிக்கு முன்பு வேறு எவரும் இமாம் ஷாஃபி கூறியதாக கூறவில்லை. அர்ராஜி அவர்கள் அறிவிப்பாளர் தொடரையும் கூறவில்லை. இமாம் ஷாஃபியிடம் கேட்கப்பட்டபோது பக்ருத்தீன் அர்ராஜி பக்கத்தில் இருந்தார்களா என்றால்? அதற்கும் வாய்ப்பில்லை. ஏனெனில் இமாம் ஷாஃபி, ஹிஜ்ரி 204இல் மரணித்தார்கள் - அர்ராஜி ஹிஜ்ரி 606இல் மரணித்தார்கள். இந்த இடைப்பட்ட காலத்திற்கான அறிவிப்பாளர் தொடரும் இல்லை. இதுவே இந்த செய்தி ஆதாரமற்றது என்பதற்கு போதுமான சான்றாகும்.

- இந்த செய்தியை ஒரு வாதத்திற்கு ஆதாரப்பூர்வமானது என ஏற்றுக் கொண்டாலும் இமாம் ஷாஃபி ﵀ அவர்கள் அளித்த பதில் நமக்கு சாதகமாகவும், இவர்களுக்கு எதிராகவும் தான் இருக்கிறது. ஏனெனில் ஒரு ஹதீஸ் சரியானதென்றால் அது அல்குர்ஆனுக்கு முரண்படவே படாது என்பது பற்றியே இமாம் ஷாஃபி அவர்கள் இங்கு கூறுகிறார்கள்.

2. *ஒரு செய்தி அல்லாஹ்வின் வேதத்திற்கு முரணாக இருந்தால் அதனை செயல்படுத்தக் கூடாது. தஃப்சீர் அல்குர்துபி பாகம்: 12 பக்கம்: 213 (நூல் ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 16)*

நமது பதில்:

- இமாம் குர்துபி தஃப்சீர் நூலில் கூறிய முழு தகவலையும் குறிப்பிடாமல் தங்களுக்கு தேவையானதை மட்டும் குறிப்பிட்டுவிட்டு அதற்கு முன்பின் வாசகங்களை கூறாமல் விட்டது இருட்டடிப்பு வேலையாகும். வழிகேட்டில் இருப்பவர்கள்தான் இவ்வாறான இருட்டடிப்பு வேலை யைச் செய்வார்கள்.

- இங்கு இமாம் குர்துபி ﵀ அவர்கள் அல்குர்ஆனுக்கு முரணாக ஹதீஸ் இருந்தால், அதனை மறுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. மாறாக அதனை செயல்படுத்தக் கூடாது என்றுதான் சொல்கிறார்கள்.

மறுப்பதற்கும் - செயல்படுத்தக் கூடாது என்பதற்கும் மத்தியில் பெரும் வித்தியாசம் உள்ளது. ஏனெனில் செயல்படுத்தக் கூடாது என்பதற்கான காரணத்தை இமாம் குர்துபி அவர்கள் கூறும் போது,

1. அந்த ஹதீஸின் சட்டம் முன்பிருந்த சட்டமாகும். அது மாற்றப்பட்டு விட்டது.

2. அந்த ஹதீஸிற்கு நேரடியான பொருளை தராமல் மாற்று பொருளை தர வேண்டும் என்று கூறுகிறார்கள்.

இங்கு இமாம் குர்துபி ﷺ அவர்கள் என்ன கூற வருகிறார்கள் என்பதை அவர்கள் கூறிய இத்தகவலுக்கு முன்பின் வாசகத்தை படித்தாலே புரிந்துவிடும். அல்குர்ஆனுக்கு ஹதீஸ்கள் முரண்பட்டால் அதனை மறுக்க வேண்டும், நிராகரித்திட வேண்டும் என்பதற்கும், இமாம் குர்துபி அவர்களின் கூற்றிற்கும் கடுகளவும் சம்பந்தமில்லை.

3. இமாம் சூயூத்தியின் கூற்று:

இட்டுக்கட்டப்பட்ட செய்தியை அறிந்துகொள்வதற்கான அடையாளங்களில் ஒன்று: உறுதியான அல்குர்ஆனிற்கு எதிராக அந்தச் செய்தி இருக்கும். தத்ரிபுர்ராவி பாகம்: 1 பக்கம்-176 (நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 16)

நமது பதில்:

- ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்பட்டால் அதனை மறுக்க வேண்டும் என்பது ஹதீஸ்கலையிலுள்ள விதியாகும் என்று கூறுகின்ற இவர்கள் அதற்கு ஆதாரமாக இமாம் சூயூத்தியின் கூற்றை சமர்ப்பிக்கிறார்கள். இங்கு இமாம் சூயுத்தி அவர்கள் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களின் விதியை பற்றி கூறுகிறார்கள்.
- இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் என்றால் அதன் அறிவிப்பாளர் தொடரில் நம்பகமானவர்கள் இல்லாமல் பொய்யர்கள் இருப்பார்கள். அத்தகைய பொய் பேசும் அறிவிப்பாளர் தொடருடன் வரும் இட்டுக்கட்டுப்பட்ட ஹதீஸைப் பற்றியே இமாம் சூயூத்தி அவர்கள் கூறுகிறார்கள். ஹதீஸ்கலையில் இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களை அறிந்துகொள்வதற்கு அடையாளமாக அந்த ஹதீஸ், அல்குர்ஆனிற்கு முரணாக இருக்கும் என்று ஹதீஸ்கலை இமாம்கள் கூறியிருக்கிறார்கள்.
- ஸஹீஹான அறிவிப்பாளர் தொடர் என்றால் அதில் எந்த பொய்யான அறிவிப்பாளரும் இடம்பெறமாட்டார். ஸஹீஹான ஹதீஸில் பொய்யான அறிவிப்பாளர் என்ன? பலவீனமான அறிவிப்பாளர்கூட இடம்பெற மாட்டார். இந்த வித்தியாசத்தைக்கூட அறியாமல் இதனை ஆதாரம் என்று கூறுகிறார்கள் என்றால் இவர்கள் என்ன சொல்ல வருகிறார்கள்?

ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்பட்டால் அதுவும் இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும் என்று சொல்ல வருகிறார்களா? இவ்வாறு நாங்கள் சொல்லவில்லை என்று இவர்கள் பின்வாங்க முடியாது. ஏனெனில், இவர்கள் இமாம் சுயூத்தியின் கூற்றை ஆதாரமாக காட்டியதை வைத்தே இவர்கள் ஸஹீஹான ஹதீஸ் அல்குர்ஆனுக்கு முரண்பட்டால் அது இட்டுக்கட்டப்பட்ட செய்தியாகும் என்று கூறுகின்ற நிலையில்தான் இருக்கிறார்கள் என்பதை எவ்வித சந்தேகத்திற்கிடமின்றி அறியலாம்.

- இவர்கள் கூறுவதுபோல் ஸஹீஹான அறிவிப்பாளர் தொடரைக் கொண்டுள்ள ஹதீஸ்களை இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் என்பது அந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர்களை பொய்யர்கள் என்று கூறுவதாகும். ஒரு ஹதீஸின் அறிவிப்பாளரை குறித்து பொய்யர் என்பது, அவர் அறிவிக்கும் அனைத்து ஹதீஸ்களும் இட்டுக்கட்டப்பட்டது என்று கூறுவதாகும். அந்த அறிவிப்பாளர் அறிவிக்கும் ஹதீஸ்கள் ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் இருந்தாலும் சரியே! அவை அனைத்தும் இட்டுக்கப்பட்டதாகும்.

உதாரணத்திற்கு, ஹிஷாம் என்ற அறிவிப்பாளர் சூனியம் தொடர்பான ஹதீஸ்களை அறிவிக்கிறார். சூனியம் தொடர்பான ஹதீஸ் அல்குர்ஆனுக்கு முரண்படுகிறது என்ற இவர்களின் வாதப்படி அந்த ஹதீஸ் இட்டுக்கட்டப் பட்டதாக ஆகிவிட்டது. அந்த ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டது என்றால் அதிலுள்ள அறிவிப்பாளரான ஹிஷாம் என்பவர் பொய்யர் ஆவார். இந்த ஹிஷாம் என்ற அறிவிப்பாளர் சூனியம் தொடர்பான ஹதீஸை தவிர்த்து புகாரி, முஸ்லிமில் இருநூறுக்கும் மேற்பட்ட ஹதீஸ்களை தொழுகை, நோன்பு போன்ற பாடங்களில் அறிவிக்கிறார். அந்த இருநூறு ஹதீஸ்களும் இவர்களின் வாதப்படி இட்டுக்கட்டப்பட்டதாகி விடும். அந்த ஹதீஸ்களையும் நிராகரித்திட வேண்டும்.

இவ்வாறாக இருபது ஸஹீஹான ஹதீஸ்களை குறிப்பிட்டு அல்குர்ஆனிற்கு முரண்படுகிறது என்றால், இவர்களின் வாதப்படி அந்த இருபது ஹதீஸ்களும் இட்டுக்கட்டபட்டதாக ஆகிவிடுகிறது. எனவே அதிலுள்ள இருபது அறிவிப்பாளர்கள் பொய்யர்களாக ஆகிவிடுவார்கள். அவர்கள் அறிவிக்கும் மற்ற ஆதாரப்பூர்வமான ஹதீஸ்கள் அனைத்தும் இட்டுக்கட்டப்பட்டதாக ஆகிவிடும். ஆக இருபது ஹதீஸ்களை அல்குர்ஆனிற்கு முரணாக

இருக்கிறது என்பது இரண்டாயிரம் ஹதீஸ்களை அல்குர்ஆனிற்கு முரணாக இருக்கிறது என்று கூறுவதற்கு சமமாகும்.

இதிலிருந்து ஹதீஸ்கள் பற்றிய இவர்களின் நிலைப்பாடு எவ்வளவு விபரீதமானது என்பதையும் ஹதீஸ்கள் விஷயத்தில் இவர்களின் நிலைப்பாடு தெளிவான வழிகேடு என்பதையும் சந்தேகத்திற்கிடமின்றி அறியலாம். இவ்வாறு ஹதீஸ்களை நிராகரிக்கும் போக்கு குர்ஆன் மட்டுமே போதும் என்ற நிலையைத்தான் கடைசியில் ஏற்படுத்தும். அல்லாஹ் நம்மை காப்பானாக!

الحديث الصحيح ما سلم لفظه من ركاكة ومعناه من مخالفة آية أو خبر متواتر أو إجماع وكان رواية عدل وفي مقابله السقيم (التعريفات للجرجاني - ١/ ١١٣)

4. ஸஹீஹான ஹதீஸ் என்பதில் மட்டகரமான வார்த்தைகள் இருக்காது. அதன் பொருள் அல்குர்ஆன் வசனத்திற்கு, முதவாதிர் செய்திக்கு மற்றும் இஜ்மாவிற்கு முரண்படாமல் இருக்கும். அதில் நம்பகமான அறிவிப்பாளர் இருப்பார். இந்த ஸஹீஹான ஹதீஸிற்கு எதிரானவை பலவீனமான ஹதீஸ்கள் ஆகும். (நூல்: அத்தஃரிஃபாத் லில்ஜுர்ஜானி 1/113)

நமது பதில்:

1. அதன் பொருள் அல்குர்ஆன் வசனத்திற்கு முரண்படாமல் இருக்க வேண்டும் என்பதுவரை மட்டுமே தங்கள் நூலான ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? என்பதில் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் நாம் முழுமையாக மொழிபெயர்த்துள்ளோம். அதில் அல்குர்ஆனிற்கு முரண்படாமல் இருக்க வேண்டும். அவ்வாறே இஜ்மாவிற்கும் முரண்படாமல் இருக்க வேண்டும் என்று உள்ளது. முழுமையாக மொழியாக்கம் செய்யாமல் விட்டதின் இரகசியம் என்ன? அதில் இஜ்மா என்ற வார்த்தை இருக்கிறது என்ற அலர்ஜியினாலா? இமாம் ஜுர்ஜானி கூறும் இஜ்மாவை இவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

2. இமாம் ஜுர்ஜானி அவர்கள் இங்கு இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களின் அளவுகோளான மட்டகரமான வார்த்தை, அல்குர்ஆனுக்கு முரண்படுவது,

முதவாதிர் செய்தி, இஜ்மாவிற்கு முரண்படுவது போன்ற அடையாளங்கள் ஸஹீஹான ஹதீஸ்களுக்கு இருக்காது என்று கூறுகிறார்கள். அதனைத்தான் நாங்களும் கூறுகிறோம் ஒரு ஹதீஸ் ஸஹீஹ் என்றால் அது ஒருக்காலும் அல்குர்ஆனுக்கு முரண்படாது.

3. அதன் பொருள் அல்குர்ஆன் வசனத்திற்கு முரண்படாமல் இருக்கும் என்பதை எவரின் ஆய்வை அடிப்படையாக வைத்து ஏற்பது? ஒருவன் தன்னை சிந்தனையாளர் என்று கூறிக்கொண்டு பெண்கள் தொடர்பான சில ஹதீஸ்களை அல்குர்ஆன், அறிவிற்கு முரண்படுகிறது என்று மறுக்கிறான். மற்றொருவன் தன்னை அறிவியல் கண்டுபிடிப்புகளை அறிந்தவன் என்ற அடிப்படையில் சில ஹதீஸ்களை மறுக்கிறான். இன்னொருவன் அல்குர்ஆன் மட்டுமே போதும் என்ற நிலையில் இருந்து சில ஹதீஸ்களை அல்குர்ஆனிற்கு முரணாக இருக்கிறது என்று மறுக்கிறான். ஆக இவ்விஷயங்களில் எவரின் ஆய்வை அடிப்படையாக ஏற்பது?

قال علي وقال محمد بن عبد الله بن مسرة الحديث ثلاثة أقسام فحديث موافق لما في القرآن فالأخذ به فرض وحديث زائد على ما في القرآن فهو مضاف إلى ما في القرآن والأخذ به فرض وحديث مخالف لما في القرآن فهو مطرح

قال علي بن أحمد لا سبيل إلى وجود خبر صحيح مخالف لما في القرآن أصلا وكل خبر شريعة فهو إما مضاف إلى ما في القرآن ومعطوف عليه ومفسر لجملته وإما مستثنى منه لجملته ولا سبيل إلى وجه ثالث

5. முஹம்மத் பின் அப்துல்லாஹ் கூறுகிறார்கள், ஹதீஸ்கள் மூன்று வகையாகும்:

1. அல்குர்ஆனுக்கு ஒத்திருக்கின்ற ஹதீஸ். இதனை பற்றிப்பிடிப்பது அவசியமாகும். 2. அல்குர்ஆனில் உள்ளதைவிட கூடுதலான தகவல்களை தருகின்ற ஹதீஸ். அல்குர்ஆனோடு இந்த அதிகமானதையும் சேர்த்து

பற்றிப்பிடிப்பது அவசியமானதாகும். 3. அல்குர்ஆனுக்கு முரணாக இருக்கும் ஹதீஸ். இதனை விட்டுவிட வேண்டும்.

(இதுவரையே அவர்கள் தங்கள் நூலான ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? என்பதில் மொழிபெயர்த்துள்ளார்கள். இமாம் இப்னு ஹஸ்ம் தொடர்ந்து தன் நூலில் முஹம்மத் பின் அப்துல்லாஹ் அவர்களின் கூற்றை பதிவு செய்துவிட்டு கூறுகிறார்கள்,

ஒரு ஸஹீஹான ஹதீஸ் அல்குர்ஆனிற்கு முரணாக இருப்பதற்கு எந்த வழியும் இல்லை. நபி அவர்களின் ஒவ்வொரு செய்தியும் அல்குர்ஆனில் இருப்பதை விட கூடுதலான தகவலை தருகின்றதாகவும், அல்குர்ஆனுடன் இணைந்ததாகவும், அல்குர்ஆனிலுள்ள ஏதேனும் ஒரு வாக்கியத்திற்கு விளக்கம் அளிக்கக்கூடியதாகவும் இருக்கும். அல்லது ஏதேனும் ஒரு வாக்கியத்திலிருந்து பிரித்து காட்டக்கூடியதாகவும் இருக்கும். இந்த இரண்டைத் தவிர மூன்றாவது காரணம் என்று ஒன்றில்லை.

இமாம் இப்னு ஹஸ்ம் என்ன கூற வருகிறார்கள் என்பதைக்கூட அறியாமல், அவர்களின் கூற்றை பதிவு செய்கின்றார்கள் என்றால் இவர்களை என்னவென்று சொல்வது.

இமாம் இப்னு ஹஸ்ம் அவர்களும் நாம் கூறுவதுபோலவே ஸஹீஹான ஹதீஸ் அல்குர்ஆனுக்கு முரணாக இருக்காது என்பதை பற்றியே கூறுகிறார்கள்.

ஸஹீஹான ஹதீஸ் அல்குர்ஆன் வசனத்திற்கு முரண்படவே படாது என்பதே ஹதீஸ்கலை அறிஞர்களின் நிலைப்பாடாகும். சில ஹதீஸ்கள் மேலோட்டமாக முரண்படுவதைப்போல் இருக்கும். எனினும், மார்க்க அறிஞர்கள் அவ்வாறான ஹதீஸ்களையும் அல்குர்ஆன் வசனத்தையும் இணைத்து பொருள் கூறியுள்ளார்கள். அதற்கென சில நூல்களையும் எழுதியுள்ளார்கள்.

ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனோடு முரண்படுகிறதா என்று பார்க்க வேண்டும் என்று கூறுவதற்கு ஹதீஸ்கலையில் எந்த ஒரு விதியும் இல்லை. இவ்வாறு ஒரு விதி இருப்பதாக ஹதீஸ்கலையின் எந்த அறிஞரும் கூறவில்லை. மேலும் இவ்வாறு ஒரு விதி இருக்கவும் முடியாது. ஏனெனில் அல்குர்ஆனுக்கு முரண்படாமல் இருந்தால்தான் அது ஸஹீஹான ஹதீஸாக

இருக்க முடியும். ஸஹீஹான ஹதீஸ் என்று தீர்ப்பு வழங்கப்பட்டால் அது அல்குர்ஆனுக்கு முரண்படவே படாது. ஹதீஸ்கலையை முறையாக கற்காமல் சுயமாக படித்ததின் விளைவே இவர்கள் ஹதீஸ் தொடர்பான நம்பிக்கையில் தவறாக இருப்பதற்கு அடிப்படையான காரணமாகும். எனவே ஹதீஸ்கலையை முறையாக பயில்வதற்கு முயற்சிக்கவும். மேலும் நாங்கள்தான் தமிழகத்தில் ஹதீஸ்கலையை அறிந்தவர்கள் என்று மக்களிடம் விளையாட்டாக கூறிவருவதையும் தவிர்த்துக் கொள்ளவும்!

உமர் ﷺ அவர்கள் ஃபாத்திமா பின்த் கைஸின் ஹதீஸை மறுத்தார்களா?

உமர் ﷺ அவர்கள் ஒரு பெண்ணின் சொல்லுக்காக நாம் அல்லாஹ்வின் வேதத்தையும், நபியின் வழிமுறையையும் கைவிட மாட்டோம். ஃபாத்திமா பின்த் கைஸ் நினைவில் வைத்துள்ளாரா? அல்லது மறந்து விட்டாரா என்று நமக்குத் தெரியவில்லை. மூன்று தலாக் சொல்லப்பட்ட பெண்ணுக்கு உறைவிடமும் ஜீவனாம்சமும் உண்டு. (முஸ்லிம்)

என் கணவர் அபூஅம்ர் பின் ஹஃப்ஸ் அவர்கள் என்னை (மூன்றாவதாக) ஒட்டுமொத்தமாக தலாக் சொல்லிவிட்டார். அப்போது அவர் வெளியூரில் இருந்தார். பின்னர் அவருடைய பிரதிநிதி தொலி நீக்கப்படாத சிறிதளவு கோதுமையை எனக்கு அனுப்பிவைத்தார். அதைக்கண்டு நான் எரிச்சலடைந்தேன். அதற்கு அந்தப் பிரதிநிதி அல்லாஹ்வின் மீதாணையாக! நாங்கள் உனக்கு (ஜீவனாம்சம், தங்கும்வசதி) எதையும் தர வேண்டியதில்லை இது ஒரு உதவியாக தரப்பட்டதுதான் என்று கூறினார் எனவே நான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடம் வந்து நடந்ததை தெரிவித்தேன். அப்போது அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களும், அவர் உனக்கு (ஜீவனாம்சம், தங்கும் வசதி) எதையும் தரவேண்டியதில்லை என்று கூறினார்கள். (முஸ்லிம் - 2953)

இந்த ஹதீஸ்களை வைத்து உமர் ﷺ அவர்கள்கூட எங்களைப் போன்று அல்குர்ஆனிற்கு முரணாக ஹதீஸ் இருந்தால் அதனை ஏற்க மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்கிறார்கள். (நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா. பக்கம் - 16)

நமது பதில்:

அரபியில் ஒரு பழமொழி சொல்வார்கள்,

كلمة حق اريد بها الباطل

சத்தியமான வார்த்தையைக்கொண்டு அசத்தியத்தை நாடுவது. அதைப் போன்றே இவர்கள் தங்களின் தவறான நம்பிக்கையை சரியான நம்பிக்கை போன்று காண்பிப்பதற்காக உமர் ﷺ அவர்களின் கூற்றை ஆதாரமாகக் காட்டுகிறார்கள்.

ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்பட்டால் அந்த ஹதீஸை மறுக்க வேண்டும் என்பதை உமர் ؓ அவர்களும் செயல்படுத்தினார்கள் என்றால், இறந்தவருக்காக அழுவதால் வேதனை செய்யப்படும் என்ற ஹதீஸ் ஒருவரின் பாவச் சுமையை மற்றவர் சுமக்கமாட்டார் என்ற குர்ஆன் வசனத்திற்கு முரணாக இருக்கிறது என்று அந்த ஹதீஸை அவர்கள் ஏன் மறுக்கவில்லை? அல்குர்ஆனுக்கு முரணாக இருக்கிறது என்று ஏன் கருதவில்லை? உமர் ؓ அவர்கள் ஒருவரின் பாவச் சுமையை மற்றவர் சுமக்கமாட்டார் என்ற அல்குர்ஆன் வசனத்தை அறியாமல் இருந்தார்களா? அல்லது அந்த வசனத்தின் பொருளை புரியாமல் இருந்தார்களா?

உண்மையில் உமர் ؓ அவர்கள் இவர்கள் கூறுவதுபோல் ஸஹீஹான ஹதீஸாக இருந்தாலும் அல்குர்ஆனுக்கு முரண்பட்டால், அந்த ஹதீஸை ஏற்கக் கூடாது என்று கூறவில்லை. உமர் ؓ அவர்கள் ஏன் இப்படி கூறினார்கள் என்ற முழு விபரத்தையும் அறிந்தால் இந்த பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றிடலாம்.

உமர் ؓ அவர்கள், ஒரு பெண்ணின் சொல்லுக்காக நாம் அல்லாஹ்வின் வேதத்தையும், நபியின் வழிமுறையையும் கைவிட மாட்டோம் என்று ஏன் கூறினார்கள்.

இமாம் தாருகுத்னி அவர்கள் கூறுகிறார்கள்: பலமான அறிவிப்பாளர்கள் பலர் இந்த ஹதீஸை அஹமஷ், இப்ராஹீம், அல்அஸ்வத் வழியாக அறிவிக்கிறார்கள். அவர்களின் அறிவிப்பில் (وسنة نبينا) என்ற வாசகம் இடம்பெறவில்லை. அபுஹுமைத் என்ற அறிவிப்பாளர் அம்மார் பின் ஜுரைக், அபு இஸ்ஹாக், அல்அஸ்வத் வழியாக அறிவிக்கும் ஹதீஸில் மட்டுமே (நமது தூதரின் சுன்னாவில்) என்ற வாசகம் இடம்பெற்றுள்ளது. மேலும் யஹ்யா பின் ஆதம் இதே ஹதீஸை அம்மார் பின் ஜுரைக் வழியாக அறிவிக்கிறார்கள். ஆனால் அந்த அறிவிப்பில் (وسنة نبينا) என்ற வாசகம் இடம்பெறவில்லை. யஹ்யா பின் ஆதம் அபூ ஹுமைதைவிட நினைவாற்றலில் உறுதியானவரும், அம்மார் பின் ஜுரைக்கிடமிருந்து ஹதீஸ்களை அறிவிக்கும் மாணவர்களில் மிக உறுதியானவரும் ஆவார். (நூல்: அல்இலல் லில் தாருகுத்னீ, 2/141)

உமர் ؓ அவர்கள் கூறுவதாக வந்துள்ள ஹதீஸில், 'நமது நபியின் வழிமுறையை' என்ற வாசகம் 'ஷாத்' என்ற வகையைச் சார்ந்ததாகும். இதனையே ஹாபிழ் இப்னு ஹஜர் அல்அஸ்கலானி ؒ அவர்களும் தனது

ஃபத்ஹுல் பாரியில் (9/481) கூறுகிறார்கள். 'நமது தூதரின்' என்ற வாசகம் 'ஷாத்' எனும் வகையில் இருப்பதால் அதை ஆதாரமாக ஏற்க முடியாது.

➢ ஒரு பெண்ணின் சொல்லுக்காக நாம் அல்லாஹ்வின் வேதத்தை விடமாட்டோம் என உமர் ﵁ அவர்கள் ஏன் கூறினார்கள்?

ஹாபிழ் இப்னு ஹஜர் ﵀ அவர்கள் கூறுகிறார்கள், உமர் ﵁ அவர்கள் ஃபாத்திமா பின்த் கைஸின் ஹதீஸை மறுக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு கூறவில்லை. மாறாக அந்த ஹதீஸின் சட்டம் பொதுவானதல்ல. மாறாக, அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானதாகும் என்று உமர் ﵁ அவர்கள் விளங்கியதாலேயே அவ்வாறு கூறினார்கள்.

உமர் ﵁ அவர்கள் இவ்வாறு விளங்குவதற்கு காரணம் இருந்திருக்கிறது.

لَا تُخْرِجُوهُنَّ مِنْ بُيُوتِهِنَّ وَلَا يَخْرُجْنَ إِلَّا أَنْ يَأْتِينَ بِفَاحِشَةٍ مُبَيِّنَةٍ وَتِلْكَ حُدُودُ اللَّهِ وَمَنْ يَتَعَدَّ حُدُودَ اللَّهِ فَقَدْ ظَلَمَ نَفْسَهُ لَا تَدْرِي لَعَلَّ اللَّهَ يُحْدِثُ بَعْدَ ذَلِكَ أَمْرًا

நீங்கள் விவாகரத்து செய்த பெண்களை அவர்கள் (இருக்கும் உங்களுடைய) வீடுகளிலிருந்து (இத்தாவுடைய காலம் முடிவடைவதற்கு முன்னர்) வெளியேற்ற வேண்டாம். அவர்களும் வெளியேற வேண்டாம். பகிரங்கமான மானக்கேடான காரியத்தை அவர்கள் கொண்டு வந்தாலன்றி. இன்னும் இவை அல்லாஹ்வின் வரம்புகளாகும். எவர் அல்லாஹ்வுடைய வரம்புகளை மீறுகின்றாரோ அவர் நிச்சயமாக தமக்குத்தாமே அநியாயம் செய்துகொண்டவராவார். அதன் பின்னர் (நீங்கள் சேர்ந்து வாழ) புதிய ஒரு காரியத்தை அல்லாஹ் ஏற்படுத்திவிடலாம் என்பதை நீர் அறியமாட்டீர். (சூரா அத்தலாக், 1)

உமர் ﵁ அவர்கள் அல்லாஹ்வின் வேதத்தை விடமாட்டோம் என்பது, 'அத்தலாக்' வசனத்திலுள்ள கருத்து மேலோட்டமாக உணவும், தங்கும் வசதியும் எல்லா தலாக் விடப்பட்ட பெண்ணிற்கும் பொதுவானதாக இருக்கிறது என்று அவர்கள் விளங்கியதால்தான் அவ்வாறு கூறினார்கள். ஆகவேதான் ஃபாத்திமா பின்த் கைஸ் ﵄ அவர்களின் ஹதீஸ் தொடர்பாக அவர்களுக்கு மட்டும் பிரத்யேகமாக நபி ﷺ அவர்கள் சொல்லியிருப்பார்கள் என விளங்கிக்கொண்டார்கள். ஆகவேதான் ஃபாத்திமா பின்த் கைஸிடம் ஒரு

பெண்ணின் சொல்லிற்காக நாம் அல்குர்ஆன் வசனத்தை விடமாட்டோம் என்று கூறிவிட்டு ஃபாத்திமா பின்த் கைஸ் நினைவில் வைத்துள்ளாரா? அல்லது மறந்துவிட்டாரா என்ற வாசகத்தை கூடுதலாக சொல்வதன் மூலம் நபி ﷺ அவர்கள் இச்சட்டத்தை ஃபாத்திமா பின்த் கைஸிற்கு மட்டும் பிரத்யேகமாக சொல்லியிருக்கலாம். அதனை ஃபாத்திமா பின்த் கைஸ் பொதுவானதாக விளங்கிக் கொண்டார்கள் என்பதை உமர் رضي الله عنه அவர்கள் கூறவருகிறார்கள் என்பதை அவர்களின் கூற்றை வைத்து அறியலாம். மேலும் ஆயிஷா رضي الله عنها அவர்களும் ஃபாத்திமா பின்த் கைஸ் கூறும் சட்டம் அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது; பொதுவான சட்டமில்லை என்ற கருத்தில் இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

وَزَادَ ابْنُ أَبِى الزِّنَادِ عَنْ هِشَامٍ عَنْ أَبِيهِ عَابَتْ عَائِشَةُ أَشَدَّ الْعَيْبِ وَقَالَتْ إِنَّ فَاطِمَةَ كَانَتْ فِى مَكَانٍ وَحِشٍ فَخِيفَ عَلَى نَاحِيَتِهَا ، فَلِذَلِكَ أَرْخَصَ لَهَا النَّبِىُّ صلى الله عليه وسلم

அப்துர் ரஹ்மான் இப்னு அபிஸ் ஸினாத் رحمه الله அவர்களின் அறிவிப்பில் கூடுதலாகக் காணப்படுவதாவது:

ஆயிஷா رضي الله عنها (ஃபாத்திமா பின்த் கைஸைக்) கடுமையாகச் சாடினார்கள். மேலும், '(இந்த) ஃபாத்திமா தன்னந் தனியானதோர் இடத்தில் இருந்தார். இதனால் அவர் (பாதுகாப்பு) குறித்து அஞ்சப்பட்டது. இதையடுத்தே அவருக்கு (மற்றோர் இடத்தில் 'இத்தா' இருக்க) நபி ﷺ அவர்கள் சலுகை அளித்தார்கள்' என்றும் ஆயிஷா رضي الله عنها கூறினார்கள். (புகாரி - 5326)

புகாரி رحمه الله அவர்கள் இந்த ஹதீஸை முஅல்லாக அறிவித்து இருந்தாலும், இந்த ஹதீஸ் மவ்சூலாக அபுதாவூதில் 2294 இலக்க எண்ணில் வந்துள்ளது. அந்த ஹதீஸ் ஆதாரப்பூர்வமானது ஆகும்.

ஆக, இதிலிருந்து உமர் رضي الله عنه அவர்களும் மற்றவர்களும் பாத்திமா பின்த் கைஸ் رضي الله عنها அவர்களின் ஹதீஸை இவர்கள் கூறுவதுபோல் அல்குர்ஆனுக்கு முரணாக இருக்கிறது அதனால் அதனை மறுக்க வேண்டும் என்று கூறவில்லை. மாறாக, அந்த ஹதீஸில் இருக்கும் சட்டம் ஃபாத்திமா பின்த் கைஸ் رضي الله عنها அவர்களுக்கு மட்டும் நபி ﷺ அவர்கள் பிரத்யேகமாக சொல்லியிருப்பார்கள் என்று கருதியதாலேயே இவ்வாறு கூறினார்கள்

என்பதை அறியலாம்.

அல்குர்ஆனின் 65:1 வசனம் இரண்டு தலாக் விடப்பட்ட பெண்ணிற்கே பொருந்தும். மூன்றாவது தலாக் விடப்பட்ட பெண்ணிற்கு பொருந்தாது. ஏனெனில், மூன்றாவது தலாக்கிற்குப் பிறகு கணவனுடன் சேர்ந்து வாழ்தல் என்ற நிலையே இல்லை. ஆனால் (65:21) வசனம் தலாக்கிற்குப் பிறகு கணவருடன் சேர்ந்து வாழ்வதைப் பற்றி கூறுகிறது. ஆகவே மூன்று தலாக் விடப்பட்ட பெண்ணிற்கு உறைவிடம், ஜீவனாம்சம் இல்லை என்ற ஃபாத்திமா பின்த் கைஸின் கருத்தே சரியானதாகும் என்று மார்க்க அறிஞர்கள் கூறுகிறார்கள்.

உமர் ﵁ அவர்கள், பாத்திமா பின்த் கைஸ் கூறும் ஹதீஸ் அல்குர்ஆனிற்கு முரணாக இருக்கிறது என்ற காரணத்தை வைத்து மறுக்கவில்லை என்பதற்கு ஆதாரமாக கீழ்வரும் ஹதீஸையும் குறிப்பிடலாம்.

قَالَ عُمَرُ إِنْ جِئْتِ بِشَاهِدَيْنِ يَشْهَدَانِ أَنَّهُمَا سَمِعَاهُ مِنْ رَسُولِ اللهِ صلى الله عليه وسلم وَإِلاَّ لَمْ نَتْرُكْ كِتَابَ اللَّهِ لِقَوْلِ امْرَأَةٍ (لاَ تُخْرِجُوهُنَّ مِنْ بُيُوتِهِنَّ وَلاَ يَخْرُجْنَ إِلاَّ أَنْ يَأْتِينَ بِفَاحِشَةٍ مُبَيِّنَةٍ).

உமர் ﵁ அவர்கள் கூறினார்கள்: நீங்கள் இரண்டு சாட்சியாளர்களை கொண்டுவந்து அவர்கள் இருவரும் அல்லாஹ்வின் தூதரிடமிருந்து கேட்டோம் என்று சாட்சி அளித்தால் நாங்கள் அதனை ஏற்போம். இல்லையெனில், ஒரு பெண்ணின் சொல்லிற்காக அல்லாஹ்வின் வேதத்தை விடமாட்டோம் என்றார்கள். (நஸாயீ - 3564, ஸஹீஹ்)

உமர் ﵁ அவர்கள் ஃபாத்திமா பின்த் கைஸ் விஷயத்தில் உறுதியை நாடினார்கள். ஏனெனில், அத்தலாக் வசனத்தின் மேலோட்டமான கருத்து பாத்திமா பின்த் கைஸ் ﵁ அவர்கள் அறிவிக்கும் ஹதீஸிற்கு மாற்றமாகவே இருப்பதாக உமர் ﵁ அவர்கள் கருதினார்கள். ஆகவே தான் பாத்திமா பின்த் கைஸ் அறிவிக்கும் ஹதீஸிலுள்ள சட்டம் அவர்களுக்கு மட்டும் பிரத்யேகமானதாக இருக்க வேண்டும். அல்லது ஃபாத்திமா பின்த் கைஸ் இரண்டு சாட்சியாளர்களை கொண்டுவந்தால் அவர்களின் சாட்சியை ஏற்று இச்சட்டத்தை பொதுவானதாக ஏற்கலாம் என்ற நிலையில் உமர் ﵁ அவர்கள் இருந்தார்கள் என்பதை இவ்வறிவிப்பின் மூலம் அறிய முடிகிறது.

உமர் ﵁ அவர்கள் இதே வழிமுறையை மற்ற சில விஷயங்களுக்கும் கையாண்டிருக்கிறார்கள்.

அபூசயீத் அல்குத்ரி ﵁ அவர்கள் கூறியதாவது:

நான் அன்சாரிகளின் அவையொன்றில் அமர்ந்திருந்தேன். அப்போது பதற்றமடைந்தவரைப் போன்று அபூமூசா ﵁ அவர்கள் வந்து நான் உமர் ﵁ அவர்களிடம் (அவர்களுடைய வீட்டினுள் நுழைய) மூன்றுமுறை அனுமதி கேட்டேன். ஆனால் எனக்கு அனுமதியளிக்கப்படவில்லை. ஆகவே நான் திரும்பிவிட்டேன். பின்பு உமர் ﵁ அவர்கள் (உங்களை நான் வரச்சொல்லி இருந்தேனே) ஏன் நீங்கள் வரவில்லை என்று (என்னிடம்) கேட்டார்கள். அதற்கு நான், (தங்களிடம்) மூன்று முறை அனுமதி கேட்டேன். ஆனால் எனக்கு அனுமதியளிக்கப்படவில்லை. ஆகவே, நான் திரும்பி வந்துவிட்டேன். (ஏனெனில்) அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் உங்களில் ஒருவர் மூன்று முறை அனுமதி கேட்டும் அவருக்கு அனுமதி வழங்கப்படாவிட்டால் அவர் திரும்பி விடட்டும் என்று கூறியுள்ளார்கள். என்றேன். அதற்கு உமர் ﵁ அவர்கள் அல்லாஹ்வின் மீதாணையாக! இ(வ்வாறு நபியவர்கள் கூறினார்கள் என்ப)தற்கு நீங்கள் சாட்சியைக் கொண்டுவர வேண்டும் என்று சொன்னார்கள். இதை நபி ﷺ அவர்களிடமிருந்து செவியேற்றவர் யாரேனும் உங்களில் உள்ளாரா? என்று கேட்டார்கள். அதற்கு (அங்கிருந்த) உபை பின் கஅப் ﵁ அவர்கள், அல்லாஹ்வின் மீதாணையாக! மக்களில் மிகச் சிறியவரே உங்களுடன் இப்போது சாட்சியம் சொல்ல) வருவார் என்று சொன்னார்கள். அங்கு நான்தான் மக்களில் சிறியவனாக இருந்தேன். எனவே நான் அபூமூசா ﵁ அவர்களுடன் சென்று நபி ﷺ அவர்கள் அவ்வாறு சொன்னார்கள் என்று உமர் ﵁ அவர்களிடம் தெரிவித்தேன். (புகாரி - 6245)

ஆக, உமர் ﵁ அவர்கள் ஃபாத்திமா பின் கைஸின் ஹதீஸை அல்குர் ஆனிற்கு முரணாக இருக்கிறது என்ற அடிப்படையில் மறுக்கவில்லை, மாறாக ஃபாத்திமா பின்த் கைஸின் ஹதீஸின் சட்டம் அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமாக இருக்க வேண்டும். பொதுவான சட்டமாக இருக்க முடியாது என்ற அடிப்படையிலேயே ஃபாத்திமா பின்த் கைஸ் ﵂ கூறிய சட்டத்தை ஏற்க மறுத்தார்கள். (ஃபாத்திமா பின்த் கைஸின் ஹதீஸை மறுக்கவில்லை மாறாக அதிலிருந்த சட்டத்தையே மறுத்தார்கள்)

ஒரு பெண்ணின் சொல்லிற்காக நாம் அல்குர்ஆனை விடமாட்டோம்.

அவர் நினைவில் வைத்துள்ளாரா அல்லது மறந்துவிட்டாரா என்ற உமர் ﷺ அவர்களின் கூற்றை ஒருவர் தவறுதலாக விளங்கி ஒரு பெண் அறிவிக்கும் ஹதீஸை ஏற்கக் கூடாது என்று கூற முடியாது. ஏனெனில், உமர் ﷺ அவர்கள் ஃபாத்திமா பின்த் கைஸ் ஒரு பெண்ணாக இருக்கிறார், அதனால் அவர் அறிவிக்கும் ஹதீஸை ஏற்க மாட்டேன் என்று கூறவில்லை. ஃபாத்திமா பின்த் கைஸ் கூறும் சட்டம் அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானதாக இருக்க வேண்டும், பொதுவானதாக இருக்க முடியாது என்ற நிலையில் தான் உமர் ﷺ அவர்கள் இவ்வாறு கூறினார்கள் என்பதை ஏற்க வேண்டும்.

மேலும் ஃபாத்திமா பின்த் கைஸ் அபரிதமான நினைவாற்றல் உள்ளவராவார். நபி ﷺ அவர்கள் மிம்பரிலிருந்து தஜ்ஜாலைப் பற்றி ஒரு முறை கூறக் கேட்டு அதை அப்படியே நினைவில் வைத்திருந்தார்கள். மற்ற விஷயங்களை இப்படி நினைவில் வைத்திருப்பவர் தன் தொடர்பான விஷயத்தை நினைவில் வைக்கவில்லை என்று கூறுவதை எப்படி ஏற்க முடியும்.

ஸயீத் பின் முஸய்யிப்பிடம் ஃபாத்திமா பின்த் கைஸ் ﷺ அவர்களின் கூற்றினால் மக்கள் மத்தியில் குழப்பம் உண்டாகின்றது என்று கூறப்பட்டபோது, ஃபாத்திமா பின்த் கைஸ் ﷺ அவர்கள், நபி ﷺ அவர்களிடமிருந்து இதனை அறிவிக்கிறார்கள். குழப்பம் எதனையும் செய்யவில்லை நபி ﷺ அவர்களிடமிருந்து அழகிய முன்மாதிரி நம் அனைவருக்கும் இருக்கிறது என்றார்கள்.

உமர் ﷺ அவர்கள் ஃபாத்திமா பின்த் கைஸ் அறிவிக்கும் ஹதீஸ் அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது என்ற அடிப்படையில்தான் அதனை ஏற்க மறுத்தார்களே தவிர, ஃபாத்திமா பின்த் கைஸ் அறிவிக்கும் ஹதீஸ் அல்குர்ஆனுக்கு முரணாக இருக்கிறது என்ற அடிப்படையில் மறுக்கவில்லை என்பதை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.

இறந்தவர்களுக்காக அழுவதால் கப்றில் வேதனை அளிக்கப்படுமா?

உமர் ﵁ அவர்கள் கத்தியால் குத்தப்பட்டபோது அவர்களிடம் சகோதரரே! நண்பரே! எனக் கூறி அழுதவராக ஸுஹைப் அவர்கள் நுழைந்தார்கள். அப்போது உமர் ﵁ அவர்கள் ஸுஹைபே! எனக்காகவா நீங்கள் அழுகிறீர்கள்? இறந்தவருக்காக அவருடைய குடும்பத்தார் அழும் சில அழுகையின் காரணமாக இறந்தவர் வேதனை செய்யப்படுகிறார் என அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள் அல்லவா? என்றார்கள். உமர் ﵁ அவர்கள் இறந்தபோது (அவர்கள் இறப்பதற்கு முன்பு கூறிய) அந்தச் செய்தியை ஆயிஷா ﵂ அவர்களிடத்தில் கூறினேன். அதற்கு ஆயிஷா ﵂ அவர்கள் அல்லாஹ் உமர் ﵁ அவர்கள்மீது அருள் புரிவானாக! அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒருவர் அழுவதன் காரணமாக இறைநம்பிக்கையாளரை அல்லாஹ் வேதனை செய்வான் என அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறவில்லை. மாறாக குடும்பத்தார் சப்தமிட்டு அழுவதன் காரணத்தால் இறைமறுப்பாளருக்கு அல்லாஹ் வேதனையை அதிப்படுத்துகிறான் என்றே அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் என்று சொல்லிவிட்டு ஓர் ஆத்மாவின் பாவச் சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது எனும் (35:18) வசனமே உங்களுக்கு போதும் என்றார்கள். (முஸ்லிம் - 1694)

உமர் ﵁ அவர்களும் அவர்களுடைய மகன் இப்னு உமர் ﵁ அவர்களும் பிரபலமான நபித்தோழர்கள். குடும்பத்தினர் அழுவதால் இறந்தவர் வேதனை செய்யப்படுவார் என்று நபி ﷺ அவர்கள் கூறியதாக இவர்கள் கூறும் ஹதீஸ், ஒருவரது பாவச் சுமையை மற்றவர் சுமக்க முடியாது என்று கூறும் குர்ஆனுக்கு மாற்றமாக இருப்பதால் இந்த ஹதீஸை நபி ﷺ அவர்கள் கூறியிருக்க மாட்டார்கள். மாறாக நல்ல மனிதர்களான இந்த இருவரிடத்தில்தான் தவறு வந்திருக்கும் என ஆயிஷா ﵂ அவர்கள் முடிவு செய்கிறார்கள். (பார்க்க நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம்: 14)

நமது பதில்:

உமர், இப்னு உமர் ﵁ அவர்களின் ஹதீஸ், அல்குர்ஆன் வசனத்திற்கு முரண்படுவதால் ஆயிஷா ﵂ அவர்கள், இந்த ஹதீஸை ஏற்கவில்லை

என்று இவர்கள் கூறுகிறார்கள். ஆயிஷா ﵂ அவர்கள் என்ன வழிமுறையை கடைபிடித்தார்களோ அதே வழிமுறையைத்தான் தாங்களும் கடைப்பிடிப்பதாக கூறிக்கொள்கிறார்கள்.

- ஆயிஷா ﵂ அவர்கள் அல்குர்ஆனிற்கு முரண்படுகிறது என்ற காரணத்தை வைத்து தான் இந்த ஹதீஸை மறுத்தார்கள் என்றால், ஃபாத்திமா பின்த் கைஸ் அறிவிக்கும் ஹதீஸ் சூரா அத்தலாக்கின் முதல் வசனத்திற்கு முரணாக இருக்கிறது என்று ஏன் கூறவில்லை? ஆயிஷா அவர்களுக்கு சூரா அத்தலாக்கின் முதல் வசனம் தெரியதா? அல்லது அந்த வசனத்தின் பொருள் புரியதா? ஃபாத்திமா பின்த் கைஸ் உறைவிடம், ஜீவனாம்சம் தொடர்பாக அறிவிக்கும் ஹதீஸ் அவர்களுக்கு மட்டும் பிரத்யேகமானது என்று ஏன் ஆயிஷா ﵂ அவர்கள் கூற வேண்டும்? ஸஹீஹான ஹதீஸ் அல்குர்ஆனுக்கு முரண்பட்டால் அந்த ஹதீஸை மறுக்க வேண்டும் என்பதை ஸஹாபாக்கள்கூட செயல்படுத்தினார்கள் என்று கூறுபவர்களிடம் இதற்கான பதில் என்ன?

- ஹதீஸ்கலையை பற்றிய ஞானம் இல்லாமல் தங்களின் அறியாமைக்கு ஸஹாபாக்களை ஆதாரமாக்குவது தவறாகும். உண்மையில் எந்த ஒரு ஸஹாபியும் இவர்கள் கூறுவது போல் ஸஹீஹான ஹதீஸ்களை அல்குர்ஆனுக்கு முரண்படுகிறது என்று மறுக்கவில்லை.

இவர்கள் கூறுவது போல் அல்குர்ஆன் வசனத்திலுள்ள ஒருவரது பாவச் சுமையை மற்றவர் சுமக்க முடியாது என்ற வசனத்தை அடிப்படையாக வைத்துதான் ஆயிஷா ﵂ அவர்கள் உமர், இப்னு உமர் ﵄ அவர்களின் ஹதீஸை மறுத்தார்களா என்றால்? நிச்சயமாக அந்த வசனத்தை அடிப்படையாக வைத்து ஆயிஷா ﵂ அவர்கள் மறுக்கவில்லை என்பதை உறுதியாகக் கூறலாம்.

மேலும், குடும்பத்தார் சப்தமிட்டு அழுவதன் காரணத்தால் இறைமறுப்பாள ருக்கு அல்லாஹ் வேதனையை அதிகப்படுத்துகிறான் என்றே அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் என்று சொல்லிவிட்டு ஓர் ஆத்மாவின் பாவச்சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது எனும் (35:18) வசனமே உங்களுக்கு போதும் என்றார்கள்.

- அல்குர்ஆன் வசனத்தின்படி ஓர் ஆத்மாவின் பாவத்தை மற்றொரு

ஆத்மா சுமக்காது என்றால் இறைமறுப்பாளரின் குடும்பத்தார் அழுவதினால் இறைமறுப்பாளருக்கு அல்லாஹ் வேதனையை அதிகப்படுத்துகிறான் என ஆயிஷா ﵂ அவர்கள் ஏன் கூறவேண்டும்?

- அல்குர்ஆன் வசனத்திலுள்ள ஓர் ஆத்மாவின் பாவத்தை மற்றொரு ஆத்மா சுமக்காது என்பது அனைவருக்கும் பொதுவானதா? அல்லது முஸ்லிம்களுக்கு மட்டும் பிரத்யேகமானதா?

- ஆயிஷா ﵂ அவர்களின் கூற்றை வைத்துப் பார்க்கும்போது இந்த வசனம் முஸ்லிம்களுக்கு மட்டுமே உரியது காஃபிர்களுக்கு பொருந்தாது என்று தெரியவருகிறது. அதனை இவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

இவ்வசனம் அனைவருக்கும் பொதுவானதாகும் என்பதற்கே ஆதாரங்கள் உள்ளன. முஸ்லிம்களுக்கு மட்டும் பிரத்யேகமாகும் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. எனவே குடும்பத்தினர் அழுவதினால் இறந்தவருக்கு வேதனை அளிக்கப்படும் என்பது தொடர்பாக ஆயிஷா ﵂ அவர்கள் அறிவிக்கும் ஹதீஸ்களை ஒன்று திரட்டினால் ஆயிஷா ﵂ அவர்கள் ஏன் இப்படி கூறினார்கள் என்பதில் தெளிவு கிடைக்கும். மேலும் மார்க்க தொடர்பான விஷயங்களை அறிவதற்கு அதுப்பற்றி வந்துள்ள அனைத்து தகவல்களையும் ஒன்றுதிரட்டி விளங்குவதே சரியான வழிமுறையாகும்.

இறந்தவருக்கு அழுவது தொடர்பான ஆயிஷா அவர்களின் அறிவிப்புகள்

1. ஒருவர் அழுவதன் காரணமாக இறைநம்பிக்கையாளரை அல்லாஹ் வேதனை செய்வான் என அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறவில்லை. மாறாக குடும்பத்தார் சப்தமிட்டு அழுவதன் காரணத்தால் இறைமறுப்பாளருக்கு அல்லாஹ் வேதனையை அதிகப்படுத்துகிறான் என்றே அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள் என்றார்கள். (நூல்: முஸ்லிம் - 1694)

2. அல்லாஹ்வின் தூதரைக் கடந்து ஒரு யூதரின் சடலம் கொண்டு செல்லப்பட்டது. அவருக்காக யூதர்கள் அழுது கொண்டிருந்தனர். அப்போது தான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் நீங்கள் அழுதுகொண்டிருக்கிறீர்கள், ஆனால் அதுவோ வேதனை செய்யப்படுகிறது என்று கூறினார்கள். (நூல்: முஸ்லிம் - 1696)

3. இறந்தவர் தன் வாழ்நாளில் செய்த சிறிய பெரிய பாவங்களுக்காக

வேதனை செய்யப்படுகிறார். அவருடைய குடும்பத்தாரோ இப்போது அவருக்காக அழுது கொண்டிருக்கின்றனர். (நூல்: முஸ்லிம் - 1697)

நபி ﷺ அவர்கள் அழுவதால் கப்றில் உள்ளவருக்கு வேதனை செய்யப்படுவதாக கூறிய தகவல்கள் ஆயிஷா ﵂ அவர்களிடத்தில் என்ன இருந்ததோ அதனை வைத்து அவர்கள் இறைநம்பிக்கையாளர்களுக்கு அழுவதினால் வேதனை அளிக்கப்படாது என்று விளங்கிக் கொண்டார்கள். மேலும் தனது விளக்கத்திற்கு ஆதாரமாக அல்குர்ஆன் வசனத்தின் மேலோட்டமான கருத்தையும் சுட்டிக்காட்டினார்கள்.

உண்மைநிலை இப்படியிருக்க ஆயிஷா ﵂ அவர்கள் அல்குர்ஆன் வசனத்தை வைத்து ஸஹீஹான ஹதீஸை நிராகரித்தார்கள் என்ற ஒரு மாயையை ஏற்படுத்த நினைப்பது தவறாகும்.

ஆயிஷா ﵂ அவர்கள் இந்த விஷயத்தில் உமர், இப்னு உமரிடம் தவறு நிகழ்ந்தது என்று கூறுவதால் ஆயிஷா ﵂ அவர்களின் கருத்து சரியென்று ஆகிவிடாது. ஏனெனில், ஆயிஷா ﵂ அவர்களுக்கு இவ்விஷயத்தில் முழுமையான தகவல்கள் கிடைக்காமல் போயிருக்கலாம். இதைப்போன்றே வேறு ஒரு சந்தர்ப்பத்தில் ஆயிஷா ﵂ அவர்கள் நடந்துகொண்ட முறையை சுட்டிக்காட்டுவது இங்கு பொருத்தமாக இருக்கும்.

ஆயிஷா ﵂ அவர்கள் அறிவிக்கிறார்கள், நபி ﷺ அவர்கள் நின்றுகொண்டு சிறுநீர் கழித்தார்கள் என்று எவர் கூறினாலும், அதை நம்பாதீர்கள். நான் நபி ﷺ அவர்களை அமர்ந்து சிறுநீர் கழிப்பவர்களாகவே கண்டிருக்கிறேன். (இப்னுமாஜா - 327) ஸஹீஹ்

ஹுதைஃபா ﵁ அவர்கள் கூறியதாவது: நபி ﷺ அவர்கள் ஒரு சமூகத்தாரின் குப்பைக் குழிக்கு வந்து (அங்கு) நின்றுகொண்டு சிறுநீர் கழித்தார்கள். பிறகு தண்ணீர் கொண்டு வரச் சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்தேன். அதில் நபி ﷺ அவர்கள் உளூ செய்தார்கள். (புகாரி - 224)

நபி ﷺ அவர்கள் நின்று கொண்டு சிறுநீர் கழித்தார்கள் என்று எவர் கூறினாலும், அதை நம்பாதீர்கள் என ஆயிஷா ﵂ அவர்கள் கூறிவிட்டதினால் ஹுதைஃபா ﵁ அவர்களின் ஹதீஸை மறுத்திட வேண்டுமா? இதனை எப்படி அணுகுவது?

ஆயிஷா ﵂ அவர்கள் பார்த்த வரையில் நபி ﷺ அவர்கள் நின்றுகொண்டு

சிறுநீர் கழித்ததில்லை. ஹுதைஃபா ﷺ அவர்கள் நபி ﷺ அவர்களை குப்பை மேட்டின் மீது நின்றுகொண்டு சிறுநீர் கழித்ததை பார்த்திருக்கிறார்கள்.

ஆயிஷா ﷺ அவர்கள் தன்னிடம் இருந்த தகவலை அறிவிக்கிறார்கள். ஹுதைஃபா ﷺ அவர்கள் ஆயிஷா ﷺ அவர்களிடம் இல்லாத கூடுதலான ஒரு தகவலை அறிவிக்கிறார்கள்.

இதைப்போன்றே குடும்பத்தினர் அழுவதால் இறைமறுப்பாளருக்கு மட்டுமே வேதனையளிக்கப்படும், இறைநம்பிக்கையாளருக்கு வேதனை அளிக்கப்படாது என ஆயிஷா ﷺ அவர்கள் தன்னிடம் இருந்த தகவலை வைத்து விளங்கினார்கள்.

இறந்தவரின் குடும்பத்தினர் அழுவதால் கப்றில் அவருக்கு வேதனை அளிக்கப்படும் என்ற ஹதீஸை உமர், இப்னு உமர் ﷺ அவர்கள் மட்டும் அறிவிக்கவில்லை. அவர்களுடன் மற்ற சில நபித்தோழர்களும் இந்த ஹதீஸை அறிவித்திருக்கிறார்கள்.

உமர், இப்னு உமர் ﷺ (புகாரி - 1292, முஸ்லிம்)

அபூ மூஸா அல்அஷ்அரி ﷺ (இப்னுமாஜா - 1594)

இம்ரான் பின் ஹுஸைன் ﷺ (நஸாயீ - 1860)

முகிரா பின் ஷுஅபா ﷺ (புகாரி - 1291)

உமர், இப்னு உமர் மற்ற நபித்தோழர்கள் ﷺ இறந்தவருக்காக அழுவதால் வேதனை அளிக்கப்படும் என்று நபி ﷺ அவர்கள் பொதுவான சட்டமாகவே கூறினார்கள். எனவே இதில் இறைநம்பிக்கையாளர், இறைநிராகரிப்பாளர் ஆகிய அனைவரும் அடங்குவர் என விளங்கினார்கள்.

இச்சட்டம் பொதுவானது என்பதற்கான ஆதாரம்,

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عُمَرَ رضى الله عنهما قَالَ اشْتَكَى سَعْدُ بْنُ عُبَادَةَ شَكْوَى لَهُ فَأَتَاهُ النَّبِىُّ صلى الله عليه وسلم يَعُودُهُ مَعَ عَبْدِ الرَّحْمَنِ بْنِ عَوْفٍ وَسَعْدِ بْنِ أَبِى وَقَّاصٍ وَعَبْدِ اللَّهِ بْنِ مَسْعُودٍ رضى الله عنهم فَلَمَّا دَخَلَ عَلَيْهِ فَوَجَدَهُ فِى غَاشِيَةِ أَهْلِهِ فَقَالَ قَدْ قَضَى قَالُوا لاَ يَا رَسُولَ اللَّهِ .

فَبَكَى النَّبِيُّ صلى الله عليه وسلم فَلَمَّا رَأَى الْقَوْمُ بُكَاءَ النَّبِيِّ صلى الله عليه وسلم بَكَوْا فَقَالَ أَلاَ تَسْمَعُونَ إِنَّ اللَّهَ لاَ يُعَذِّبُ بِدَمْعِ الْعَيْنِ ، وَلاَ بِحُزْنِ الْقَلْبِ ، وَلَكِنْ يُعَذِّبُ بِهَذَا وَأَشَارَ إِلَى لِسَانِهِ أَوْ يَرْحَمُ وَإِنَّ الْمَيِّتَ يُعَذَّبُ بِبُكَاءِ أَهْلِهِ عَلَيْهِ. وَكَانَ عُمَرُ رضى الله عنه يَضْرِبُ فِيهِ بِالْعَصَا ، وَيَرْمِى بِالْحِجَارَةِ وَيَحْثِى بِالتُّرَابِ

இப்னு உமர் ؓ அவர்கள் கூறியதாவது: சஅத் பின் உபாதா ؓ நோயுற்றபோது நபி ﷺ அவர்கள், அப்துர்ரஹ்மான் பின் அவ்ஃப், சஅத் பின் அபீவக்காஸ், அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ؓ ஆகியோரோடு நலம் விசாரிக்கச் சென்றார்கள். வீட்டில் நுழைந்தபோது (சஅத் பின் உபாதாவின்) குடும்பத்தினர் அவரைச் சூழ்ந்திருப்பதைக் கண்டதும், ‘‘என்ன இறந்துவிட்டாரா’’ எனக் கேட்டார்கள். ‘‘இல்லை, அல்லாஹ்வின் தூதரே!’’ என்றனர். நபி ﷺ அவர்கள் அழலானார்கள். அவர்களின் அழுகையைக் கண்ட மக்களும் அழத்தொடங்கினர். பின் நபி ﷺ அவர்கள், ‘‘(மக்களே!) நீங்கள் (செவி சாய்த்துக்) கேட்க மாட்டீர்களா நிச்சயமாகக் கண்கள் அழுவதாலும் உள்ளம் கவலை கொள்வதாலும் அல்லாஹ் தண்டிப்பதில்லை. பின்பு, தம் நாவின்பால் சைகை செய்து, எனினும் இதன் காரணமாகத்தான் தண்டனையோ அருளோ வழங்குகிறான். நிச்சயமாகக் குடும்பத்தினர் (ஒப்பாரி வைத்து) அழுவதால் இறந்தவர் வேதனை செய்யப்படுகின்றார்’’ என்று கூறினார்கள். உமர் ؓ அவர்கள் ஒப்பாரி வைப்பவர்களைக் கண்டால் கம்பினால் அடிப்பார்கள், கல்லெறிவார்கள். இன்னும் மண்வாரி வீசவும் செய்வார்கள். (புகாரி - 1304)

சஅத் பின் உபாதா என்ற ஸஹாபியை நலம் விசாரிக்க சென்ற நிலையில் நபி ﷺ அவர்கள் அழுவதைக் கண்டு ஸஹாபாக்களும் அழுகிறார்கள். அந்நிலையில் நபி ﷺ அவர்கள் சாதாரணமாக அழுவதால் வேதனை அளிக்கப்படாது. மாறாக, ஒப்பாரிவைத்து அழுவதாலும், தவறானவற்றை பேசுவதாலுமே இறந்தவருக்கு வேதனை அளிக்கப்படும் என்று கூறுகிறார்கள். எனவே இறந்தவருக்காக ஒப்பாரிவைத்து அழுவதால் வேதனை அளிக்கப்படும் என்பது பொதுவானதாகும். அதில் முஸ்லிம்களும் அடங்குவர் என்பதை இந்த ஹதீஸ் தெரியப்படுத்துகிறது.

ஒருவரின் சுமையை மற்றவர் சுமக்க முடியாது என்ற அல்குர்ஆன் வசனம் பொதுவானதாக இருந்தாலும் சுன்னா அந்த பொதுவான சட்டத்திலிருந்து சிலவற்றில் விதிவிலக்கை அளிக்கிறது. ஆக அல்குர்ஆன், சுன்னாவை இணைத்து விளங்குவதே சரியான வழிமுறையாகும்.

முஸ்லிம் ஒருவர் மரணித்துவிட்டால் அவருக்காக சாதாரணமாக அழுவதால் அவருக்கு வேதனை அளிக்கப்படாது. ஒப்பாரிவைத்து அழுவதாலும், மார்க்கம் தடுத்துள்ள வகைகளில் அவரைப்பற்றி பேசுவதாலும் மரணித்தவருக்கு கப்றில் வேதனை அளிக்கப்படும்.

- இறந்தவர் தன்னுடைய மரணத்திற்கு முன்பு குடும்பத்தினரிடம் தனக்காக ஒப்பாரி வைத்து அழ வேண்டும் என்று கூறிச் சென்றால் அவருக்கு கப்றில் வேதனை அளிக்கப்படும்.
- ஒருவர் தன் மரணத்திற்கு முன்பு தனது குடும்பத்தினர் தனக்காக ஒப்பாரி வைத்து அழுவார்கள் என்பதை அறிந்திருந்தும் அதுபற்றி எச்சரிக்காமல் மரணித்தால் அவருக்கு கப்றில் வேதனை அளிக்கப்படும்.
- இறந்தவர் தன்னுடைய மரணத்திற்கு முன்பு குடும்பத்தாரிடம் தனக்காக ஒப்பாரி வைக்கக் கூடாது, மார்க்கம் தடுத்துள்ள வகைகளில் தன்னைப்பற்றி பேசக் கூடாது என்று உபதேசித்து விட்டு மரணித்து விடுகிறார். அவருடைய உபதேசத்திற்கு மாற்றமாக அவருடைய குடும்பத்தினர் நடந்து கொண்டால் அவருக்கு கப்றில் வேதனை அளிக்கப்படாது.

ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனிற்கு முரண்பட்டால் அந்த ஹதீஸை மறுக்க வேண்டும் என்று எந்த ஒரு ஸஹாபியும் சொல்லவுமில்லை, அவ்வாறு செயல்படவுமில்லை. தங்களின் தவறான புரிதலுக்கு ஸஹாபிகளின் பெயரை பயன்படுத்துவது அவர்கள்மீது அவதூறு கூறிய குற்றமாகும்.

இதுவரை நாம் ஹதீஸ்கள் தொடர்பான அடிப்படையான விஷயங்களான ஸஹீஹான ஹதீஸ்கள் வஹீயாகும், அந்த ஹதீஸ்கள் பாதுகாப்பட்டுள்ளன, அல்லாஹ் ஸஹீஹான ஹதீஸ்களை பாதுகாப்பதற்கு எத்தகைய வழிமுறைகளை ஏற்படுத்தி தந்திருக்கிறான் என்பதைப்பற்றி விரிவாக பார்த்தோம். அதிலிருந்து ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு

முரண்படவே படாது என்பதை உறுதியாக நம்ப முடியும். இதுவே ஹதீஸ்கள் தொடர்பான சரியான நம்பிக்கையாகும், இந்நம்பிக்கைக்கு மாற்றமாக ஹதீஸ்கள் இறைச்செய்தி இல்லை, ஹதீஸ்கள் பாதுகாப்படவில்லை, ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்படும் என்பன போன்ற தவறான நம்பிக்கைகள் ஒருவரை வழிகேட்டிற்கு கொண்டுசென்றுவிடும். அவ்வழிகேடானது நரகத்தில் கொண்டுபோய் தள்ளிவிடும். (அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக!)

இதுவரை நாம் பார்த்த ஹதீஸ்கள் தொடர்பான அடிப்படைத் தகவல்களை ஒருவர் சரியாக விளங்கிக்கொண்டால், ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர் ஆனிற்கு முரண்படும் என்று நம்புவது தவறான நம்பிக்கையாகவும், வழிகேடாகவும் இருக்கிறது என்பதை அறிந்து கொள்வார்.

ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? என்ற நூலில் சில ஸஹீஹான ஹதீஸ்களை அல்குர்ஆனுக்கு முரண்படுகிறது என மறுத்திருக்கிறார்கள். அத்தகைய ஹதீஸ்களில் மூன்று ஹதீஸ்களுக்கு பதிலளிக்கப்பட்டு அந்த ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்படவில்லை என்பதைத் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

மூஸா நபி வானவரை தாக்கினார்களா?

உயிர் பறிக்கும் வானவர் மூஸா ﷺ அவர்களிடம் அனுப்பப்பட்டார். அவர் வந்தபோது மூஸா ﷺ அவர்கள் அவரது கண் பிதுங்கும் அளவுக்கு அடித்துவிட்டார்கள். உடனே அவர் அல்லாஹ்விடம் திரும்பிச் சென்று மரணிக்க விரும்பாத ஓர் அடியானிடம் என்னை அனுப்பிவிட்டாய் என்றார். பிறகு அல்லாஹ் அவரது கண்ணை சரிபடுத்திவிட்டு, நீர் மீண்டும் அவரிடம் சென்று அவரை ஒரு மாட்டின் முதுகில் கையை வைக்கச் சொல்லி அவரது கை எத்தனை ரோமங்களை அடக்கிக் கொள்கிறதோ அத்தனை வருடங்கள் உயிர் வாழலாம் என்பதைக் கூறும் என அனுப்பி வைத்தான்.

(அவ்வாறே அவர் மூஸா ﷺ அவர்களிடம் வந்து கூறியபோது) மூஸா ﷺ அவர்கள் இரட்சகனே! அதற்குப் பிறகு எனக் கேட்டதும், அல்லாஹ், மரணம்தான் என்றான். உடனே மூஸா ﷺ அவர்கள் அப்படியானால், இப்பொழுதே தயார் எனக் கூறிவிட்டு அல்லாஹ்விடம் (பைத்துல் முகத்தஸ் என்னும்) புனிதத் தலத்திலிருந்து கல்லெறியும் தூரத்திலுள்ள இடத்தில் தம் உயிரைக் கைப்பற்றுமாறு வேண்டிக் கொண்டார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறும்போது நான் மட்டும் அங்கு (பைத்துல் முகத்தஸில்) இருந்தால் உங்களுக்கு அந்த செம்மணற் குன்றிற்கருகில் உள்ள பாதையிலிருக்கும் மூஸா ﷺ அவர்களது அடக்கத்தலத்தைக் காட்டியிருப்பேன் என்றார்கள். (புகாரி - 1339)

இந்த ஹதீஸ் புகாரி, முஸ்லிம் போன்ற பல ஹதீஸ் கிரந்தங்களில் வந்துள்ளது. இஸ்லாமிய அறிஞர்கள் இந்த ஹதீஸை ஸஹீஹானது என்று ஏற்றிருக்கிறார்கள். முஅதஜிலாக்கள் போன்ற வழி தவறிய கூட்டத்தினர்தான் இந்த ஹதீஸை விமர்சித்து மறுக்கிறார்கள். இந்த ஹதீஸை மறுப்பவர்கள் எத்தகைய கொள்கையுடையவர்கள் என்பதை வைத்தே இந்த ஹதீஸை மறுப்பது வழிகேடாகும் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

இந்த ஹதீஸை மறுப்பவர்கள் சில வாதங்களை முன்வைக்கிறார்கள். அந்த வாதங்களையும் அதற்குரிய பதில்களையும் இனி பார்ப்போம்:

1. ஒவ்வொரு உயிரையும் கைப்பற்றுவதற்குரிய காலக்கெடு வந்துவிட்டால் உடனே கைப்பற்றப்பட்டு விடும்.

لِكُلِّ أُمَّةٍ أَجَلٌ إِذَا جَاءَ أَجَلُهُمْ فَلَا يَسْتَأْخِرُونَ سَاعَةً وَلَا يَسْتَقْدِمُونَ

ஒவ்வொரு சமுதாயத்துக்கும் ஒரு காலக்கெடு உள்ளது. அவர்களின் காலக்கெடு வரும்போது சிறிது நேரம் அவர்கள் முந்தவும் மாட்டார்கள். பிந்தவும் மாட்டார்கள். (10:49)

இந்த அல்குர்ஆன் வசனத்திற்கு மாற்றமாக இந்த ஹதீஸில் மூஸா عليه السلام அவர்கள் ஒத்துக் கொள்ளாததால் அல்லாஹ் அவர்களின் ஆயுளை நீட்டிக் கொடுத்தான் என்று உள்ளது. எனவே இந்த ஹதீஸை ஏற்றுக் கொள்ளக் கூடாது. (பார்க்க ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 105)

நமது பதில்: ஒவ்வொரு சமுதாயத்துக்கும் ஒரு காலக்கெடு உள்ளது. அவர்களின் காலக்கெடு வரும்போது சிறிது நேரம் அவர்கள் முந்தவும் மாட்டார்கள். பிந்தவும் மாட்டார்கள். (10:49) என்ற அல்குர்ஆன் வசனம் நம்மைப்போன்ற மனிதர்களுக்கு மரணம் ஏற்படும் நிலையைப் பற்றி கூறும் பொதுவான வசனமாகும். இந்த பொதுவான நிலையிலிருந்து நபிமார்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் பிரத்யேகமாக நபிமார்களுக்கு வாழ்வு மற்றும் மரணத்தை தேர்ந்தெடுப்பதற்குரிய வாய்ப்பை அவர்கள் ஆரோக்கியமாக இருக்கும் நிலையில் அளிப்பதாக நபி ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்,

عَنْ عَائِشَةَ قَالَتْ كَانَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم وَهْوَ صَحِيحٌ يَقُولُ إِنَّهُ لَمْ يُقْبَضْ نَبِيٌّ قَطُّ حَتَّى يَرَى مَقْعَدَهُ مِنَ الْجَنَّةِ ثُمَّ يُحَيَّا أَوْ يُخَيَّرَ فَلَمَّا اشْتَكَى وَحَضَرَهُ الْقَبْضُ وَرَأْسُهُ عَلَى فَخِذِ عَائِشَةَ غُشِيَ عَلَيْهِ ، فَلَمَّا أَفَاقَ شَخَصَ بَصَرُهُ نَحْوَ سَقْفِ الْبَيْتِ ثُمَّ قَالَ اللَّهُمَّ فِي الرَّفِيقِ الأَعْلَى. فَقُلْتُ إِذًا لاَ يُجَاوِرُنَا . فَعَرَفْتُ أَنَّهُ حَدِيثُهُ الَّذِي كَانَ يُحَدِّثُنَا وَهْوَ صَحِيحٌ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் ஆரோக்கியமாக இருந்தபோது, சொர்க்கத்தில் தம் இருப்பிடத்தைப் பார்த்து, பிறகு (இன்னும் சிலகாலம்) உயிர் வாழ்வதற்கு வாய்ப்பளிக்கப்படாத வரையில் அல்லது (உலக வாழ்வு. மறுமை ஆகிய இரண்டில் ஒன்றைத்) தேர்ந்தெடுத்துக்கொள்(ளும் வாய்ப்பு வழங்கப்படாத வரையில் எந்த இறைத்தூத(ரின் உயி)ரும்

கைப்பற்றப்படவில்லை என்று சொல்லிவந்தார்கள். நபி ﷺ அவர்கள் நோய்வாய்ப்பட்டு அவர்களது தலை என் மடியின் மீதிருக்க, அவர்களுக்கு இறப்பு நெருங்கிவிட்டபோது அவர்கள் மூர்ச்சையடைந்துவிட்டார்கள். மூர்ச்சை தெளிந்தபோது அவர்களது பார்வை வீட்டின் முகட்டை நோக்கி நிலைகுத்தி நின்றது. பிறகு அவர்கள், இறைவா! (சொர்க்கத்தில்) உயர்ந்த தோழர்களுடன் (என்னைச் சேர்ந்தருள்) என்று பிரார்த்தித்தார்கள். உடனே நான், இனி (நபி ﷺ அவர்கள்) நம்முடன் இருக்கமாட்டார்கள் என்று சொன்னேன். ஏனெனில், அவர்கள் ஆரோக்கியத்துடன் இருந்தபோது சொன்ன (இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பு அளிக்கப்படும்) செய்தி இதுதான் என்று (அவர்களின் மரண வேளையான இப்போது) நான் அறிந்துகொண்டேன். (புகாரி - 4437)

நபிமார்கள் ஆரோக்கியத்துடன் இருக்கும்போது வாழ்வு, மரணம் இவை இரண்டில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பினை அல்லாஹ் அவர்களுக்கு பிரத்யேகமாக வழங்குகிறான். நபி மூஸா عليه السلام அவர்களுக்கும் இவ்வாறு வழங்கப்பட்ட நிகழ்வைப் பற்றியே இந்த ஹதீஸ் கூறுகிறது. இந்த ஹதீஸ் மூஸா عليه السلام அவர்களுக்கும் இவ்வாறு வாழ்வதற்கான வாய்ப்பளிக்கபட்டது என்பதை தெளிவுபடுத்துகிறது.

சுன்னா, அல்குர்ஆனிலிருந்து சில விஷயங்களுக்கு விதிவிலக்கை ஏற்படுத் தும். அல்லாஹ் அல்குர்ஆனில் உயிரினங்களில் தானாக இறந்தவற்றை உண்பதைத் தடை செய்கிறான். சுன்னாவில் இறந்த மீன்களையும், வெட்டுக்கிளியையும் உண்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தானாக இறந்தவற்றை உண்பதை அல்லாஹ் அல்குர்ஆனில் தடை செய்துவிட்டான். ஆதலால் இறந்துபோன மீன்களை உண்ணக் கூடாது என்று ஒருவர் கூறினால், சுன்னாவில் இறந்த மீன்களை உண்பதற்கான அனுமதியளிக்கப்பட்ட விதிவிலக்கை தெரியப்படுத்துவோம். மேலும் அந்த ஹதீஸை அல்குர்ஆனிற்கு முரண்படுகிறது என்ற அடிப்படையில் எவரும் மறுக்க மாட்டோம். அதைப்போன்றே ஒவ்வொரு ஆத்மாவிற்கும் காலக்கெடு வந்துவிட்டால் அதில் சிறிதளவு முந்தவும் மாட்டாது, பிந்தவும் மாட்டாது என்ற வசனம் அல்குர்ஆனில் இருந்தாலும், சுன்னாவில் நபிமார்களுக்கு இந்தப் பொதுவான சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்க வேண்டும். அவ்வாறு ஏற்கும்போது அது அல்குர்ஆனுக்கு முரண்படுகிறது என்ற வாதம் அர்த்தமற்றதாகி விடுகிறது.

இந்த ஹதீஸை மறுப்பவர்களின் வாதம் - 2

அல்லாஹ் ஒன்றை தீர்ப்பளித்துவிட்டால் அதை ஏற்றுக்கொள்வது ஒரு முஃமினின் மீது கடமை. இறைவன் அளித்த தீர்ப்பை நிராகரித்ததோடு அத்தீர்ப்பைக் கொண்டுவந்த தூதரையும் தாக்குவது இறைத்தூதரின் பண்பாக இருக்க முடியாது. இப்படிப்பட்ட செயல் இறைநிராகரிப்பில் தள்ளிவிடும். (பார்க்க ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம், 105)

தூதரை இழிவுபடுத்தி அவர் கொண்டுவந்த கட்டளையை மூஸா عليه السلام அவர்கள் தூக்கி வீசினார்கள் என்றால் ஃபிர்அவ்னுக்கும், மூஸா عليه السلام அவர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் ஆகிவிடும். (பார்க்க: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம், 107)

நமது பதில்: ஒரு ஹதீஸ் தங்களின் கருத்திற்கு எதிராக இருக்கிறது என்பதற்காக அதனை விமர்சனம் செய்யும்போது, இறைவன் அளித்த தீர்ப்பை நிராகரித்ததோடு அத்தீர்ப்பை கொண்டுவந்த தூதரையும் தாக்குவது இறைத்தூதரின் பண்பாக இருக்க முடியாது.

இப்படிப்பட்ட செயல் இறைநிராகரிப்பில் தள்ளிவிடும்.

ஃபிர்அவ்னுக்கும், மூஸா عليه السلام அவர்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் ஆகிவிடும்.

இவ்வாறு மிகைப்படுத்திக் கூறுவது தவறான வழிமுறையாகும், வழிகேடர் களின் போக்காகும்.

இவ்வாறு வியாக்கியானங்களை எழுப்பி சில ஹதீஸ்களை மறுக்க வேண்டும் என்று கூறும் இவர்களின் வழிமுறையில் ஒருவர் சென்றால் இதே வியாக்கியானங்களை எழுப்பி அல்குர்ஆனிலுள்ள சில வசனங்களையும் மறுக்கலாம்.

இந்த விதத்தில் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்ட ஒரு நிகழ்வைப் பற்றி இங்கு பார்ப்போம்,

قَالَ رَبِّ أَنَّى يَكُونُ لِي غُلَامٌ وَكَانَتِ امْرَأَتِي عَاقِرًا وَقَدْ بَلَغْتُ مِنَ الْكِبَرِ عِتِيًّا
قَالَ كَذَلِكَ قَالَ رَبُّكَ هُوَ عَلَيَّ هَيِّنٌ وَقَدْ خَلَقْتُكَ مِنْ قَبْلُ وَلَمْ تَكُ شَيْئًا قَالَ

رَبِّ اجْعَلْ لِي آيَةً قَالَ آيَتُكَ أَلَّا تُكَلِّمَ النَّاسَ ثَلَاثَ لَيَالٍ سَوِيًّا

அதற்கவர், என் இரட்சகனே! என் மனைவியோ மலடியாக இருக்கிறாள். நானோ முதுமையின் முடிவை திட்டமாக அடைந்து விட்டேன். (இந்நிலையில்) எனக்கு எவ்வாறு ஒரு புதல்வன் உண்டாவான்? என்று கேட்டார். அ(தற்க)வன் அவ்வாறே (நடைபெறும்) என்று கூறினான். இது எனக்கு மிக்க எளிதானது இதற்கு முன்னர் நீர் ஒன்றுமில்லாமலிருந்த நிலையில் நானே உம்மைப் படைத்தேன் என்று உமதிரட்சகன் கூறினான். அதற்கவர், என் இரட்சகனே! (இதற்கு) எனக்கோர் அத்தாட்சியை ஆக்குவாயாக! என பிரார்த்தித்து)க் கேட்டார். அவன் உமக்கு அத்தாட்சியாவது நீர் சரீர சுகவாசியாக இருக்க மூன்று இரவுகள் (பகல்கள்) மனிதர்களுடன் பேச முடியாமல் இருப்பதாகும் என்று கூறினான். (அல்குர்ஆன் 19:8-9)

ஜக்கரிய்யா ﷺ அவர்களுக்கு முதுமையில் குழந்தை பிறக்கும் என்று அல்லாஹ்வே கூறிய பிறகும் ஜக்கரிய்யா ﷺ அவர்கள் நான் முதுமையில் இருக்கிறேன். என் மனைவி மலடியாக இருக்கிறாள் என்கிறார்கள். மேலும் அதற்கு ஒரு அத்தாட்சியை ஏற்படுத்தித்தா! என்று கேட்கிறார்கள். இது அல்லாஹ்வின் மீது நம்பிக்கையில்லாமல் கூறியதைப் போன்று ஆகாதா? இவ்வாறெல்லாம் வியாக்கினாங்களை எழுப்பி நாம் இந்த குர்ஆன் வசனத்தை எவ்வாறு மறுக்க மாட்டோமோ, அவ்வாறே அல்லாஹ் நபி ﷺ அவர்களுக்கு கொடுத்த வஹீயான ஹதீஸ்களையும் மறுக்காமல் ஏற்க வேண்டும்.

அல்குர்ஆனின் இந்த வசனத்தை நாம் எவ்வாறு எவ்வித மறுப்பும் இல்லாமல் ஏற்றுக் கொள்கிறோமோ, அதைப் போன்றே மூஸா அவர்கள் மலக்கின் கண்ணை பிதுக்கிய ஹதீஸையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மேலும் இந்த செயலை மூஸா அவர்கள் செய்த தவறாகவும் எடுக்க முடியாது. ஏனெனில் ஷஃபாத் தொடர்பான ஹதீஸில் மூஸா ﷺ அவர்கள் தனது தவறைப் பற்றிக் கூறும்போது தவறுதலாக கிப்தி கோத்திரத்தைச் சேர்ந்த மனிதனை கொன்றதை மட்டுமே கூறுவார்கள் என ஹதீஸ்களில் வந்துள்ளது. இந்த சம்பவத்தை கூற மாட்டார்கள் என்பதிலிருந்து இதனை அவர்கள் செய்த தவறாகவும் எடுக்க முடியாது.

ஆக, மலக்கை அடித்த சம்பவத்திற்காக மூஸா ﷺ அவர்களையும், அல்லாஹ்வை மறுத்து தன்னை ரப்பாகவும், தூதர்களை இழிவுபடுத்தவும்

செய்த ஃபிர்அவ்னையும் ஒப்பிடுவது முட்டாள் தனத்தின் முழுவடிவமாகும். இனியாவது மார்க்க விஷயங்களை எழுதும்போது சுய நினைவுடன் எழுதவும்.

இந்த ஹதீஸை மறுப்பவர்களின் வாதம் - 3

3. வந்தவரிடத்தில் தான் வாழ விரும்புவதாக பக்குவமாக சொல்லியிருக்கலாம். கண் பிதுங்குகின்ற அளவுக்கு அடித்தார்கள் என்பது மூஸா ﷺ அவர்களை மிருகம்போல் இச்சம்பவம் சித்தரிக்கிறது. (பார்க்க: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 107)

நமது பதில்: வந்தவர் வானவர் என்பதை மூஸா ﷺ அவர்கள் அறியாமல் இருந்ததாலேயே அந்த வானவரை அடித்தார்கள். இவ்வாறே இப்ராஹீம் ﷺ அவர்களும் அவர்களிடம் வந்த மலக்குகள் தங்களை அறிமுகப்படுத்தாத வரை அவர்களை அறியாதவர்களாக இருந்தார்கள் என அல்லாஹ் அல்குர்ஆனில் தெரியப்படுத்துகிறான். (அல்குர்;ஆன் 11:69-70)

وَلَقَدْ جَاءَتْ رُسُلُنَا إِبْرَاهِيمَ بِالْبُشْرَى قَالُوا سَلَامًا قَالَ سَلَامٌ فَمَا لَبِثَ أَنْ جَاءَ بِعِجْلٍ حَنِيذٍ (٦٩) فَلَمَّا رَأَى أَيْدِيَهُمْ لَا تَصِلُ إِلَيْهِ نَكِرَهُمْ وَأَوْجَسَ مِنْهُمْ خِيفَةً قَالُوا لَا تَخَفْ إِنَّا أُرْسِلْنَا إِلَى قَوْمِ لُوطٍ (٧٠)

திட்டமாக நம்முடைய தூதர்கள் இப்ராஹீமுக்கு நன்மாராயம் கொண்டுவந்து, (உமக்கு) சாந்தி உண்டாவதாக என்று கூறினர். (அதற்கு உங்களுக்குச்) சாந்தி உண்டாவதாக! என்று கூறி (விருந்தளிக்க அறுத்தப்) பொறித்ததொரு கன்றைக் கொண்டுவருவதில் அவர் தாமதிக்கவில்லை. ஆனால் அவர்களுடைய கைகள் அதன்பால் செல்லாததை அவர் கண்டபோது அவர்களைப் பற்றி சந்தேகித்தார். அவர்களைப் பற்றிய பயத்தையும் அவர் தம் மனதில் உணர்ந்தார். அப்போது அவர்கள் நீர் பயப்படாதீர். நிச்சயமாக நாங்கள் லூத்துடைய சமூகத்தார்பால் அனுப்பப்பட்டுள்ளோம் என்று கூறினார்கள். (11:69-70)

இவ்வாறே லூத் அவர்களும் மலக்குகளை அறியாதவர்களாக இருந்தார்கள். (அல்குர்;ஆன் 11:77-80))

மூஸா ﷺ அவர்கள் மலக்கை ஏன் அடித்தார்கள் என்பது தொடர்பாக

முன்சென்ற மார்க்க அறிஞர்களின் கூற்றுகளை பதிவு செய்வது, இவ்விஷயத்தில் தெளிவை ஏற்படுத்தும்.

இமாம் இப்னு குஜைமா ﵀ அவர்கள் கூறும்போது மூஸா ﵇ அவர்கள் தன் வீட்டில் ஒரு மனிதர் அனுமதியில்லாமல் நுழைந்ததால் அவரின் கண்ணை பிதுக்கினார்கள் என்கிறார்கள்.

இவ்வாறு இமாம் இப்னு குஜைமா ﵀ அவர்கள் கூறுவதற்கு காரணம் இருக்கிறது. ஏனெனில், நபி ﷺ அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஷரீஅத்தில் சில விஷயங்கள் முன்பு வழங்கப்பட்ட நபிமார்களின் ஷரீஅத்திலும் இருந்திருக்கிறது. அதில் ஒன்றான ஒருவரின் அனுமதியில்லாமல் அவர் வீட்டை எட்டிப் பார்ப்பவரின் கண்ணை குத்தலாம் என்று ஹதீஸில் வந்துள்ளது.

عَنْ أَبِى هُرَيْرَةَ عَنِ النَّبِىِّ صلى الله عليه وسلم قَالَ مَنِ اطَّلَعَ فِى بَيْتِ قَوْمٍ بِغَيْرِ إِذْنِهِمْ فَقَدْ حَلَّ لَهُمْ أَنْ يَفْقَئُوا عَيْنَهُ »

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: எவர் அனுமதியில்லாமல் மற்றவரின் வீட்டில் எட்டிப் பார்க்கிறாரோ, அவரின் கண்ணை பழுதாக்குவதற்கு வீட்டின் உரிமையாளருக்கு அனுமதியுள்ளது. (முஸ்லிம்)

عَنْ أَبِى هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللَّهِ صلى الله عليه وسلم قَالَ لَوْ أَنَّ رَجُلاً اطَّلَعَ عَلَيْكَ بِغَيْرِ إِذْنٍ فَخَذَفْتَهُ بِحَصَاةٍ فَفَقَأْتَ عَيْنَهُ مَا كَانَ عَلَيْكَ مِنْ جُنَاحٍ »

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உமது அனுமதியில்லாமல் ஒருவர் உமது வீட்டில் எட்டிப் பார்ப்பாரெனில் அவர்மீது நீ சிறு கற்களை சுண்டிவிட்டு அவரது கண்ணை பழுதாக்கினால் உம்மீது எந்தக் குற்றமுமில்லை. (அறிவிப்பாளர்: அபூ ஹுரைரா நூல்: புகாரி - 6902)

மூஸா ﵇ அவர்கள், தன் வீட்டில் அனுமதியில்லாமல் ஒரு மனிதர் நுழைவதைக் கண்டபோது அவர்களின் கண்ணை அடித்து பிதிக்கி விட்டார்கள். மலக்கு மனித தோற்றத்தில் இருந்ததால் மூஸா ﵇ அவர்கள் மலக்கை அறியாமல் இருந்தார்கள். மேலும் மலக்குமார்கள் பல தோற்றங்களில் வருபவர்கள், அவர்களுக்கு அசலான தோற்றமும்

இருக்கிறது. நபி மூஸா ﵇ அவர்களிடம் வந்த மலக்கு அசல் தோற்றத்தில் வரவில்லை, மாறாக மனித தோற்றத்தில் வந்தார்கள். வந்திருப்பவர் மனிதராக இருக்கின்றார் என்ற அடிப்படையிலேயே நபி மூஸா ﵇ அவர்கள் அவரை அடித்தார்கள்.

இந்த ஹதீஸ் மூஸா ﵇ அவர்களை மிருகம்போல் சித்தரிப்பதாக இருந்தால் மார்க்க அறிஞர்களும், ஹதீஸ்கலை வல்லுநர்களும் இதைத் தங்கள் நூலில் ஏன் பதிவு செய்தார்கள்? அவர்கள் அனைவரும் சிந்தனையற்றவர்கள். நீங்கள் மட்டும்தான் சிந்தனையாளர்களா? அவர்களுக்கு இஸ்லாமிய உணர்வு இல்லை. உங்களுக்கு மட்டும்தான் அது நிரம்பி வழிந்து கரை புரண்டோடுகிறதா?

1400 ஆண்டுகாலமாக எவருக்குமே தென்படாத இந்தக் குறை தமிழக அறிஞர்களுக்கு(?) மட்டும் தென்படுகின்றது என்றால், குறை அந்த ஹதீஸில் இல்லை இவர்களின் மூளையில்தான் இருக்கிறது என்பதை விளங்கலாம்.

இந்த ஹதீஸை இமாம் புகாரி, இமாம் முஸ்லிம், ஹதீஸ்கலை வல்லுநர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மார்க்க அறிஞர்கள் ஆகிய அனைவரும் ஏற்றிருக்கிறார்கள். மேலும் அதைத் தங்கள் நூலில் பதிவும் செய்திருக்கிறார்கள். வழிகேடர்களும், பித்அத்வாதிகளுமே இந்த ஹதீஸை மறுத்திருக்கிறார்கள்.

இமாம் கத்தாபி ﵀ அவர்கள் யார் இந்த ஹதீஸை மறுக்கிறார்களோ அவர்களை நாத்திகர்கள், பித்அத்வாதிகள் என்று கூறுகிறார்கள்.

இமாம் இப்னு குஜைமா ﵀ அவர்கள் இந்த ஹதீஸை பித்அத்வாதிகளும், ஜஹமிய்யாக்களும் மறுக்கிறார்கள் என்கிறார்கள்.

மேலும் பல அறிஞர்கள் இந்த ஹதீஸை மறுத்தவர்களை விமர்சித்துக் கடுமையான வார்த்தைப் பிரயோகத்தை பயன்படுத்தியிருக்கிறார்கள்.

இமாம் இப்னு குதாமா அல்மக்தஸி ﵀ அவர்கள் அகீதா தொடர்பான அவர்களின், ‘லும்அத்துல் இஅதிகாத்’ என்ற நூலில் நபி ﷺ அவர்களின் செய்திகளை நம்ப வேண்டும் என்று தலைப்பிட்டு பின்னர் கூறுகிறார்கள். நபி ﷺ அவர்களிடமிருந்து சரியான முறையில் அறிவிக்கப்பட்ட அனைத்து தகவல்களையும் நம்புவது அவசியமானதாகும். அந்தத் தகவல்களை

நாம் பார்த்து இருந்தாலும் சரியே! அல்லது நம்மைவிட்டு மறைந்ததாக இருந்தாலும் சரியே! அவை அனைத்தும் உண்மையானது, சத்தியமானது என்பதை நாம் அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும். அவை நமது அறிவிற்கு புலப்பட்டாலும் சரியே! புலப்படவில்லை என்றாலும் சரியே! அதனுடைய உண்மை நிலையை நாம் அறியமாட்டோம். உதாரணத்திற்கு மிஅராஜ் பயணம், மூஸா ﷺ அவர்கள் மலக்கை அடித்ததால் மலக்கின் கண் பிதுங்கியது என்ற சம்பவம், கியாமத் நாளின் அடையாளங்கள், கப்று வேதனை, மறுமையில் ஏற்படும் நிகழ்வுகள் போன்ற பல தகவல்களை குறிப்பிடுகிறார்கள். (நூல்: லும்அத்துல் இஅதிகாத் - பக்கம், 24)

இமாம் இப்னு குதாமா ﷺ அவர்களின் லும்அத்துல் இஅதிகாத் நூலிற்கு விரிவுரை எழுதிய விரிவுரையாளர்கள் கூறுகிறார்கள், மிஅராஜ் சம்பவம், கியாமத் நாளின் அடையாளங்கள் மற்றும் மறுமை நம்பிக்கையுடன் மூஸா ﷺ அவர்கள் மலக்கை அடித்த சம்பவத்தை சேர்த்து குறிப்பிடுவதின் மூலம் நபி ﷺ அவர்கள் கூறிய ஆதாரப்பூர்வமான தகவல்கள் இவ்வுலகைப் பற்றியதாக இருந்தாலும், மறுமையைப் பற்றியதாக இருந்தாலும் அவற்றை அவசியமாக நம்ப வேண்டும். ஏனெனில், இவ்வாறு நபி ﷺ அவர்கள் கூறிய தகவல்கள் மறைவான நம்பிக்கையோடு தொடர்புடையவையாகும். அவற்றை மறுக்காமல் அவசியம் நம்ப வேண்டும் என்று கூறுகிறார்கள். (பார்க்க - தய்ஸீர் லும்அத்துல் இஅதிகாத், பக்கம் - 242, ஷரஉ லும்அத்துல் இஅதிகாத், பக்கம் -29)

அல்லாஹ் அல்பகரா அத்தியாயத்தில் கூறுகிறான்:

الم (١) ذَٰلِكَ الْكِتَابُ لَا رَيْبَ فِيهِ هُدًى لِلْمُتَّقِينَ (٢) الَّذِينَ يُؤْمِنُونَ بِالْغَيْبِ وَيُقِيمُونَ الصَّلَاةَ وَمِمَّا رَزَقْنَاهُمْ يُنْفِقُونَ (٣)

அலிஃப், லாம், மீம் இது வேதமாகும். இதில் எத்தகைய சந்தேகமுமில்லை. பயபக்தியுடையோருக்கு (இது) நேர்வழி காட்டியாகும். அவர்கள் எத்தகை யோரென்றால் மறைவானவற்றை நம்பிக்கை கொள்வார்கள், தொழுகை யையும் நிறைவேற்றுவார்கள், நாம் அவர்களுக்கு வழங்கியவற்றிலிருந்து செலவும் செய்வார்கள். (அல்பகரா: 1-3)

இஸ்லாமிய மார்க்கத்திலுள்ள மறைவான தகவல்களை நம்புவது முஸ்லிம்கள்மீது கட்டாயமாகும். அதனை அறிவுக்குப் புறம்பாக இருக்கிறது;

எதிராக இருக்கிறது என்று மறுப்பது தவறான நம்பிக்கையாகும் என்பதை முஸ்லிம்கள் அறிய வேண்டும்.

இந்த ஹதீஸை மறுப்பவர்களின் வாதம்

4. மூஸா ﷺ அவர்கள் மரணத்தை விரும்பாதவர்களாக இருந்தார்கள். மரணமற்ற வாழ்வை விரும்பினார்கள்.

மரணமே இல்லாத வாழ்க்கையை எனக்கு கொடுப்பதாக இருந்தால் கொடு என்ற கருத்தில் மூஸா ﷺ கூறியுள்ளார். (நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் 106)

நமது பதில்: மூஸா ﷺ அவர்கள் மரணத்தை வெறுத்துள்ளார்கள் என்று கூறுபவர்கள் முறையாக ஹதீஸ்களை அணுகத் தெரியாதவர்களாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில், ஹதீஸின் கடைசிப் பகுதி அவர்கள் மரணத்தை வெறுக்கவில்லை என்பதை தெளிவுபடுத்துகிறது.

பிறகு. அல்லாஹ் அவரது கண்ணை சரிப்படுத்திவிட்டு. நீர் மீண்டும் அவரிடம் சென்று அவரை ஒரு மாட்டின் முதுகில் கையை வைக்கச் சொல்லி அவரது கை எத்தனை ரோமங்களை அடக்கிக்கொள்கிறதோ அத்தனை வருடங்கள் உயிர் வாழலாம் என்பதைக் கூறும் என அனுப்பி வைத்தான். (அவ்வாறே அவர் மூஸா ﷺ அவர்களிடம் வந்து கூறியபோது) மூஸா ﷺ அவர்கள் இரட்சகனே! அதற்குப் பிறகு, எனக் கேட்டதும் அல்லாஹ் மரணம்தான் என்றான். உடனே மூஸா ﷺ அவர்கள் அப்படியானால், இப்பொழுதே தயார் எனக் கூறிவிட்டு அல்லாஹ்விடம் (பைத்துல் முகத்தஸ் என்னும்) புனிதத் தலத்திலிருந்து கல்லெறியும் தூரத்திலுள்ள இடத்தில் தம் உயிரைக் கைப்பற்றுமாறு வேண்டிக் கொண்டார்கள். மேலும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறும்போது, நான் மட்டும் அங்கு (பைத்துல் முகத்தஸில்) இருந்தால் உங்களுக்கு அந்த செம்மணற் குன்றிற்கருகில் உள்ள பாதையிலிருக்கும் மூஸா ﷺ அவர்களது அடக்கத் தலத்தைக் காட்டியிருப்பேன் என்றார்கள். (புகாரி - 1339)

இந்த ஹதீஸை மறுக்கின்ற வழிகேடர்களும் அவர்களின் வழியில் செல்லுகின்ற இவர்களைத் தவிர வேறு எவருமே இந்த ஹதீஸை வைத்து மூஸா ﷺ அவர்கள் மரணத்தை விரும்பாதவர்களாகவே இருந்தார்கள் என்று கூறவில்லை.

ஒரு ஹதீஸிலிருந்து அதனுடைய முன்பின் வாசகத்தை கவனித்தும், அது தொடர்பான மற்ற தகவல்களை கவனித்துமே சட்டங்களை எடுக்க வேண்டும். அல்லாஹ் அல்மாஊன் என்ற அத்தியாயத்தில் தொழுகையாளிகளுக்குக் கேடுதான் என்று கூறுகிறான். அதற்கடுத்த வசனத்தில் அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையை நிறைவேற்றுவதைவிட்டு பராமுகமாக இருப்பார்கள் என்கிறான். இதுபோன்ற இடத்தில் முன்பின் வாசகங்களை கவனித்தே சட்டங்களைக் கூற வேண்டும்.

மரணமே இல்லாத வாழ்க்கையை எனக்குக் கொடுப்பதாக இருந்தால் கொடு என்ற கருத்தில் மூஸா கூறியுள்ளார். (நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் 106)

நமது பதில்: மூஸா ﵇ அவர்கள் ஒரு நபியாக இருக்கும்போது மரணமே இல்லாத வாழ்க்கை தனக்கு கிடைக்க வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். நபி என்ன? கடவுளே இல்லை என்று கூறும் நாத்திகன்கூட இப்படி எதிர்பார்க்க மாட்டான் என்றிருக்கும்போது இந்த ஹதீஸை ஏற்பதால் இவ்வாறு கருத்து வரும் என்றால் அதை இவர்களின் பாஷையில் சொல்வதாக இருந்தால் கூறுகெட்ட கருத்து என்றுதான் சொல்ல வேண்டும்.

மூஸா ﵇ அவர்கள் மரணத்தை வெறுப்பவர்களாக இருந்தால், அவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்போது அவ்வாய்ப்பை நன்கு பயன்படுத்தியிருப்பார்கள். ஆனால், மூஸா ﵇ அவர்கள் மரணத்தை தேர்ந்தெடுத்ததாக ஹதீஸின் பிற்பகுதி கூறுகிறது. எனவே அவர்கள் மரணத்தை வெறுத்தார்கள் என்று இந்த ஹதீஸிலிருந்து கருத்தைக் கூற முடியாது.

இந்த ஹதீஸை மறுப்பவர்களின் வாதம்

5. வானவர்கள் மனித வடிவில் வரும்போதெல்லாம் தங்களை அறிமுகப் படுத்தாமல் இருந்ததில்லை. (நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 112)

நமது பதில்: வானவர்கள் மனித வடிவில் வரும்போது சில நேரங்களில் தங்களை அறிமுகப்படுத்தாமல் இருந்திருக்கிறார்கள்.

நபி ﷺ அவர்களிடம் ஜிப்ரில் ﵇ அவர்கள் மனிதத் தோற்றத்தில் வந்தபோது நபி ﷺ அவர்கள் ஜிப்ரில் ﵇ அவர்களை சில நேரங்களில் அறியாதவர்களாக இருந்தார்கள்.

قال هذا جبريل جاءكم يعلمكم دينكم ما أتاني في صورة الا عرفته غير هذه الصورة تعليق شعيب الأرنؤوط : إسناده صحيح على شرط مسلم

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: இவர் ஜிப்ரில் உங்களுக்கு உங்களின் மார்க்கத்தைப் பற்றி தெரிவிப்பதற்காக வந்தார். ஜிப்ரில் அவர்கள் எந்தத் தோற்றத்தில் என்னிடம் வந்தாலும் அவர்களை அறிந்துகொள்வேன். ஆனால், இந்தத் தோற்றத்தில் என்னால் அவர்களை அறிய முடியவில்லை என்றார்கள். (நூல்: அஹமத் - 374, ஸஹீஹ்)

இந்த ஹதீஸை மறுப்பவர்களின் வாதம்

6. மலக்குகள் அல்லாஹ் இட்ட கட்டளையை முழுமையாக நிறைவேற்றக் கூடியவர்கள்.

ஆனால், இந்த ஹதீஸ் உயிரை வாங்குமாறு அல்லாஹ் இட்ட கட்டளையை மலக்கால் செய்ய முடியவில்லை. மூஸா நபியின் தாக்குதலால் கண் பிதுங்கும் அளவிற்குப் பலவீனமானவராக மலக்கு இருந்தார் என்று கூறுகிறது. (பார்க்க நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம்-111)

நமது பதில்: அல்லாஹ் மூஸா عليه السلام அவர்களிடம் அனுப்பிய மலக்கிடம் என்ன கட்டளையிட்டான் என்பதை நாம் அறிய முடியாது. மலக்கு உயிரை கைப்பற்றாமல் முதல் முறை திரும்பிச் செல்கிறார் என்றால், அவர் மூஸா عليه السلام அவர்களின் உயிரை கைப்பற்றுவதற்காக வரவில்லை என்பதை அறியலாம். மேலும், அவர் உயிரை கைப்பற்றாமல் தோல்வியோடு திரும்பினார் என்பது அல்லாஹ் நபிமார்களுக்கு வாழ்வு மற்றும் மரணத்தை தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை வழங்குகிறான் என்று கூறிய நபி ﷺ அவர்களின் கூற்றை மறுப்பதாகும்.

மூஸா عليه السلام அவர்களுடன் மலக்கு ஏன் கடுமையாக நடக்கவில்லை,

எனது இரட்சகனே! உனது அடியாரான மூஸா என் கண்ணை பிதுங்க செய்துவிட்டார். உனது அருள் மட்டும் அவர்மீது இல்லையென்றால் அவரோடு நானும் கடுமையாக நடந்திருப்பேன். (நூல்: அஹமத் - 10484) ஸஹீஹ்

மூஸா عليه السلام அவர்கள்மீது அல்லாஹ்வின் அருள் இருப்பதாலேயே

அவர்களோடு மலக்கு கடுமையாக நடந்துக் கொள்ளவில்லை என்பதை இந்த ஹதீஸின் மூலம் அறியலாம்.

மலக்கின் கண்ணை பிதுக்கியதினால் பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்று கூறுவது ஏற்புடையதல்ல. ஏனெனில், மனிதனுக்கும் மலக்குக்கும் மத்தியில் வேறுபாடு உள்ளது. பழிவாங்குதல் என்பது மனிதர்களுக்கு மத்தியில் நடைமுறைப்படுத்தக் கூடியதாகும். மலக்குகளுக்கு அசலான தோற்றம் இருக்கிறது. நபி ﷺ அவர்கள் ஜிப்ரில் عليه السلام அவர்களை அவர்களின் அசலான தோற்றத்தில் இரண்டு முறை பார்த்திருக்கிறார்கள். மலக்குகள் மனித தோற்றத்தில் வருவதை வைத்து இதுதான் அவர்களின் அசலான தோற்றம் என்று கூறுவது தவறாகும். மூஸா عليه السلام அவர்கள் மனிதத் தோற்றத்தில் வந்த மலக்கைத்தான் அடித்தார்கள் என்பதை இந்த இடத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த ஹதீஸை மறுப்பவர்களின் வாதம்

7. இந்தச் சம்பவம் நடப்பதற்கு முன்னால் வரை உயிர் வாங்கும் மலக்கு மார்கள் மனிதனுடைய கண்களுக்குத் தெரியும் வகையில் வந்தார்களாம். மூஸா மலக்கை அடித்து கண்ணை எடுத்துவிட்டதால் இதற்குப் பிறகு மறைமுகமாக வந்து உயிரைக் கைப்பற்றினார்களாம். இவ்வாறு அஹ்மதில் 10484 என்ற எண்ணில் இடம்பெற்ற செய்தி கூறுகிறது.

மலக்குமார்களை முற்றிலும் மனிதர்களைப்போல் மனிதர்களைவிடக் கீழ்நிலையில் சித்தரிக்கும் இச்சம்பவம் பொய்யிலும் பெரும் பொய் என்பதை அறிந்துகொள்ள பெரிய ஆய்வு ஒன்றும் வேண்டியதில்லை. (நூல் ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 110)

நமது பதில்:

عَنْ أَبِي هُرَيْرَةَ عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ وَقَالَ يُونُسُ رَفَعَ الْحَدِيثَ إِلَى النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَدْ كَانَ مَلَكُ الْمَوْتِ يَأْتِي النَّاسَ عِيَانًا قَالَ فَأَتَى مُوسَى فَلَطَمَهُ فَفَقَأَ عَيْنَهُ فَأَتَى رَبَّهُ عَزَّ وَجَلَّ فَقَالَ يَا رَبِّ عَبْدُكَ مُوسَى فَقَأَ عَيْنِي وَلَوْلَا كَرَامَتُهُ عَلَيْكَ لَعَنُفْتُ بِهِ وَقَالَ يُونُسُ لَشَقَقْتُ عَلَيْهِ

فَقَالَ لَهُ اذْهَبْ إِلَى عَبْدِي فَقُلْ لَهُ فَلْيَضَعْ يَدَهُ عَلَى جِلْدِ أَوْ مَسْكِ ثَوْرٍ فَلَهُ بِكُلِّ شَعَرَةٍ وَارَتْ يَدُهُ سَنَةٌ فَأَتَاهُ فَقَالَ لَهُ مَا بَعْدَ هَذَا قَالَ الْمَوْتُ قَالَ فَالْآنَ قَالَ فَشَمَّهُ شَمَّةً فَقَبَضَ رُوحَهُ قَالَ يُونُسُ فَرَدَّ اللَّهُ عَزَّ وَجَلَّ عَيْنَهُ وَكَانَ يَأْتِي النَّاسَ خُفْيَةً

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: உயிர் பறிக்கும் மலக்கு மனிதர்கள் பார்க்கும் வகையில் உயிரை எடுத்து வந்தார்கள். மூஸா عليه السلام அவர்களிடம் உயிர் பறிக்கும் வானவர் வந்தபோது மூஸா عليه السلام அவர்கள் மலக்கின் கண்ணை அடித்து பிதுக்கிவிட்டார்கள். பிறகு, அந்த மலக்கு அல்லாஹ்விடம் வந்து எனது இரட்சகனே! உனது அடியாரான மூஸா என் கண்ணை பிதுங்கச் செய்துவிட்டார். உனது அருள் மட்டும் அவர்மீது இல்லையென்றால், அவரோடு நானும் கடுமையாக நடந்திருப்பேன் என்றார். பிறகு, அல்லாஹ் அம்மலக்கிடம் எனது அந்த அடியாரிடம் சென்று அவரின் கையை ஒரு மாட்டின் தோள் அல்லது சதையின் மீது வைக்கச் சொல்வீராக! அவரது கை எத்தனை ரோமங்களை அடக்கிக்கொள்கிறதோ அத்தனை வருடங்கள் உயிர் வாழலாம் என்பதை அவரிடம் கூறும் என்றான். அந்த மலக்கு மூஸா عليه السلام அவர்களிடம் வந்து கூறியவுடன், அதற்குப் பிறகு என்ன? என்று மூஸா عليه السلام அவர்கள் கேட்டபோது, மரணம், என்று அந்த மலக்கு பதிலளித்தார். அப்படியென்றால், இப்போதே உயிரை எடுத்துக் கொள்ளுங்கள் என மூஸா عليه السلام அவர்கள் கூறியவுடன் அம்மலக்கு மூஸா عليه السلام அவர்களுக்கு ஒருமுறை மரணத்தை நுகரச் செய்து அவரின் உயிரை கைப்பற்றினார். அல்லாஹ் அந்த மலக்கின் கண்ணை சரிசெய்த பிறகு அவர் இச்சம்பவத்திற்கு பிறகு மனிதர்களிடம் மறைமுகமாக வந்து உயிரை கைப்பற்றி வருகிறார் என நபி ﷺ அவர்கள் கூறினார்கள். (அஹமத் - 10484)

இந்த ஹதீஸ் ஸஹீஹானதாகும். ஷெய்க் அல்பானி رحمه الله அவர்கள் இந்த ஹதீஸை அஸ்ஸில்ஸிலத்து ஸஹீஹா என்ற நூலில் ஸஹீஹானது என குறிப்பிட்டுவிட்டு கூறுகிறார்கள்:

இந்த ஹதீஸ் மூன்று தொடர்களில் வந்துள்ளது. அதில் சில அறிவிப்புகளில் சில வார்த்தைகள் கூடுதலாக இடம்பெற்றுள்ளது.

1. தாவுஸ், அபூஹுரைரா வழியாக அறிவித்தல் (புகாரி, முஸ்லிம்).

2. ஹம்மாம் பின் முனபஹ், அபூஹுரைரா வழியாக அறிவித்தல் (முஸ்லிம்).

3. அம்மார் பின் அபூ அம்மார், அபூஹுரைரா வழியாக அறிவித்தல் (அஹமத், இப்னு ஜரீர் அத்தப்ரி அத்தாரிக் 1/224 என்ற நூலில்)

இம்மூன்று வழிகளிலும் இந்த ஹதீஸ் ஸஹீஹாகும் என்று குறிப்பிட்டுவிட்டு இந்த ஹதீஸை விமர்ச்சிப்பவர்களுக்கு சரியான, தெளிவான மறுப்பையும் பதிவு செய்திருக்கிறார்கள். (பார்க்க அஸ்ஸில்ஸிலத்துஸ் ஸஹீஹா, ஹதீஸ் எண்- 3279)

ஹதீஸ்களை விமர்சனம் செய்வதாக இருந்தால், ஹதீஸ்கலையின் விதிகளுக்குட்பட்டு விமர்சனம் செய்வதே சரியான வழிமுறையாகும். ஆனால், இவர்கள் இந்த ஹதீஸை விமர்சனம் செய்வதற்கு பயன்படுத்திய வழியைப் பாருங்கள்.

மலக்குமார்களை முற்றிலும் மனிதர்களைப்போல் மனிதர்களைவிடக் கீழ்நிலையில் சித்தரிக்கும் இச்சம்பவம் பொய்யிலும் பெரும் பொய் என்பதை அறிந்து கொள்ள பெரிய ஆய்வு ஒன்றும் வேண்டியதில்லை. (நூல் ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 110)

இவர்கள் வாதப்படி ஹதீஸ்களை விமர்சனம் செய்வதற்கு ஆய்வு எதுவும் தேவையில்லை என்றால், ஹதீஸ்கலையில் விதிகள் ஏன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது?

ஹதீஸ்களை விமர்சனம் செய்வதற்கு மார்க்கச் சட்டங்களை அறிந்தவர், அறியாதவர் என்ற வித்தியாசமே இல்லாமல் எவர் வேண்டுமானாலும் விமர்ச்சிக்கலாம். அதன்படிதான் இந்த ஹதீஸையும் இவர்கள் விமர்சனம் செய்கிறார்களா?

ஒரு ஆதாரப்பூர்வமான ஹதீஸ், தனது அறிவிற்கு எதிரானதாக இருக்கிறது என்பதற்காக அந்த ஹதீஸை மறுத்து அறிவுக்கு முக்கியத்துவம் தருவது வழிகேடாகும். மறுமையில் நரகவாசிகள் மலக்குகளிடம் கூறுவார்கள்:

وَقَالُوا لَوْ كُنَّا نَسْمَعُ أَوْ نَعْقِلُ مَا كُنَّا فِي أَصْحَابِ السَّعِيرِ

நாங்கள் செவியுற்றோ, அல்லது நாங்கள் விளங்கியோ இருந்திருந்தால்,

நாங்கள் நரகவாசிகளில் ஆகியிருக்க மாட்டோம் என்றும் அவர்கள் கூறுவார்கள். (67:10)

நரகவாசிகள்கூட மறுமையில் மார்க்கத் தகவல்களை முதலில் கேட்டிருந்து, அதனை விசுவாசித்து, பிறகு அறிவை பயன்படுத்தியிருந்தால் நரகத்திற்கு வந்திருக்க மாட்டோமே என வருந்துவார்கள். ஆகையால், மார்க்க விவகாரங்களில் அறிவை முன்னிலைப்படுத்தாமல் இறைச் செய்திக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

இந்த ஹதீஸை மறுப்பவர்களின் வாதம்

8. மூஸா ﷺ அவர்கள் தூதுத்துவத்திற்குப் பிறகு பொறுமைக் கடலாக இருந்தார்கள். (நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 116)

நமது பதில்: இந்த வாதத்தை வைத்து மூஸா ﷺ அவர்கள் தூதுத்துவத்திற்குப் பிறகு பொறுமைக் கடலாக இருந்ததால் இச்சம்பவம் நடந்திருக்க முடியாது என்று இந்த ஹதீஸை மறுக்கிறார்கள்.

மூஸா ﷺ அவர்கள் பொறுமையானவர்கள் என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. எனினும், மூஸா ﷺ அவர்கள் தூதுத்துவத்திற்குப் பிறகும் சில நேரங்களில் கோபப்பட்டிருக்கிறார்கள். அச்சம்பவங்களை அல்லாஹ் அல்குர்ஆனிலேயே கூறுகிறான்.

وَلَمَّا رَجَعَ مُوسَى إِلَى قَوْمِهِ غَضْبَانَ أَسِفًا قَالَ بِئْسَمَا خَلَفْتُمُونِي مِنْ بَعْدِي أَعَجِلْتُمْ أَمْرَ رَبِّكُمْ وَأَلْقَى الْأَلْوَاحَ وَأَخَذَ بِرَأْسِ أَخِيهِ يَجُرُّهُ إِلَيْهِ قَالَ ابْنَ أُمَّ إِنَّ الْقَوْمَ اسْتَضْعَفُونِي وَكَادُوا يَقْتُلُونَنِي فَلَا تُشْمِتْ بِيَ الْأَعْدَاءَ وَلَا تَجْعَلْنِي مَعَ الْقَوْمِ الظَّالِمِينَ (١٥٠)

மேலும் (இதனை அறிந்த மூஸா) கோபங்கொண்டவராக பெரும் வருத்தம் நிறைந்தவராக தன் சமூகத்தாரிடம் திரும்பி வந்தபொழுது (அவர்களிடம்) நான் இல்லாத சமயத்தில் நீங்கள் செய்த (இச்செயலான)து மிக்க கெட்டது. உங்கள் இரட்சகனின் கட்டளை வருவதை நீங்கள் அவசரப்படுகின்றீர்களா? என்று கூறி (அல்லாஹ்வின் கட்டளைகள் எழுதப்பட்ட) பலகைகளைப் போட்டுவிட்டு தன் சகோதரரின் தலை(முடி)யைப் பிடித்துத் தன் பக்கம்

இழுத்தார். அவர் என் தாயின் மகனே! இந்த மக்கள் நிச்சயமாக என்னை பலவீனப்படுத்திவிட்டனர். என்னைக் கொலை செய்துவிடவும் முற்பட்டனர். என்னுடைய விரோதிகள் என்னைப் பார்த்து சிரிக்குமாறு நீர் செய்துவிடாதீர். இந்த அக்கிரமக்கார சமூகத்தாருடன் என்னை ஆக்கியும் விடாதீர்கள் என்று கூறினார். (அல்குர்ஆன்,7:150)

நபி மூஸா ﷺ அவர்கள் தூதுத்துவத்திற்குப் பிறகு அல்லாஹ் அவர்களுக்கு அருளிய தவ்ராத் வேதத்தை தூக்கி எறிந்தார்கள். தனது சகோதரரும், நபியுமான ஹாரூன் ﷺ அவர்களிடம் கடுமையாக நடந்துகொண்டார்கள் என அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான். இது மூஸா ﷺ அவர்கள் தூதராக நியமிக்கப்பட்ட பிறகு நடந்ததாகும். இவர்களின் வாதப்படி இந்த வசனத்தை இவர்கள் மறுக்க வேண்டியது வரும். நபி மூஸா ﷺ அவர்கள் மலக்கை அடித்த ஹதீஸை என்ன வாதங்களை வைத்து இவர்கள் மறுக்கிறார்களோ, அதே வாதங்களை முன்வைத்து அல்குர்ஆனில் கூறப்பட்ட இச்சம்பவத்தையும் ஒருவர் மறுக்க முடியும்.

மூஸா ﷺ அவர்கள் தூதுத்துவத்திற்குப் பிறகு நடந்த சம்பவத்தை அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதை நாம் எவ்வாறு நம்புவோமோ அதைப் போல மற்றொரு வஹீயான சுன்னாவில் கூறப்பட்டுள்ளதையும் அவ்வாறே எவ்வித மறுப்பில்லாமல் நம்புவோம். அதுவே நேர்வழியாகும்.

இந்த ஹதீஸை மறுப்பவர்களின் வாதம்

9. இமாம் கஸ்ஸாலி ﷺ அவர்கள் அஸ்ஸுன்னா என்ற தன்னுடைய நூலில் நாம் வைக்கின்ற கேள்விகளை முன்வைத்து இந்த ஹதீஸ் நபி ﷺ அவர்கள் சொன்னது கிடையாது என்று தெரிவித்துள்ளார்கள். (பார்க்க நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 117)

நமது பதில்: இமாம் கஸ்ஸாலியின் கொள்கை என்ன? அவர்களின் மார்க்க ஞானத்தின் அளவுகோல் என்ன? என்பதை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். ஹதீஸ்கலை பற்றிய முறையான கல்வி அவர்களிடத்தில் இருக்கவில்லை. ஹதீஸ்களில் ஸஹீஹான மற்றும் பலவீனமான ஹதீஸ்களை பிரித்தறியக்கூடிய கல்வியை அவர்கள் அறிந்திருக்கவில்லை. இந்த நிலையில் இருப்பவரின் வழியைப் பின்பற்றி அவர் வைத்த வாதங்களையே தாங்களும் வைக்கிறோம் என்று கூறுபவர்களை என்னவென்று சொல்வது.

ஷெய்க் நாஸிருத்தீன் அல்பானி ﵀ அவர்கள் கூறுகிறார்கள்:

இந்த ஹதீஸை இமாம் அல்கஸ்ஸாலி மறுத்திருக்கிறார்கள் என்று கூறிவிட்டு, பிறகு இமாம் புகாரியிலிருந்து ஹாஃபிழ் இப்னு ஹஜர் வரை பல ஹதீஸ்கலை வல்லுநர்கள் ஸஹீஹான ஹதீஸ் என கூறியிருக்கும் ஒரு ஹதீஸை ஒருவர் ஹதீஸ்களின் விதிகளையெல்லாம் தவிர்த்துவிட்டு தனது சொந்த அறிவை அடிப்படையாக வைத்து அந்த ஹதீஸை விமர்சனம் செய்து மறுக்கிறார். அந்த ஒருவரின் ஆய்வுதான் சரியானது என்றால் இத்தனை இமாம்களும் அந்த ஹதீஸை ஆதாரப்பூர்வமானது என்று கூறியது தவறா? இந்த ஒருவர் மட்டும்தான் அறிவாளியா? (நூல்: அஸ்ஸில்ஸிலத்து ஸஹீஹா)

எனவே ஹதீஸ்கலை தொடர்பானவற்றில் அக்கலையை அறிந்தவர்களின் ஆய்வுகளை எடுப்பதே சரியான வழிமுறையாகும்.

கஸ்ஸாலி ﵀ அவர்கள் இந்த ஹதீஸை விமர்சனம் செய்திருக்கிறார்கள் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், இமாம் கஸ்ஸாலியோடு ஒப்பிடவே முடியாத வகையில் பன்மடங்கு ஹதீஸ்கலையில் உயர்ந்திருக்கும் இமாம்களான இமாம் புகாரி, முஸ்லிம் போன்ற பல இமாம்கள் இந்த ஹதீஸை சரியெனக் கூறியிருக்கிறார்கள்.

மூஸா ﵇ அவர்கள் மலக்கை அடித்ததாக வந்துள்ள ஹதீஸ் சரியானதாகும். முஸ்லிம் அறிஞர்கள், ஹதீஸ்கலை வல்லுநர்கள் ஆகிய அனைவரும் இந்த ஹதீஸை ஸஹீஹானது என்று கூறியிருக்கிறார்கள். எனவே நாமும் முன்சென்ற நல்லோர்களின் வழியில் இந்த ஹதீஸை நம்புவோம்.

அல்குர்ஆனில் நீக்கம் செய்யப்பட்டதா?

عَنْ عَائِشَةَ أَنَّهَا قَالَتْ كَانَ فِيمَا أُنْزِلَ مِنَ الْقُرْآنِ عَشْرُ رَضَعَاتٍ مَعْلُومَاتٍ يُحَرِّمْنَ. ثُمَّ نُسِخْنَ بِخَمْسٍ مَعْلُومَاتٍ فَتُوُفِّىَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم وَهُنَّ فِيمَا يُقْرَأُ مِنَ الْقُرْآنِ. (مسلم)

ஆயிஷா ﵂ அவர்கள் கூறியதாவது: குறிப்பிட்ட பத்து தடவைகள் பால் அருந்தினால் பால்குடி உறவு உண்டாகும் என்ற வசனம் (முதலில்) குர்ஆனில் அருளப்பட்டிருந்தது. பின்னர் பத்து தடவைகள் என்பது குறிப்பிட்ட ஐந்து தடவைகள் என மாற்றப்பட்டது. இவ்வசனம் மக்கள் சிலரால் ஓதப்பட்டுவந்த காலத்தில்தான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இறந்தார்கள். (முஸ்லிம் - 2876)

இந்த ஹதீஸை மறுப்பதற்கான காரணம்

திருமணமானவர்கள் விபச்சாரம் புரிந்தால் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும், பருவ வயதை அடைந்தவர்களுக்கு பத்து முறை பால் கொடுத்தால் பால்குடி உறவு ஏற்பட்டுவிடும் என்ற வசனங்கள் ஒரு ஏட்டில் எழுதப்பட்டு என் வீட்டு கட்டிலின் கீழ் இருந்தது. நபி ﷺ அவர்கள் நோய்வாய்ப்பட்டபோது அவர்களை கவனிப்பதில் கவனம் செலுத்தியதால் ஒரு ஆடு நுழைந்து அதை சாப்பிட்டுவிட்டது. (அஹமத் - 20112)

ஐந்து தடைவ பால்குடித்தால் பால்குடி உறவு ஏற்பட்டுவிடும் என்ற வசனம் நபி ﷺ அவர்கள் இறக்கும் வரை குர்ஆனில் இருந்தது. அதை மக்களும் ஓதிக் கொண்டிருந்தார்கள். பிராணி ஒன்று வீட்டினுள் நுழைந்து எழுதி வைக்கப்பட்டிருந்த அந்த வசனத்தை உண்டுவிட்டது. அதனால் இன்று அந்த வசனம் குர்ஆனில் இல்லை. (பார்க்க நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் 128)

இந்த ஹதீஸை மறுப்பதற்கு இவர்கள் காரணங்களாக கூறுகின்றவை:

- *அல்குர்ஆனில் இருந்த இரண்டு வசனங்களை ஆடு சாப்பிட்டு விட்டதால் அந்த வசனங்கள் அல்குர்ஆனில் இல்லை.*

- *அல்குர்ஆனில் இப்படி இரு வசனங்கள் இருந்தது உண்மையென்றால் அந்த இரண்டு வசனங்களும் இன்று நம்மிடம் இருக்கின்ற குர்ஆனில் இல்லை. அந்த இரண்டு வசனங்களும் எங்கே?*

- *நபி ﷺ அவர்களின் காலத்தில் ஒட்டுமொத்த மக்களுக்கும் அல்லாஹ் இறக்கிய வசனத்தை ஆயிஷா அவர்களைத் தவிர்த்து அந்தச் சமுதாயம் முழுவதும் எப்படி மறந்திருக்கும்?*

இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கான பதிலை இனி காண்போம்.

முதல் குற்றச்சாட்டிற்கான நமது பதில்: அல்குர்ஆனில் இருந்த இரண்டு வசனங்களை ஆடு சாப்பிட்டுவிட்டது என்று முஸ்னத் அஹமதில் வரும் ஹதீஸை அடிப்படையாக வைத்து இவர்கள் முஸ்லிமிலுள்ள ஹதீஸை மறுக்கிறார்கள். முஸ்னத் அஹமதில் இடம்பெற்றுள்ள ஹதீஸ் ஆதாரப்பூர்வமானதா என்பதை முதலில் பார்ப்போம்.

அந்த ஹதீஸின் அறிவிப்பாளர் தொடர்

ஆயிஷா -

அம்ரா -

அப்துல்லாஹ் பின் அபீபக்ர் -

முஹம்மத் பின் இஸ்ஹாக்

இதில் நான்காவது அறிவிப்பாளரான முஹம்மத் பின் இஸ்ஹாக் முதல்லஸ் அறிவிப்பாளர் ஆவார்.

முதல்லஸ்: ஒரு அறிவிப்பாளர் பல ஹதீஸ்களை ஒரு அறிஞரிடமிருந்து அறிவிப்பார். அந்த அறிஞர் சொல்லாத சில ஹதீஸ்களையும் அந்த அறிஞரோடு தொடர்புப்படுத்தி அறிவிப்பார். உண்மையில் அந்த குறிப்பிட்ட சில ஹதீஸ்களை வேறோரு அறிஞரிடமிருந்து கேட்டிருப்பார். ஆனால் அந்த குறிப்பிட்ட ஹதீஸை அறிவிக்கும்போது இரண்டாவது அறிஞரின் பெயரை குறிப்பிடாமல் முதலாவது அறிஞரின் பெயரை குறிப்பிட்டு (قال)கால அல்லது (عن) அன் போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி அறிவிப்பார். முதலாவது அறிஞரிடமிருந்துதான் இந்த ஹதீஸையும் அறிவிக்கிறார் என மற்றவர்கள் எண்ணம் கொள்வார்கள். எனினும், அந்த முதலாவது அறிஞரிடமிருந்து நேரடியாக கேட்டேன் என்பதை வெளிப்படுத்தும் வார்த்தைகளான ஹத்தஸனீ, சமிஅத்து போன்றவற்றை பயன்படுத்திருக்க மாட்டார்.

இந்த நிலையில் இருப்பவர்களுக்கு முதல்லஸ் அறிவிப்பாளர் என்று சொல்லப்படும். முஹம்மத் பின் இஸ்ஹாக் முதல்லஸ் அறிவிப்பாளர் ஆவார். இவரைப்பற்றி ஹதீஸ்கலை வல்லுநர்கள் கூறும்போது, முஹம்மத் பின் இஸ்ஹாக் நான் அவரிடமிருந்து நேரடியாக கேட்டேன் என்பதை வெளிப்படுத்தும் ஹத்தஸனீ, சமிஅத்து போன்ற வார்த்தைகளை கூறாதவரை இவரின் அந்த அறிவிப்பை ஆதாரப்பூர்வமானதாக ஏற்க முடியாது என்கிறார்கள்.

முஹம்மத் பின் இஸ்ஹாக், இந்த ஆடு நுழைந்து சாப்பிட்டுவிட்டது என்ற ஹதீஸையும் (عن) அன் என்ற வாசகத்தைக் கொண்டே அறிவிக்கிறார். இவர் முதல்லஸ் அறிவிப்பாளராக இருப்பதால் இவரின் அறிவிப்பு பலவீனமானதாகும்.

மேலும், இந்த ஹதீஸை முஹம்மத் பின் இஸ்ஹாக் ﵀, அப்துல்லாஹ் பின் அபூபக்கரிடமிருந்து அம்ரா மூலமாக ஆயிஷா ﵂ அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்.

இமாம் மாலிக் ﵀ அவர்கள், அப்துல்லாஹ் பின் அபூபக்கர் வழியாக அதே அறிவிப்பாளர் தொடரை கொண்டு அல்முஅத்தா என்ற நூலில் அறிவிக்கிறார்கள். ஆனால் அந்த ஹதீஸ், முஹம்மத் பின் இஸ்ஹாக்கின் அறிவிப்பிற்கு மாற்றமாக உள்ளது.

இமாம் மாலிக் ﵀ அவர்கள் அறிவிக்கும் அந்த ஹதீஸ்:

وَحَدَّثَنِى عَنْ مَالِكٍ عَنْ عَبْدِ اللَّهِ بْنِ أَبِى بَكْرِ بْنِ حَزْمٍ عَنْ عَمْرَةَ بِنْتِ عَبْدِ الرَّحْمَنِ عَنْ عَائِشَةَ زَوْجِ النَّبِىِّ -صلى الله عليه وسلم أَنَّهَا قَالَتْ كَانَ فِيمَا أُنْزِلَ مِنَ الْقُرْآنِ عَشْرُ رَضَعَاتٍ مَعْلُومَاتٍ يُحَرِّمْنَ ثُمَّ نُسِخْنَ بِخَمْسٍ مَعْلُومَاتٍ فَتُوُفِّىَ رَسُولُ اللَّهِ -صلى الله عليه وسلم- وَهُوَ فِيمَا يُقْرَأُ مِنَ الْقُرْآنِ.

ஆயிஷா ﵂ அவர்கள் கூறியதாவது: குறிப்பிட்ட பத்து தடவைகள் பால் அருந்தினால் பால்குடி உறவு உண்டாகும் என்ற வசனம் (முதலில்) குர்ஆனில் அருளப்பட்டிருந்தது. பின்னர் பத்து தடவைகள் என்பது

குறிப்பிட்ட ஐந்து தடவைகள் என மாற்றப்பட்டது. இவ்வசனம் மக்கள் சிலரால் ஓதப்பட்டுவந்த காலத்தில்தான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இறந்தார்கள். (முஸ்லிம் - 2876)

இதே ஹதீஸைத்தான் இமாம் முஸ்லிம் ﵀ அவர்கள், அறிவிப்பாளர் தொடரைக் கொண்டு இமாம் மாலிக் ﵀ அவர்களிடமிருந்து அறிவிக்கிறார் கள். அந்த ஹதீஸ் ஸஹீஹ் முஸ்லிம் நூலில் (2876) உள்ளது.

முஹம்மத் பின் இஸ்ஹாக்கின் அறிவிப்பு பலவீனமானதாகும். ஏனெனில், அவரைவிட வலிமையான இமாம் மாலிக்கின் அறிவிப்பு முஹம்மத் பின் இஸ்ஹாக்கின் அறிவிப்பிற்கு மாற்றமாக உள்ளது. எனவே முஹம்மத் பின் இஸ்ஹாக்கின் அறிவிப்பு (முன்கர்) நிராகரிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது.

ஏதேனும் ஒரு ஹதீஸை முஹம்மத் பின் இஸ்ஹாக் மட்டும் தனித்து அறிவித்தால் அதனை ஏற்கலாமா? என இமாம் அஹமத் பின் ஹம்பலிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் கூடாது என்றார்கள். ஏனெனில், முஹம்மத் பின் இஸ்ஹாக் பலரிடமிருந்து ஒரு ஹதீஸை அறிவித்துவிட்டு எவரின் வார்த்தை என்பதை பிரிக்காமல் அறிவித்துவிடுவார் என்றார்கள்.

ஆடு நுழைந்து இரண்டு வசனங்கள் எழுதப்பட்ட ஏட்டை சாப்பிட்டு விட்டது என்ற ஹதீஸ் பலவீனமானதாகும். ஆக இந்த ஹதீஸை அடிப்படையாக வைத்து முஸ்லிம் நூலில் வந்துள்ள ஹதீஸை (2876) மறுப்பது தவறாகும்.

குற்றச்சாட்டு - 2: *அந்த இரண்டு வசனங்களும் இன்று நம்மிடம் இருக்கின்ற அல்குர்ஆனில் இல்லை. அந்த இரண்டு வசனங்களும் எங்கே?*

இரண்டாவது குற்றச்சாட்டிற்கான நமது பதில்: அல்குர்ஆனில் ஐந்து முறை பால்குடித்தால் பால்குடி உறவு ஏற்பட்டுவிடும் என்ற வசனம் இன்று நம்மிடமுள்ள குர்ஆனில் இல்லை என்பதற்காக அந்த ஹதீஸை மறுக்க வேண்டும் என்றால், இதுபோன்று ஆரம்பத்தில் அருளப்பட்டு மாற்றப்பட்ட வசனங்களை குறித்துக் கூறும் வேறுசில ஹதீஸ்களையும் மறுக்கவேண்டியது வரும். இதுப்பற்றி விரிவாகப் பார்ப்போம்:

قَامَ فَأَثْنَى عَلَى اللَّهِ بِمَا هُوَ أَهْلُهُ قَالَ أَمَّا بَعْدُ فَإِنِّى قَائِلٌ لَكُمْ مَقَالَةً قَدْ

قُدِّرَ لِى أَنْ أَقُولَهَا ، لاَ أَدْرِى لَعَلَّهَا بَيْنَ يَدَىْ أَجَلِى ، فَمَنْ عَقَلَهَا وَوَعَاهَا فَلْيُحَدِّثْ بِهَا حَيْثُ انْتَهَتْ بِهِ رَاحِلَتُهُ ، وَمَنْ خَشِىَ أَنْ لاَ يَعْقِلَهَا فَلاَ أُحِلُّ لأَحَدٍ أَنْ يَكْذِبَ عَلَىَّ ، إِنَّ اللَّهَ بَعَثَ مُحَمَّدًا – صلى الله عليه وسلم – بِالْحَقِّ وَأَنْزَلَ عَلَيْهِ الْكِتَابَ فَكَانَ مِمَّا أَنْزَلَ اللَّهُ آيَةُ الرَّجْمِ ، فَقَرَأْنَاهَا وَعَقَلْنَاهَا وَوَعَيْنَاهَا ، رَجَمَ رَسُولُ اللَّهِ – صلى الله عليه وسلم – وَرَجَمْنَا بَعْدَهُ ، فَأَخْشَى إِنْ طَالَ بِالنَّاسِ زَمَانٌ أَنْ يَقُولَ قَائِلٌ وَاللَّهِ مَا نَجِدُ آيَةَ الرَّجْمِ فِى كِتَابِ اللَّهِ ، فَيَضِلُّوا بِتَرْكِ فَرِيضَةٍ أَنْزَلَهَا اللَّهُ ، وَالرَّجْمُ فِى كِتَابِ اللَّهِ حَقٌّ عَلَى مَنْ زَنَى إِذَا أُحْصِنَ مِنَ الرِّجَالِ وَالنِّسَاءِ ، إِذَا قَامَتِ الْبَيِّنَةُ أَوْ كَانَ الْحَبَلُ أَوْ الاِعْتِرَافُ ، ثُمَّ إِنَّا كُنَّا نَقْرَأُ فِيمَا نَقْرَأُ مِنْ كِتَابِ اللَّهِ أَنْ لاَ تَرْغَبُوا عَنْ آبَائِكُمْ ، فَإِنَّهُ كُفْرٌ بِكُمْ أَنْ تَرْغَبُوا عَنْ آبَائِكُمْ ، أَوْ إِنَّ كُفْرًا بِكُمْ أَنْ تَرْغَبُوا عَنْ آبَائِكُمْ

உமர் ﵁ அவர்கள், எழுந்து இறைவனை அவனுக்குத் தகுதியான பண்புகளைக் கூறிப் புகழ்ந்தார்கள். பிறகு, நான் (இன்று) எதைச் சொல்ல வேண்டுமென்று ஏற்படுத்தப்பட்டுள்ளதோ அதை நான் உங்களுக்குச் சொல்லவிருக்கிறேன். இது என் இறப்புக்கு சமீபத்திய பேச்சாக இருக்கக் கூடும். (உறுதியாக) எனக்குத் தெரியாது. இதை யார் (கேட்டு) விளங்கி நினைவில் நிறுத்திக் கொள்கிறாரோ அவர் தமது வாகனம் செல்லும் இடங்களிலெல்லாம் இதை எடுத்துரைக்கட்டும்! யார் இதை(ச் சரியாக) விளங்க முடியாது என அஞ்சுகிறாரோ (அவர் மட்டுமல்ல, வேறு) யாரும் என் மீது பொய்யுரைப்பதை நான் அனுமதிக்கமாட்டேன் (என்று கூறிவிட்டுப் பின்வருமாறு பேசினார்கள்:) திண்ணமாக அல்லாஹ் முஹம்மத் ﷺ அவர்களை சத்திய (மார்க்க)த்துடன் அனுப்பினான். மேலும், அவர்களுக்கு (குர்ஆன் எனும்) வேதத்தையும் அருளினான். அல்லாஹ் அருளிய (வேதத்)தில் கல்லெறி தண்டனை (ரஜ்ம்) குறித்த வசனம் இருந்தது. அதை நாங்கள் ஓதியிருக்கிறோம். அதைப் புரிந்து

மனனமிட்.டுமிருக்கிறோம். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் (மண முடித்தவர் விபசாரம் புரிந்தால் அவருக்குக்) கல்லெறி தண்டனை (ரஜ்ம்) நிறைவேற்றியுள்ளார்கள். அவர்களுக்குப் பிறகு நாங்களும் அந்தத் தண்டனையை நிறைவேற்றியுள்ளோம். காலப்போக்கில் மக்களில் சிலர், அல்லாஹ்வின் மீதாணையாக! இறைவேதத்தில் கல்லெறி தண்டனை குறித்த வசனத்தை நாங்கள் காணவில்லை என்று கூறி இறைவன் அருளிய கடமை ஒன்றைக் கைவிடுவதன் மூலம் வழி தவறிவிடுவார்களோ என நான் அஞ்சுகிறேன். மணமுடித்த ஆணோ, பெண்ணோ விபசாரம் புரிந்து அதற்கு சாட்சி இருந்தாலோ, அல்லது கர்ப்பம் உண்டானாலோ, அல்லது ஒப்புதல் வாக்குமூலம் அளித்தாலோ அவருக்குக் கல்லெறி தண்டனை உண்டு என்பது இறைவேதத்தில் உள்ளதாகும். பிறகு, நாங்கள் ஓதிவந்த இறைவேதத்தில் இதையும் ஓதிவந்தோம். உங்களுடைய (உண்மையான) தந்தையரைப் புறக்கணித்துவிட்டு வேறொருவரை தந்தையாக்கிவிட வேண்டாம். அவ்வாறு உங்கள் தந்தையரைப் புறக்கணிப்பது நன்றி கொல்லலாகும். (புகாரி - 6830)

உமர் ؓ அவர்கள், திருமணமானவர்கள் விபச்சாரம் புரிந்தால் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்ற வசனத்தையும், உங்களின் தந்தையரை புறக்கணித்துவிட்டு வேறொருவரை தந்தையாக்கிட வேண்டாம் என்ற வசனத்தையும் நாங்கள் அல்குர்ஆனில் ஓதியிருக்கிறோம் என்கிறார்கள். அதனையும் ஜும்ஆ தினத்தில் மிம்பரில் அனைவர் முன்னிலையிலும் கூறுகிறார்கள். ஸஹாபாக்களில் எவருமே ஆட்சேபனை தெரிவிக்காமல் ஏற்றிருக்கிறார்கள். உமர் ؓ அவர்கள் ஓதிய அவ்வசனங்கள் இன்று அல்குர்ஆனில் எங்கே இருக்கிறது? இவர்களின் வழியில் சென்றால் இந்த ஹதீஸையும், இதுபோன்ற மற்ற ஹதீஸ்களையும் மறுக்க வேண்டியது வரும். எனவே இவர்கள் கூறும் குழப்பத்திற்கு தீர்வு என்ன? என்பதைப் பற்றி இனி பார்ப்போம்.

அல்குர்ஆனில் இவ்வாறு மாற்றப்படும் வசனங்கள் பற்றிய சரியான விவரத்தை ஒருவர் அறிந்திருந்தால் இத்தகைய குழப்பங்கள் ஏற்படாமல் இருக்கும். அல்குர்ஆனில் இவ்வாறு சில வசனங்கள் மாற்றப்படும் என்பதை அல்லாஹ்வே அல்குர்ஆனில் தெரிவிக்கிறான்.

مَا نَنسَخْ مِنْ آيَةٍ أَوْ نُنسِهَا نَأْتِ بِخَيْرٍ مِّنْهَا أَوْ مِثْلِهَا أَلَمْ تَعْلَمْ أَنَّ اللَّهَ عَلَىٰ

كُلِّ شَيْءٍ قَدِيرٌ

ஏதேனும் ஒரு வசனத்தை நாம் மாற்றினால் அல்லது அதை மறக்கச் செய்துவிட்டால், அதைவிடச் சிறந்ததை, அல்லது அது போன்றதை நாம் கொண்டுவருவோம். நிச்சயமாக அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுடையோன் என்பதை நீர் அறியவில்லையா? (2:106)

وَإِذَا بَدَّلْنَا آيَةً مَكَانَ آيَةٍ وَاللَّهُ أَعْلَمُ بِمَا يُنَزِّلُ قَالُوا إِنَّمَا أَنْتَ مُفْتَرٍ بَلْ أَكْثَرُهُمْ لَا يَعْلَمُونَ (١٠١)

மேலும் (நபியே) ஒரு வசனத்தை மற்றொரு வசனத்தின் இடத்தில் நாம் மாற்றினால் - அல்லாஹ்வோ தான் இறக்கி வைப்பதை நன்கு அறிந்தவன். (இந்நிலையில்) இவர்கள் நிச்சயமாக நீர் இட்டுக்கட்டுபவர்தான் என்று (உம்மைப்பற்றிக்) கூறுகின்றனர் என்றாலும் இவர்களில் பெரும்பாலோர் (உண்மையை) அறிய மாட்டார்கள். (16:101)

அல்குர்ஆனில் சில வசனங்கள் அருளப்பட்டு அவ்வசனங்கள் மாற்றப்பட்டு அல்லது மறக்கடிக்கப்பட்டு அவைகளுக்குப் பதிலாக வேறு வசனங்கள் கொண்டு வரப்படும் என்பதை அல்லாஹ்வே இவ்வசனங்களில் தெரிவிக்கிறான். அல்குர்ஆன் அருளப்பட்ட காலத்தில் சில வசனங்கள் அருளப்பட்டு மாற்றப்பட்டிருக்கின்றன என்று இவ்வசனம் கூறுகிறது.

உலூமுல் குர்ஆன் எனும் அல்குர்ஆன் பற்றிய கல்வியை விவரிக்கும் நூல்களை எழுதிய மார்க்க அறிஞர்கள் இது தொடர்பான பல விவரங்களை ஆய்வு செய்து அளித்திருக்கிறார்கள். அல்குர்ஆனில் மாற்றம் செய்யப்படும் வசனங்களை மூன்று வகையாக பிரித்திருக்கிறார்கள்.

குர்ஆனில் மாற்றப்படும் சட்டங்களின் வகைகள்:

1. சட்டம் மாற்றப்பட்டிருக்கும், ஆனால் வாசகம் மாற்றப்படாமல் இருக்கும்.

وَاللَّاتِي يَأْتِينَ الْفَاحِشَةَ مِنْ نِسَائِكُمْ فَاسْتَشْهِدُوا عَلَيْهِنَّ
أَرْبَعَةً مِنْكُمْ فَإِنْ شَهِدُوا فَأَمْسِكُوهُنَّ فِي الْبُيُوتِ حَتَّى
يَتَوَفَّاهُنَّ الْمَوْتُ أَوْ يَجْعَلَ اللَّهُ لَهُنَّ سَبِيلا

மேலும், உங்கள் பெண்களில் மானக்கேடான செயலைச் செய்தோர் அவர்கள்மீது (அதை நிரூபிக்க) உங்களிலிருந்து நான்கு நபரை சாட்சிகளாகக் கொண்டு வாருங்கள். அவர்கள் (அதற்கு) சாட்சியம் கூறினால் அப்பொழுது அவர்களை மரணம் கைப்பற்றிவிடும் வரையில் அல்லது அல்லாஹ் அவர்களுக்குக் ஒரு வழியை ஏற்படுத்தும் வரையில் அவர்களை வீடுகளில் தடுத்து வையுங்கள். (4:15)

الزَّانِيَةُ وَالزَّانِى فَاجْلِدُوا كُلَّ وَاحِدٍ مِنْهُمَا مِائَةَ جَلْدَةٍ

(திருமணமாகாத) விபச்சாரி, விபச்சாரகன் இவ்விருவரில் ஒவ்வொருவரையும் நூறு கசையடி அடியுங்கள். (24:2)

அந்நிஸா அத்தியாயத்தின் பதினைந்தாவது வசனத்தின் சட்டம் அந்நூர் அத்தியாயத்தின் இரண்டாவது வசனத்திற்கு அருளப்படுவதற்கு முன்பிருந்ததாகும். அந்நூர் அத்தியாயத்தின் இரண்டாவது வசனம் இறக்கப்பட்டதற்குப் பிறகு இச்சட்டத்தையே செயல்படுத்த வேண்டும். (4:15) அத்தியாயத்தின் சட்டம் மாற்றப்பட்டாலும் அவ்வசனம் அல்குர்ஆனில் இருந்து நீக்கப்படவில்லை. அல்குர்ஆனில் அவ்வசனம் இன்றளவும் இருக்கத்தான் செய்கிறது.

2. வாசகம் மாற்றப்பட்டிருக்கும் - சட்டம் மாற்றப்படாமல் இருக்கும்.

ஐந்து முறை பாலருந்தினால், பால்குடி உறவு ஏற்படும் என்ற வார்த்தை அல்குர்ஆனிலிருந்து மாற்றப்பட்டு அந்தச் சட்டம் சுன்னாவின் மூலம் நிலைத்திருக்கிறது.

விபச்சாரம் புரிந்தவர்கள் கல்லெறிந்து கொல்லப்பட வேண்டும் என்ற வசனம் அல்குர்ஆனிலிருந்து மாற்றப்பட்டுவிட்டது. எனினும், அந்தச் சட்டம் சுன்னாவின் மூலம் நிலைத்திருக்கிறது.

3. வாசகம், சட்டம் மாற்றப்படுதல்

பத்து முறை பாலருந்தினால் பால்குடி உறவு ஏற்படும் என்ற வாசகமும் சட்டமும் மாற்றப்பட்டுவிட்டது.

இவ்வாறு அல்குர்ஆனில் சில வசனங்கள் அருளப்பட்டு மாற்றப்பட்டி ருக்கிறது என்பதை அனைவரும் ஏற்றிருக்கும்போது, இந்த ஹதீஸை

ஏற்றால் அல்குர்ஆனின் பாதுகாப்புத்தன்மையில் சந்தேகம் வந்துவிடும் என்று இவர்களின் கூற்றை என்னவென்று சொல்வது? உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இவர்களுக்கு உலூமுல் குர்ஆனைப் பற்றிய கல்வியறிவு சுத்தமாக இல்லை என்பதை எவ்வித சந்தேகத்திற்கிடமின்றி அறியலாம். எனவே அக்கல்வியை முறையாக பயில்வதற்கு முயற்சி செய்யவும்.

குற்றச்சாட்டு - 3: *நபி ﷺ அவர்களின் காலத்தில் ஒட்டுமொத்த மக்களுக்கும் அல்லாஹ் இறக்கிய வசனத்தை ஆயிஷா ؓ அவர்களைத் தவிர்த்து அந்த சமுதாயம் முழுவதும் எப்படி மறந்திருக்கும்? (நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 129)*

மூன்றாவது குற்றச்சாட்டிற்கான நமது பதில்: ஆயிஷா ؓ அவர்களைத் தவிர்த்து வேறு யாருமே இந்த வசனத்தை அறிந்திருக்கவில்லை, ஓதவில்லை என்ற இவர்களின் கூற்று நகைப்புக்குரியதாகும். ஏனெனில், ஸஹீஹ் முஸ்லிமில் வந்துள்ள ஹதீஸில் ஆயிஷா ؓ அவர்களே கூறுகிறார்கள், இவ்வசனம் மக்கள் சிலரால் ஓதப்பட்டுவந்த காலத்தில்தான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இறந்தார்கள். (முஸ்லிம் - 2876)

மாற்றப்பட்ட வசனங்கள் எங்கே?

ஸஹாபாக்கள் மாற்றப்பட்ட வசனங்களை நினைவில் வைத்திருந்தாலும் அதனை நபி ﷺ அவர்களின் கட்டளையின்படி நம்மிடம் இருக்கின்ற அல்குர்ஆனில் எழுதுவதை தவிர்த்துக் கொண்டார்கள். ஆகவேதான் உமர் ؓ அவர்கள் மிம்பரில் இருந்து கூறும்போது அல்லாஹ் அருளிய (வேதத்)தில் கல்லெறி தண்டனை (ரஜ்ம்) குறித்த வசனம் இருந்தது. அதை நாங்கள் ஓதியிருக்கிறோம். அதைப் புரிந்து மனனமிட்டுமிருக்கிறோம். அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் (மணமுடித்தவர் விபசாரம் புரிந்தால் அவருக்குக்) கல்லெறி தண்டனை (ரஜ்ம்) நிறைவேற்றியுள்ளார்கள். அவர்களுக்குப் பிறகு நாங்களும் அந்தத் தண்டனையை நிறைவேற்றியுள்ளோம். காலப்போக்கில் மக்களில் சிலர், அல்லாஹ்வின் மீதாணையாக! இறைவேதத்தில் கல்லெறி தண்டனை குறித்த வசனத்தை நாங்கள் காணவில்லை என்று கூறி இறைவன் அருளிய கடமை ஒன்றைக் கைவிடுவதன் மூலம் வழி தவறிவிடுவார்களோ என நான் அஞ்சுகிறேன் (புகாரி - 6830) என்று கூறினார்கள்.

உமர் ﷺ அவர்கள் ரஜ்ம் குறித்த வசனத்தை ஓதியிருக்கிறோம் என்கிறார்கள். இன்று நம்மிடமுள்ள அல்குர்ஆனில் அவ்வசனங்கள் இல்லை. ஆக ஆரம்பத்தில் இவ்வசனம் இறக்கப்பட்டு பிறகு மாற்றப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றியே உமர் ﷺ அவர்கள் இங்கு கூறுகிறார்கள்.

காலப்போக்கில் மக்களில் சிலர் அல்லாஹ்வின் மீதாணையாக! இறைவேதத்தில் கல்லெறி தண்டனை குறித்த வசனத்தை நாங்கள் காணவில்லை என்று கூறி இறைவன் அருளிய கடமை ஒன்றைக் கைவிடுவதன் மூலம் வழி தவறிவிடுவார்களோ என நான் அஞ்சுகிறேன்

ஆரம்பத்தில் இறக்கப்பட்டு மாற்றப்பட்ட வசனங்கள் குறித்து ஒருவர் இன்று அவ்வசனங்கள் அல்குர்ஆனில் இல்லை என்ற காரணத்தை கொண்டு மறுத்தால் அவர் வழிதவறிடுவார் என்பதனை உமர் ﷺ அவர்களே தனது உரையில் தெளிவுபடுத்துகிறார்கள்.

உமர் ﷺ அவர்கள் ரஜ்ம் குறித்த வசனத்தைப் பற்றிக் கூறியபோது ஸஹாபாக்களில் எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. உமர் ﷺ அவர்கள் கூறிய வசனங்கள் தொடர்பான விவரங்கள் மற்ற ஸஹாபாக்களுக்கும் தெரிந்திருக்கிறது. ஆகவேதான் அவர்கள் அனைவரும் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

அல்குர்ஆனில் சில வசனங்கள் ஆரம்பத்தில் அருளப்பட்டு, பிறகு, மாற்றப்பட்டிருக்கிறது என்ற தகவலை ஸஹாபாக்கள் அறிந்து வைத்திருந்திருந்தார்கள். மேலும் இவ்வாறு மாற்றப்பட்ட வசனங்களை ஸஹாபாக்கள் நபி ﷺ அவர்களின் வழிகாட்டுதல்படி இன்று நம்மிடமுள்ள அல்குர்ஆனில் எழுதுவதை தவிர்த்துக்கொண்டார்கள். ஆகவேதான் அந்த வசனங்கள் இன்று அல்குர்ஆனில் இல்லை. எனினும், இவ்வாறு மாற்றப்பட்ட வசனங்கள் குறித்த தகவல்களை ஹதீஸ்கள் மூலம் பாதுகாத்து நமக்கு தெரியப்படுத்தியது அவர்களின் அமானிதத்தை தெரியப்படுத்துகிறது.

இவ்வசனம் மக்கள் சிலரால் ஓதப்பட்டு வந்த காலத்தில்தான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இறந்தார்கள். (முஸ்லிம் - 2876) மாற்றப்பட்ட வசனங்களை ஸஹாபாக்களில் சிலர் ஏன் ஓதினார்கள்?

நபி ﷺ அவர்களின் மரணத்திற்குப் பிறகு இவ்வசனம் மாற்றப்பட்ட தகவலை சிலர் அறியாததால் இவ்வசனத்தை ஓதிவந்தார்கள். மாற்றப்பட்ட தகவலை அறிந்ததும் ஓதுவதை தவிர்த்துக் கொண்டார்கள்.

நபி ﷺ அவர்களின் காலத்தில் இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்கள் பல பகுதிகளில் வாழ்ந்து வந்தார்கள். நாம் வாழும் இக்காலத்தில் இருப்பதைப் போன்ற தகவல் தொடர்பு சாதனங்கள் அன்று இருந்ததில்லை. ஆகவேதான் இஸ்லாத்தில் மாற்றப்படும் சட்டங்கள் தொடர்பான தகவல்கள் அனைவருக்கும் ஒரே நேரத்தில் கிடைக்கவில்லை. கிப்லா மாற்றப்பட்ட திசையை இதற்கு உதாரணமாக கூறுவது பொருத்தமாக இருக்கும். பைத்துல் முகத்தஸை விட்டு கஅபத்துல்லாஹ் கிப்லாவாக மாற்றப்பட்ட வசனம் இறங்கியபிறகும் சிலர், அதனை அறியாததால் முந்திய கிப்லாவை நோக்கியே தொழுதார்கள்.

முனாஃபிக்குகள், காஃபிர்கள் இஸ்லாம் மார்க்கத்தின்மீது விமர்சனம் செய்வதற்கு வாய்ப்பு அமையாதா என்று காத்திருந்தார்கள். இவர்கள் எழுப்பும் இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு கடுகளவும் மதிப்பிருந்தால் அதனை அவர்கள் அப்போதே எழுப்பியிருப்பார்கள்.

இஸ்லாமிய எதிரிகளாலும் அன்று விமர்சிக்கப்படாதது இன்று இஸ்லாத்தில் இருப்பதாக கூறுபவர்களால் விமர்சிக்கப்படுகின்றது என்றால், அதனை என்னவென்று சொல்வது?

ஸஹீஹான ஹதீஸ்கள் தொடர்பாக இவ்வாறான அர்த்தமற்ற வாதங்களை எழுப்பி மறுப்பது தவறாகும். முன்சென்ற மார்க்க அறிஞர்கள் ஆதாரப்பூர்வமானது என்று ஏற்றிருக்கும் ஹதீஸ்களை மறுக்க வேண்டும் என்று கூறினால் இவர்களுக்கு முன்பு இந்த ஹதீஸை ஆதாரப்பூர்வமானது என நம்பும் அறிஞர்களின் நிலை என்ன? இவர்கள் மட்டும்தான் அறிவாளிகள், சிந்தனையாளர்கள் மற்றவர்களெல்லாம்? எனவே இந்த பிடிவாதப் போக்கை இவர்கள் மாற்றிக்கொள்வது இவர்களுக்கு நன்மையாக அமையும்!

பருவ வயதையடைந்த சாலிம் ﵁ அவர்கள் பால் அருந்தினார்களா?

ஆயிஷா ﵂ அவர்கள் கூறியதாவது,

(ஒரு முறை) சஹ்லா பின்த் சுஹைல் ﵂ அவர்கள் நபி ﷺ அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! சாலிம் பின் மஅகில் ﵁ அவர்கள் என் வீட்டிற்குள் வரும்போது (என்னைத் திரையின்றி பார்க்க நேரிடும் என்பதால் என் கணவர்) அபூஹுதைஃபாவின் முகத்தில் அதிருப்தியை நான் காண்கிறேன்" என்று கூறினார்கள். சாலிம் ﵁ அவர்கள் அபூஹுதைஃபாவின் அடிமை(யும் வளர்ப்பு மகனும்) ஆவார். அதற்கு நபி ﷺ அவர்கள், "நீ அவருக்குப் பால் கொடுத்துவிடு. (அதனால் செவிலித்தாய் - மகன் உறவு ஏற்பட்டுவிடும்)" என்று கூறினார்கள். சஹ்லா ﵂ அவர்கள், "அவர் (சாலிம்) பருவ வயதை அடைந்த மனிதராயிற்றே, அவருக்கு எவ்வாறு நான் பாலூட்டுவேன்?" என்று கேட்டார்கள்.

அப்போது அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் புன்னகைத்தவாறு, "அவர் பருவ வயதை அடைந்த மனிதர் என்பது எனக்கும் தெரியும். (உன்னிடமிருந்து பாலைக் கறந்து அவரைக் குடிக்கச் செய்வாயாக)" என்று கூறினார்கள். (முஸ்லிம்)

சாலிம் ﵁ அவர்களின் ஹதீஸை மறுப்பவர்கள் வைக்கும் வாதங்கள்:

1. சாலிம் ﵁ அவர்களுக்கு மட்டும் பிரத்யேகமானது என்பதற்கு ஆதாரம் இல்லை.

2. பால் கொடுத்தல் என்பதை நேரடிப் பொருளில்தான் விளங்க வேண்டும்.

வீட்டுக்கு அதிகமாக வருபவர்களுக்கு பால் புகட்டிவிட்டால் பர்தாவை பேண வேண்டிய அவசியம் இல்லை என்று இந்தச் சம்பவம் கூறுகிறது. பர்தா என்ற அழகிய நெறியை ஒழிப்பதற்கு இஸ்லாமிய எதிரிகளால் உருவாக்கப்பட்டதாகத்தான் இச்செய்தி இருக்க முடியும். (நூல்: ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் 30)

நமது பதில்

ஒரு ஹதீஸை மறுக்க வேண்டும் என்றால் இவர்கள் எந்த எல்லைவரையும் செல்வார்கள் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

பர்தா என்ற அழகிய நெறியை ஒழிப்பதற்கு இஸ்லாமிய எதிரிகளால் உருவாக்கப்பட்டதாகத்தான் இச்செய்தி இருக்க முடியும் என்று உறுதியாக கூறும் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத்தினர் கூறும் கருத்து மிகவும் விபரீதமான கருத்து என்பதை மார்க்கத்தின் அடிப்படை ஞானம் இருப்பவர்கள்கூட அறிந்து கொள்வார்கள்.

சாலிம் ﵁ அவர்கள் தொடர்பான செய்தி இஸ்லாமிய எதிரிகளால் உருவாக்கப்பட்ட செய்தி எனில், அத்தகைய இட்டுக்கட்டப்பட்ட செய்தியை இமாம் புகாரி, இமாம் முஸ்லிம் மற்றும் மற்ற மார்க்க அறிஞர்கள் எப்படி தங்களின் ஹதீஸ் நூல்களில் பதிவு செய்தார்கள்?

இமாம் புகாரி ﵀ அவர்கள் தங்களின் ஸஹீஹுல் புகாரியிலும், இமாம் முஸ்லிம் ﵀ அவர்கள் தங்களின் ஸஹீஹ் முஸ்லிமிலும் ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களை மட்டுமே தொகுப்பேன் என்பதை நிபந்தனையாக ஆக்கியிருக்கிறார்கள். அவ்வாறான ஹதீஸ்களை மட்டுமே தொகுத்தும் இருக்கிறார்கள்.

ஹதீஸ்கலை வல்லுநர்களும் ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிமை ஆய்வுசெய்து அதிலுள்ள ஹதீஸ்கள் ஆதாரப்பூர்வமானவை என ஏகமனதாக ஏற்றிருக்கிறார்கள். உண்மை இப்படியிருக்க புகாரி, முஸ்லிம் நூல்களில் இஸ்லாமிய எதிரிகளால் இட்டுக்கப்பட்ட செய்தி இருக்கிறது என்று ஒரு முஸ்லிம் எவ்வாறு கூற முடியும்?

ஹதீஸ்கலையில் ஒரு அறிவிப்பாளரை குறித்து பலவீனமான நினைவாற்றல் உள்ளவர் என்று கூறப்படும்போது அவரின் அறிவிப்பை ஏற்கமாட்டார்கள். அவர் பலவீனமான நினைவாற்றல் உள்ளவராக இருந்தாலும் அவர் அறிவிக்கும் குறிப்பிட்ட அந்த ஹதீஸை அவர் சரியாக நினைவில் வைத்திருக்கவும் செய்யலாம், சரியாக நினைவில் வைக்காமலும் இருக்கலாம். இந்நிலையில் பேணுதலின் அடிப்படையில் அவரின் அறிவிப்பை ஏற்காமல் ஹதீஸ்கலை வல்லுநர்கள் விட்டுவிடுவார்கள். பலவீனமான அறிவிப்பாளருக்கே இந்த நிலை என்றால்? ஸஹீஹான அறிவிப்பாளர் தொடரைக் கொண்ட அதுவும் அறிவிப்பாளர் தரத்தில் உயர்ந்த நிலையிலுள்ள புகாரி, முஸ்லிம் நூலின் அறிவிப்பாளர் தொடரைக் கொண்ட ஒரு ஸஹீஹான ஹதீஸை இஸ்லாமிய எதிரிகளால் இட்டுக்கட்டப் பட்டது என்று கூறுவதை எந்தப் பொருளில் எடுப்பது?

அந்த அறிவிப்பாளர் இஸ்லாமிய எதிரிகளின் செய்திகளை தெரியாமல் சரியான செய்தி என அறிவித்ததாக எடுத்துக் கொள்வதா?

அல்லது அந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளரே இஸ்லாமிய எதிரியாக இருக்கிறாரா?

ஏனெனில், ஸஹீஹான ஹதீஸ்களை பொறுத்தவரை அந்த ஹதீஸிலுள்ள செய்திகளை அதனுடைய அறிவிப்பாளர் அறிந்துதான் கூறுகிறார் என்பது ஹதீஸ்கலையில் நிரூபிக்கபட்ட உண்மையாகும்.

சாலிம் ﵁ அவர்கள் தொடர்பான சட்டம் ஸஹாபாக்கள் காலத்திலே விவாதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் சொல்வதுபோல் இது இஸ்லாத்தின் எதிரிகளின் சூழ்ச்சி எனில் ஸஹாபாக்கள் உயிர் வாழும்போதே அவர்கள் அறிவிக்கும் செய்திகளில் அவர்களையும் அறியாமல் இஸ்லாமிய எதிரிகளின் செய்திகளையும் ஸஹாபாக்கள் அறிவித்திருக்கிறார்கள் என்ற கருத்து வெளிப்படும்.

இவ்வாறு ஸஹாபாக்கள் இஸ்லாமிய எதிரிகளின் சூழ்ச்சி தெரியாமல் சில ஹதீஸ்களை அறிவித்துவிட்டார்கள் என்று கூறுவது சரியான கொள்கையா?

இதே முறையை ஒருவர் ஸஹாபாக்கள் அறிவிக்கும் அல்குர்ஆன் வசனங்களுக்கு பொருத்தினால் அதனை எப்படி எடுத்துக் கொள்வது? இவர்கள் கூறும் கருத்தை ஏற்பதைப்போல் அவரின் கருத்தையும் ஏற்றுக் கொள்ளலாமா?

இதுதான் இவர்களின் நிலை என்றால், ஒருவன் தன் மனதிற்கு பிடிக்காத ஹதீஸ்கள் அனைத்தையும் இஸ்லாத்தின் எதிரிகளால் உருவாக்கப்பட்ட செய்தி என்று கூறினால் அதனை இவர்கள் ஏற்றுக் கொள்வார்களா?

இஸ்லாமிய அடிப்படைகளையே தகர்க்கும் வகையிலுள்ள இத்தகைய வாதங்களை ஆய்வு என்ற பெயரில் உளறுவதை இவர்கள் இனியாவது கண்டிப்பாக தவிர்க்கவும்!

இந்த ஹதீஸை ஸஹாபிய்யா பெண்களிலிருந்து ஆயிஷா, ஜைனப் மற்றும் உம்மு ஸல்மா ﵅ அவர்கள் அறிவிக்கிறார்கள். இஸ்லாமிய மார்க்க அறிஞர்களும் இதை ஸஹீஹான ஹதீஸ் என்று ஏற்றிருக்கிறார்கள். முஸ்லிம் சமுதாயத்தின் எந்த மார்க்க அறிஞரும் இந்த ஹதீஸை மறுக்கவில்லை.

இந்த ஹதீஸின் சட்டம் பொதுவானதா? அல்லது சாலிம் رضي الله عنه அவர்களுக்கு மட்டும் பிரத்யேகமானதா என்பதில் மட்டுமே ஸஹாபாக்கள், தாபியீன் களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு இருந்தது.

சாலிம் رضي الله عنه அவர்களின் சட்டம் தொடர்பாக அறிஞர்களின் நிலை:

1. நபி ﷺ அவர்களின் அனைத்து மனைவிமார்கள், (ஆயிஷாவைத் தவிர) அனைத்து ஸஹாபாக்களும் சாலிம் رضي الله عنه அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது என்கிறார்கள். பெரும்பான்மையான அறிஞர்கள் இந்த கருத்தையே ஏற்றிருக்கிறார்கள்.

2. ஆயிஷா رضي الله عنها அவர்களும் சில தாபியீன்களும் இது சாலிம் رضي الله عنه அவர்களுக்கு மட்டும் பிரத்யேகமானது இல்லை, மற்றவர்களுக்கும் இந்த சட்டம் பொருந்தும் என்கிறார்கள்.

3. ஷெய்குல் இஸ்லாம் இப்னு தைமிய்யா رحمه الله அவர்கள் பால்குடி சம்பந்தான ஆதாரங்கள் அனைத்தையும் திரட்டிக் கூறுகிறார்கள், பால்குடி பருவமென்பது இரண்டு வயதிற்குள் இருந்தால் மட்டுமே ஏற்படும். எனினும், அபூஹுதைஃபா رضي الله عنه அவர்களின் மனைவியோடு சாலிம் رضي الله عنه அவர்களுக்கு இருந்த (வளர்ப்பு மகன் என்ற) நிலைபோன்று அவசியமான நிலை ஒருவருக்கு ஏற்பட்டால், அவர் பெரியவராக இருந்து பால் அருந்தினாலும் பால்குடி உறவு ஏற்படும். இது அவசியமான நிலை இருந்தால் மட்டுமே என்கிறார்கள்.

இமாம் இப்னுல் கய்யிம் رحمه الله அவர்கள் கூறுகிறார்கள்: இது முன்பிருந்த சட்டம், சாலிம் رضي الله عنه அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது என்று கூறுவதை விட சாலிம் போன்ற நிலையில் இருப்பவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று கூறுவது அனைத்து ஹதீஸ்களையும் இணைத்து செயல்படுவதற்கு நெருக்கமாக இருக்கிறது. ஷரியத்தின் விதிகளும் இதற்கு சான்றளிக்கிறது என்கிறார்கள். (நூல்: ஜாதுல் மஆத் 5/593)

பெரியவர்கள் பால் அருந்தினால் பால்குடி உறவு ஏற்படுமா? என்பதில் அறிஞர்கள் மத்தியில் ஃபிக்ஹ் ரீதியாக கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் அவர்கள் அனைவரும் சாலிம் رضي الله عنه அவர்களின் ஹதீஸை ஆதாரப்பூர்வமானது என ஏற்றிருந்தார்கள். எந்த ஓர் அறிஞரும் இந்த ஹதீஸ் ஆபாசமாக இருக்கிறது, இந்த ஹதீஸை ஏற்றால் இஸ்லாத்தை

மற்றவர்கள் விமர்ச்சிப்பார்கள் என்றெல்லாம் கூறி இந்த ஹதீஸை மறுக்கவில்லை. மார்க்க அறிஞர்கள் இந்த ஹதீஸின் சட்டம் தொடர்பான விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டிருப்பதே இந்த ஹதீஸ் ஸஹீஹானது (ஆதாரப்பூர்வமானது) என்ற அடிப்படையில்தான் என்பதை நினைவில் கொள்ளவும்!

சாலிம் ﵁ அவர்கள் தொடர்பான ஹதீஸ்களை ஆய்வுசெய்து பார்க்கும் போது இது சாலிம் ﵁ அவர்களுக்கு மட்டுமே பிரத்தியேகமானது என்று கூறுபவர்களின் ஆதாரங்களே வலுவுடையதாக இருக்கிறது.

சாலிம் ﵁ அவர்களுக்கு மட்டும் பிரத்யேகமானது என்பதற்கான ஆதாரங்கள்:

ஆதாரம் - 1

பால்குடி பருவம் இரண்டு வயதிற்குட்பட்ட காலத்தில் ஐந்து முறை பால் அறிந்தினாலே ஏற்படும். இரண்டு வயதிற்குப் பிறகு பால் அருந்துவதால் பால்குடி உறவு ஏற்படாது என மார்க்கச் சட்டங்கள் கூறுகின்றன.

وَالْوَالِدَاتُ يُرْضِعْنَ أَوْلَادَهُنَّ حَوْلَيْنِ كَامِلَيْنِ لِمَنْ أَرَادَ أَن يُتِمَّ الرَّضَاعَةَ

பால் ஊட்டுவதை பூர்த்தியாக்க விரும்புகிறவருக்காக தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு (அவை பிறந்ததிலிருந்து) இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டுவார்கள். (2:233)

ஆதாரம் - 2

عَنْ مَسْرُوقٍ أَنَّ عَائِشَةَ رضى الله عنها قَالَتْ دَخَلَ عَلَىَّ النَّبِىُّ صلى الله عليه وسلم وَعِنْدِى رَجُلٌ ، قَالَ « يَا عَائِشَةُ مَنْ هَذَا . قُلْتُ أَخِى مِنَ الرَّضَاعَةِ . قَالَ « يَا عَائِشَةُ ، انْظُرْنَ مَنْ إِخْوَانُكُنَّ ، فَإِنَّمَا الرَّضَاعَةُ مِنَ الْمَجَاعَةِ »

ஆயிஷா ﵂ அவர்கள் கூறுகிறார்கள், என்னிடம் ஒரு மனிதர் அமர்ந்திருக்க நபி ﷺ அவர்கள் என் வீட்டிற்கு வந்தார்கள். ஆயிஷாவே இவர் யார்

என்று நபி ﷺ அவர்கள் கேட்டார்கள், நான் என் பால்குடிச் சகோதரர் என்று கூறினேன். நபி ﷺ அவர்கள் ஆயிஷாவே! உங்கள் சகோதரர்கள் யார் என்று ஆராய்ந்து பாருங்கள். ஏனெனில், பால்குடிப்பதென்பதே பசியினால் தான் என்று கூறினார்கள். (அறிவிப்பாளர்: மஸ்ருக், புகாரி - 2647, 5102)

ஆதாரம் - 3

عَنْ عَائِشَةَ أَنَّهَا قَالَتْ كَانَ فِيمَا أُنْزِلَ مِنَ الْقُرْآنِ عَشْرُ رَضَعَاتٍ مَعْلُومَاتٍ يُحَرِّمْنَ. ثُمَّ نُسِخْنَ بِخَمْسٍ مَعْلُومَاتٍ فَتُوُفِّىَ رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم وَهُنَّ فِيمَا يُقْرَأُ مِنَ الْقُرْآنِ. (مسلم)

ஆயிஷா (رضي الله عنها) அவர்கள் கூறியதாவது: குறிப்பிட்ட பத்து தடவைகள் பால் அருந்தினால் பால்குடி உறவு உண்டாகும் என்ற வசனம் (முதலில்) குர்ஆனில் அருளப்பட்டிருந்தது. பின்னர் பத்து தடவைகள் என்பது குறிப்பிட்ட ஐந்து தடவைகள் என மாற்றப்பட்டது. இவ்வசனம் மக்கள் சிலரால் ஓதப்பட்டுவந்த காலத்தில் தான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் இறந்தார்கள். (முஸ்லிம் - 2876)

قَالَ لاَ تُحَرِّمُ الْمَصَّةُ وَالْمَصَّتَانِ

ஒருமுறை, இருமுறை பால் அருந்துவதால் பால்குடி உறவு ஏற்படாது. (முஸ்லிம்)

அல்குர்ஆன் வசனத்தையும், இந்த ஹதீஸ்களையும் வைத்துப் பார்க்கும் போது பால்குடி உறவு ஏற்படுவதற்கு மூன்று நிபந்தனைகள் இருக்க வேண்டும்:

- இரண்டு வருடம் முடிவடைதற்கு முன்பாக இருக்க வேண்டும்
- ஐந்து முறை பால் குடிக்க வேண்டும்.
- பால் குடிப்பதன் மூலம் பசி அடங்கியிருக்க வேண்டும்

இமாம் இப்னுல் கய்யிம் (رحمه الله) அவர்கள் கூறுகிறார்கள்: பெரியவர்கள் பால் அருந்துவதன் மூலம் அவர்களின் பசியும் அடங்குவதில்லை, அவர்களின் மாமிசமும் வளர்வதில்லை. ஆக, நபி ﷺ அவர்கள் சாலிம் (رضي الله عنه) அவர்களின்

விஷயத்தில் உண்மையான பால்குடியை நாடவில்லை. (நூல்: ஜாதுல் மஆத் 5/589)

ஆதாரம் - 4

عن زَيْنَبَ بِنْتَ أَبِى سَلَمَةَ أَخْبَرَتْهُ أَنَّ أُمَّهَا أُمَّ سَلَمَةَ زَوْجَ النَّبِىِّ صلى الله عليه وسلم كَانَتْ تَقُولُ أَبَى سَائِرُ أَزْوَاجِ النَّبِىِّ صلى الله عليه وسلم أَنْ يُدْخِلْنَ عَلَيْهِنَّ أَحَدًا بِتِلْكَ الرَّضَاعَةِ وَقُلْنَ لِعَائِشَةَ وَاللَّهِ مَا نَرَى هَذَا إِلاَّ رُخْصَةً أَرْخَصَهَا رَسُولُ اللَّهِ صلى الله عليه وسلم لِسَالِمٍ خَاصَّةً فَمَا هُوَ بِدَاخِلٍ عَلَيْنَا أَحَدٌ بِهَذِهِ الرَّضَاعَةِ وَلاَ رَائِينَا.

என் தாயாரும் நபி ﷺ அவர்களின் மனைவியுமான உம்மு சலமா அவர்கள் கூறுவார்கள், (ஆயிஷா அவர்களைத் தவிர) நபி ﷺ அவர்களுடைய மற்ற துணைவியர் எவரும் பால்குடிப் பருவத்தைக் கடந்த ஒருவருக்குப் பால் கொடுத்து (செவிலித் தாய்-மகன் என்ற) உறவை ஏற்படுத்தி அவரை தங்களது வீட்டிற்குள் நுழைய அனுமதிக்க மறுத்துவிட்டனர். மேலும், நபி ﷺ அவர்களுடைய மற்ற துணைவியர் ஆயிஷா ؓ அவர்களிடம் அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் சாலிம் அவர்களுக்கு மட்டுமே இந்த முறையை அனுமதித்தார்கள் என்றே நாங்கள் கருதுகிறோம். (பால்குடி பருவத்தைக் கடந்த பின்) பால்குடி உறவை ஏற்படுத்தும் இந்த முறைப்படி யாரும் எங்களது வீட்டிற்குள் வந்ததுமில்லை, எங்களை பார்த்ததுமில்லை என்றார்கள். (அறிவிப்பாளர்: ஜைனப் பின்த் அபீசலமா, நூல்: முஸ்லிம் - 2883)

நபி ﷺ அவர்களின் அனைத்து மனைவிமார்களும் (ஆயிஷாவைத் தவிர) சாலிமிற்கு மட்டுமே இந்தச் சட்டம் பிரத்யேகமானது என்கிறார்கள்.

وَقُلْنَ لِعَائِشَةَ وَاللَّهِ مَا نَدْرِى لَعَلَّهَا كَانَتْ رُخْصَةً مِنَ النَّبِىِّ صلى الله عليه وسلم لِسَالِمٍ دُونَ النَّاسِ.

அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள்

சாலிம் அவர்களுக்கு மட்டுமே இந்த முறையை அனுமதித்தார்கள் என்றே நாங்கள் கருதுகிறோம் (நூல்: அபூதாவூத் - 2063) என்று அவர்கள் கூறிய வாசகம் அவர்கள் அனைவரும் இந்தக் கருத்தில் உறுதியாக இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும் நபி ﷺ அவர்களும் சாலிம் அவர்களை தவிர்த்து இம்முறையை வேறு யாருக்கும் அனுமதியளிக்கவில்லை என்பதிலிருந்தே இது சாலிம் அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது என்பதை அறியலாம்.

ஸஹாபாக்களின் ஃபத்வாக்களை வைத்துப் பார்க்கும்போதும் இது சாலிமிற்கு மட்டுமே பிரத்யேகமானது என்ற கருத்தில் தான் ஸஹாபாக்கள் இருந்தார்கள் என்பதை அறிய முடிகிறது.

(உமர் ؓ அவர்கள் வழங்கிய ஃபத்வா:)

அப்துல்லாஹ் பின் உமர் ؓ அவர்கள் கூறுகிறார்கள்: ஒரு மனிதர் உமர் ؓ அவர்களிடம் வந்து, எனக்கு ஒரு அடிமைப் பெண் இருக்கிறாள். அவளுடன் நான் தாம்பத்திய உறவு வைத்துக் கொள்பவனாக இருந்து வருகிறேன். இந்நிலையில் என் மனைவி அப்பெண்ணிற்கு பால் கொடுத்து விட்டாள். பிறகு நான் அப்பெண்ணிடம் உறவுக்காக சென்றபோது நீங்கள் இதனை தவிர்த்துக் கொள்ளுங்கள், அல்லாஹ்வின் மீதாணையாக! நான் உங்கள் மனைவியிடம் பால் அருந்திவிட்டேன் என்று அப்பெண் கூறியதாக வந்தவர், உமர் ؓ அவர்களிடத்தில் தெரிவித்தார். அதற்கு உமர் ؓ அவர்கள் நீங்கள் அப்பெண்ணிடம் செல்லுங்கள் பால்குடி உறவு சிறு வயதில் (இரண்டு வயதிற்குள்) குடிப்பதாலேயே ஏற்படும் என்றார்கள். (நூல்: அல்முஅத்தா 1/211)

(இப்னு மஸ்ஊத் ؓ அவர்கள் வழங்கிய ஃபத்வா:)

ஒரு மனிதர் அபூ மூஸா அஷ்அரி ؓ அவர்களிடம், நான் எனது மனைவியின் மார்பகத்தின் வழியாக பால் உறிஞ்சினேன் அது எனது வயிற்றுக்குள் சென்றுவிட்டது. இதைப்பற்றிய சட்டம் என்ன? என்று கேட்டார். அதற்கு அபூ மூஸா ؓ அவர்கள் அப்பெண் உனக்கு ஹராமாகிவிட்டாள் என்றார்கள். இச்சம்பவம் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ؓ அவர்களுக்கு தெரியவந்தபோது அவர்கள், அபூ மூஸா ؓ அவர்களிடம், அந்த மனிதரின் விஷயத்தில் தாங்கள் என்ன தீர்ப்பு கூறியிருக்கிறீர்கள் என்றார்கள். அதற்கு அபூ மூஸா ؓ அவர்கள் தாங்கள்

இவ்விஷயத்தில் என்ன தீர்ப்பு கூறுவீர்கள் என்று அப்துல்லாஹ் பின் மஸ்ஊதிடம் கேட்டபோது, அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ؓ அவர்கள் இரண்டு வயதிற்குள் பால் அருந்தினால்தான் பால்குடி உறவு ஏற்படும் என்றார்கள். பிறகு அபூ மூஸா அவர்கள் இந்த கல்விமான் உங்கள் மத்தியில் இருக்கும் வரை வேறு யாரிடமும் எதுபற்றியும் கேட்காதீர்கள் என்றார்கள். (நூல்: முஸன்னஃப் அப்துர்ரஜ்ஜாக் 7/463)

இப்னு உமர் ؓ அவர்கள் வழங்கிய தீர்ப்பில் பால்குடி உறவென்பது சிறு (இரண்டு) வயதிற்குள் அருந்தினாலே ஏற்படும். பெரியவர்கள் பால் அருந்துவதின் மூலம் பால்குடி உறவென்பது ஏற்படாது. (நூல்: அல்முஅத்தா 2/603)

ஸஹாபாக்களின் மார்க்கத் தீர்ப்பை வைத்துப் பார்க்கும்போது பெரியவர்கள் பால் அருந்தினால் பால்குடி உறவு ஏற்படாது என்பதை அறிய முடிகிறது. ஆகவே, ஸஹாபாக்கள் சாலிம் ؓ அவர்கள் தொடர்பான சட்டம் அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது என்ற கருத்தில்தான் இருந்தார்கள் என அறிய முடிகிறது.

இமாம் ஷாஃபி ؒ அவர்கள் கூறுகிறார்கள்: நான் பல அறிஞர்களை சந்தித்து சாலிம் ؓ அவர்களின் ஹதீஸ் தொடர்பாக கேட்டேன். அவர்கள் அனைவரும் இது சாலிமிற்கு மட்டும் பிரத்யேகமானது என்று கூறினார்கள். (நூல்: அல்உம்மு 5/28)

இமாம் திர்மிதி ؒ அவர்கள் கூறுகிறார்கள்: நபி ﷺ அவர்களின் ஸஹாபாக்கள் மற்றும் அதிகமான அறிஞர்கள் பால்குடி உறவு என்பது இரண்டு வயதிற்குள் இருந்தால் மட்டுமே ஏற்படும். இரண்டு வயதிற்குப் பிறகு ஏற்படாது என்று கூறுகிறார்கள். (நூல்: திர்மிதி, ஹதீஸ் எண் - 1185)

ஆக, இந்தத் தகவல்கள் அனைத்தையும் வைத்துப் பார்க்கும்போது சாலிம் ؓ அவர்கள் தொடர்பான ஹதீஸை எவரும் மறுக்கவில்லை என்பதை அறியலாம்.

சாலிம் ؓ அவர்கள் தொடர்பான சட்டம் அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது என்பதே ஸஹாபாக்கள், தாபியீன்கள் மற்றும் அதிகமான அறிஞர்களின் கருத்தாக இருந்திருக்கிறது என்பதை அறியலாம்.

ஆயிஷா ؓ அவர்கள் மற்றும் தாபீயின்களில் சிலர் மட்டுமே இந்த

சட்டம் சாலிம் ﷺ அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது இல்லை. மற்றவர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று கூறுகிறார்கள். எனினும் இது தொடர்பான ஆதாரங்களை வைத்துப் பார்க்கும்போது இது சாலிம் அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது என்று கூறுபவர்களின் கருத்தே மிக வலுவானதாக இருக்கிறது என்பதை அறியலாம். ஆக சாலிம் ﷺ அவர்கள் தொடர்பான ஹதீஸை ஸஹாபாக்கள், தாபியின்கள், தபவுதாபியின்கள் மற்றும் மார்க்க அறிஞர்கள் ஆகிய எவரும் மறுக்கவில்லை என்பதை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.

முன்சென்ற நல்லோர்கள் ஏற்றிருக்கும் ஒரு ஹதீஸை மனஇச்சையின் அடிப்படையில் மறுப்பது வழிகேடாகும்.

இமாம் இப்னு அப்துல் பர் ﷺ அவர்கள், இந்த ஹதீஸின் அறிவிப்பாளர்களில் ஒருவரான இப்னு அபீ முலைக்கா இந்த ஹதீஸை ஒரு வருடம்வரை அறிவிக்காமல் இருந்தது, இந்தச் சட்டம் முன்னரே செயல்படுத்தபடவில்லை. அதனால் அறிவிக்கப்படாமல் இருந்தது என்கிறார்கள் (ஷர்யு அஜ்ஜர்கானி)

இமாம் இப்னு அப்துல் பர் ﷺ அவர்களின் கூற்றை வைத்துப் பார்க்கும்போது சாலிம் ﷺ அவர்களைத் தவிர மற்றவர்கள் இச்சட்டத்தை செயல்படுத்தவில்லை என்பதை வைத்து இது சாலிம் ﷺ அவர்களுக்கு மட்டுமே பிரத்யேகமானது என்பதை அறியலாம்.

2. சாலிம் ﷺ அவர்கள் நேரடியாக பால் அருந்தினார்களா?

சாலிம் ﷺ அவர்கள் நேரடியாகத்தான் பால் அருந்தினார்கள் என்று கூறுவதற்கு ஹதீஸில் எந்த ஒரு வாசகமும் இல்லை. நேரடியாகத்தான் பால் அருந்தினார்கள் என்று கூறுபவர்கள்தான் அதற்கான ஆதாரத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

சாலிம் ﷺ அவர்கள் நேரடியாக பால் அருந்துவதற்குத் தடையாக பல ஆதாரங்கள் உள்ளது. அத்தகைய ஆதாரங்களைப் பற்றிப் பார்ப்போம்.

1. ஒரு குழந்தை இரண்டு வயதிற்குள்ளாக இருக்கும்போது ஐந்து முறை ஒரு பெண் பால் கறந்து கொடுத்தால் செவிலித்தாய், மகன் உறவு ஏற்பட்டு விடுமா என்றால்? மார்க்க அறிஞர்கள் ஏற்பட்டுவிடும் என்கிறார்கள். எனவே மார்பகத்திலிருந்து நேரடியாக பால்குடிப்பதின் மூலமே பால்குடி உறவு ஏற்படும் என்பது நிபந்தனையல்ல. பாலை கறந்து கொடுத்தாலும்

பால்குடி உறவு ஏற்பட்டுவிடும் என்ற அடிப்படையை முதலில் விளங்க வேண்டும்.

2. பால் கொடுங்கள் என்ற வார்த்தையிலிருந்து நேரடியான பொருளைத்தான் எடுக்க வேண்டும் என்ற விதி இருந்தாலும், அவ்வாறு நேரடியாகப் பொருள் கொள்வதற்கு மற்ற ஆதாரங்கள் தடையாக இருந்தால் அவ்விடத்தில் மாற்றுப் பொருளை தரவேண்டும் என்பது இஸ்லாமிய விதிகளில் ஒன்றாகும்.

நபியே விசுவாசிகளான பெண்களுக்கு நீர் கூறுவீராக! தங்கள் பார்வைகளை அவர்கள் தாழ்த்திக் கொள்ளவும், தங்கள் மர்மஸ்தானங்களை பாதுகாத்து கொள்ளவும்; தங்கள் முந்தானைகளை தம் மேல்சட்டைகளின் மீது போட்டு மறைத்துகொள்ள வேண்டும். (அல்குர்ஆன் 24:31)

அனுமதிக்கப்படாத பெண்களை தொடுவதைக் காட்டிலும் உங்களில் ஒருவர் தன் தலையை இரும்பைக்கொண்டு காயப்படுத்திக் கொள்வது சிறந்ததாகும். (தப்ரானி)

கையின் விபச்சாரம் என்பது பிடிப்பதே. (முஸ்லிம்)

நாம் மேலே குறிப்பிட்ட ஆதாரங்கள் சாலிம் ﵁ அவர்கள் நேரடியாக பால் அருந்தினார்கள் என்று கூறுவதற்கு பொதுவான தடையாக இருக்கிறது என்பதை விளங்கிட முடிகிறது.

قَالَ يَا قَوْمِ هَؤُلَاءِ بَنَاتِي هُنَّ أَطْهَرُ لَكُمْ

என் சமூகத்தாரே! இவர்கள் என்னுடைய பெண் மக்கள் அவர்கள் உங்களுக்கு மிக்க பரிசுத்தமானவர்கள். (11:78)

قَالَ هَؤُلَاءِ بَنَاتِي إِن كُنتُمْ فَاعِلِينَ

அதற்கவர், இவர்கள் என்னுடைய பெண் மக்கள் நீங்கள் (ஏதும்) செய்பவர்களாக இருந்தால் என்று கூறினார். (15:69-71)

இவ்வசனங்களை நம்மில் எவரும் நேரடிப் பொருளில் விளங்கிக் கொள்ள மாட்டோம். நேரடியான பொருளில் இவ்வசனத்தை அணுகினால் தவறான அர்த்தமே வெளிப்படும். இவ்வசனத்திலிருந்து லூத் ﵇ அவர்கள் அந்த சமூக மக்களிடம் என் பெண்மக்கள் இருக்கிறார்கள் அவர்களை ஹலாலான முறையில் திருமணம் முடித்துக் கொள்ளுங்கள் என்றே கூற வருகிறார்கள்

என்பதை நாம் எவ்வாறு மாற்றுப் பொருளில் விளங்கிக் கொள்வமோ அதுபோல் நபி ﷺ அவர்கள் சஹ்லா ﵂ அவர்களிடம் சாலிமிற்கு பாலைக் கொடுங்கள் என்று கூறியது பாலைக் கறந்து கொடுங்கள் என்ற பொருளில் தான் என்று விளங்க வேண்டும்.

لاَ يَقْبَلُ اللَّهُ صَلاَةَ حَائِضٍ إِلاَّ بِخِمَارٍ

நபி ﷺ அவர்கள் கூறினார்கள்: தலையை மறைக்காமல் தொழும் எந்த மாதவிடாய் பெண்ணின் தொழுகையையும் அல்லாஹ் ஏற்க மாட்டான். (அபூ தாவூத் - 641)

இந்த ஹதீஸை வைத்து எவரும் மாதவிடாய் பெண்ணிற்கும் தொழுகை இருக்கிறது என்ற நேரடியான விளக்கத்தை கொடுக்க மாட்டோம். நபி ﷺ அவர்கள் மாதவிடாய் பெண் என்றது, பருவ வயதை அடைந்த பெண்ணையே குறிப்பிடுகிறார்கள் என்ற மாற்றுப் பொளையே தருவோம். ஏனெனில், இஸ்லாமிய மார்க்கத்தில் மற்ற தகவல்கள் மாதவிடாய் பெண்ணின் மீது தொழுகை இல்லை என்பதனை கூறுகிறது.

மார்க்க அறிஞர்களும், ஹதீஸ்கலை வல்லுநர்களும் இந்தச் சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது சஹ்லா ﵂ அவர்கள் பாலை கறந்து கொடுத்தார்கள் என்கிறார்கள். இதனை அவர்கள் மனம்போன போக்கில் கூறவில்லை. மாறாக, இஸ்லாமிய விதிமுறைகளை நன்கு அறிந்ததினாலேயே இவ்வாறு கூறுகிறார்கள். ஏனெனில், மார்க்கம் அந்நியப் பெண்ணை பார்ப்பதை தடுக்கிறது, அந்நியப் பெண்ணை தொடுவதை தடுக்கிறது.

இமாம் இப்னு குதைபா அத்தய்நூரி ﵀ அவர்கள் சஹ்லா ﵂ அவர்கள் சாலிமிற்கு பாலைக் கறந்துதான் கொடுத்தார்கள். ஏனெனில், பாலைக் கொடுப்பதற்கு முன்புவரை சஹ்லா சாலிமிற்கு அந்நியப் பெண்ணாகவே இருப்பார் என்கிறார்கள்.

வளர்ப்பு மகன் சொந்த மகனாக ஆகமுடியாது என்ற வசனத்தை அல்லாஹ் இறக்கியருளிய பிறகு அபூ ஹுதைஃபா ﵁ அவர்கள் தன் வீட்டிற்கு சாலிம் ﵁ அவர்கள் வருவதையே வெறுத்தார்கள் என்று ஹதீஸ்களில் உள்ளது. இவ்வாறு தன் வீட்டிற்கு வருவதையே அபூ ஹுதைஃபா ﵁ அவர்கள் வெறுத்தார்கள் என்றால், நேரடியாக சாலிம் ﵁ அவர்கள் பால்

கொடுப்பதற்கு எப்படி அனுமதி அளித்திருப்பார்கள்?

இந்த ஆதாரங்கள் அனைத்தும் சாலிம் ﵁ அவர்கள் நேரடியாக பால் அருந்தினார்கள் என்பதற்குத் தடையாக இருக்கின்றன. எனவே சாலிம் ﵁ அவர்கள் நேரடியாகப் பாலை அருந்தவில்லை என்று ஏற்பதே சரியான முடிவாகும்.

நான் (முழுமையான) ஆடையை அணிந்திருக்காத நிலையில் அபூ ஹுதைஃபாவின் பொறுப்பில் இருந்த சாலிம் என்னிடத்தில் வருபவராக இருந்தார். இதனை அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடம் கூறியபோது, நபி ﷺ அவர்கள், அவரை உறிஞ்சி பால் குடிக்க வையுங்கள். நீங்கள் அவருக்கு செவிலித் தாயாகி விடுவீர்கள் என்றார்கள். (அல்முஃஜமுல் அவ்ஸத் - 7178) (பார்க்க நூல் ஹதீஸ்கள் குர்ஆனுக்கு முரண்படுமா? பக்கம் - 45)

இந்த ஹதீஸை ஆதாரமாக வைத்து சாலிம் ﵁ அவர்கள் நேரடியாகப் பாலருந்தினார்கள் என்று இவர்கள் கூறுகிறார்கள்.

இந்த ஹதீஸின் அறிவிப்பாளராக உள்ள அஹமத் பின் அர்ருக்காம் அத்தஸ்தரி யாரென அறியப்படாதவர். மேலும் இந்த ஹதீஸின் அறிவிப்பாளராக இருக்கின்ற அப்துல்லாஹ் பின் உஸ்மான் பின் கைஸம், காசிம் பின் முஹம்மத் வழியாக சஹ்லா அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்.

அஹமத் மற்றும் தப்ரானீயில் ஹம்மாத் பின் சலமா அப்துர்ரஹ்மான் பின் காசிம், காசிம் பின் முஹம்மத் வழியாக சஹ்லா அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்.

காசிம் பின் முஹம்மத், சஹ்லா அவர்களிடமிருந்து அறிவிப்பதாக உஸ்மான் பின் கைஸம் மற்றும் அப்துர்ரஹ்மான் பின் காசிம் ஆகிய இருவர் மட்டுமே அறிவிக்கிறார்கள். மற்ற அறிவிப்பாளர்களான யஹ்யா பின் சயீத், இப்னு அபீ முலைக்கா மற்றும் அப்துர்ரஹ்மான் பின் காசிம் ஆகிய அறிவிப்பாளர்கள் காசிம் பின் முஹம்மத் வழியாக ஆயிஷா ﵂ அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்.

உஸ்மான் பின் கைசம், சதூக் எனும் இரண்டாம் நிலையிலுள்ள அறிவிப்பாளர் ஆவார். அவர் தன்னைவிட வலிமையான அறிவிப்பாளர்களுக்கு மாற்றமாக அறிவிப்பதால் அவரது அறிவிப்பு ஷாத் வகையில் அமையும்.

அப்துர் ரஹ்மான் பின் காசிம், காசிம் பின் முஹம்மத் வழியாக ஆயிஷா ﵂ அவர்களிடமிருந்தும் அறிவிக்கிறார்கள், சஹ்லா ﵂ அவர்களிடமிருந்தும் அறிவிக்கிறார்கள்.

அப்துர் ரஹ்மான் பின் காசிமிடமிருந்து பலர் இந்த ஹதீஸை அறிவிக்கிறார்கள். ஆனால் அதில் ஹம்மாத் பின் சலமா என்ற அறிவிப்பாளர் மட்டுமே அப்துர் ரஹ்மான் பின் காசிம், காசிம் பின் முஹம்மத் வழியாக சஹ்லா ﵂ அவர்களிடமிருந்து அறிவிப்பதாகக் கூறுகிறார்கள். மற்ற அறிவிப்பாளர்கள் அனைவரும் அப்துர் ரஹ்மான் பின் காசிம், காசிம் பின் முஹம்மத் வழியாக ஆயிஷா ﵂ அவர்களிடமிருந்து அறிவிப்பதாக கூறுகிறார்கள்.

ஹம்மாத் பின் சலமா அவர்களின் அறிவிப்பும் ஷாத் என்ற வகையில் அமையும். மேலும் ஹம்மாத் பின் சலமா அவர்களின் அறிவிப்பு அஹமத் மற்றும் தப்ரானீயில் இடம்பெற்றுள்ளது. அதில் நேரடியாக உறிஞ்சிக் குடிக்க வையுங்கள் என்ற வாசகம் இல்லாமல் மற்ற ஹதீஸ்களில் வந்துள்ளதைப் போல் அவருக்குப் பால் கொடுத்துவிடுங்கள் என்றே வந்துள்ளது.

தப்ரானியில் வந்துள்ள உஸ்மான் பின் கைஸமின் அறிவிப்பிலுள்ள உறிஞ்சிக் குடிக்க வையுங்கள் என்ற வாசகம் முன்கர் என்ற மறுக்கப்பட வேண்டிய வாசகம் ஆகும்.

நபி ﷺ அவர்கள் சஹ்லா ﵂ அவர்களிடம் உறிஞ்சிப் பால் கொடுங்கள் என்று கூறியதாக வந்துள்ள ஹதீஸ் பலவீனமானதாகும். இவர்கள் தங்களது கருத்திற்கு மாற்றமாக ஒரு ஸஹீஹான ஹதீஸ் வந்தால் அதை ஆதாரமாக ஏற்க மாட்டார்கள். ஆனால் தங்களின் கருத்திற்கு சாதகமாக ஒரு பலவீனமான ஹதீஸ் வந்தால் அதனை ஆதாரமாக ஏற்பார்கள் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

பாலைக் கறந்து கொடுக்கும் நடைமுறை இன்றும்கூட தமிழகத்தின் சில கிராமங்களில் இருப்பதைக் காண்கிறோம். குறிப்பாக கண் நோயுடையவர்களுக்கு தாய்ப்பாலை கறந்து கொடுக்கும் நடைமுறையை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அரபிகளிடமும் இவ்வாறான நடைமுறை

இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரமாக பின்வரும் சம்பவத்தை குறிப்பிடலாம்.

ஒரு மனிதர் அதா பின் அபீ ரபாஹாவிடம், ஒரு பெண், தனது பாலை எனக்குக் கறந்து கொடுத்தால் அப்போது நான் பெரிய ஆளாக இருந்தேன். அந்தப் பெண்ணை நான் திருமணம் முடிக்கலாமா? என்று கேட்டார். அதா அவர்கள் திருமணம் முடிக்கக் கூடாது என்றார்கள். அப்போது இப்னு ஜுரைஜ் அவர்கள் அதா அவர்களே இது உங்களின் சொந்தக் கருத்தா? என்று கேட்டபோது அதா அவர்கள் ஆம்! என்று கூறிவிட்டு ஆயிஷா ﵂ அவர்களும் இதே கருத்தில்தான் இருந்தார்கள் என்றார்கள். (முஸனஃப் அப்துர் ரஜ்ஜாக்)

பாலைக் கறந்து கொடுத்தார்கள் என்ற வாசகத்தை வைத்து இந்த முறையில் தான் பெரியவர்களுக்கு பால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதினை அறியலாம்.

(33:5) வசனம் இறங்கிய பிறகு அபூ ஹுதைஃபா ﵁ அவர்கள் சாலிம் தன் வீட்டிற்கு வருவதில் அதிருப்தி கொண்டார்கள். நபி ﷺ அவர்கள் சஹ்லா அவர்களிடம் நீ சாலிமிற்கு பால் கொடுத்துவிடு. இதனால் அவருக்கு செவிலித்தாய் ஆகிவிடுவாய். (உன்னுடைய கணவர்) அபூ ஹுதைஃபாவின் மனதில் நிலவும் அதிருப்தியும் மறைந்துவிடும் என்று கூறினார்கள். அவர் திரும்பிச் சென்று மீண்டும் நபி ﷺ அவர்களிடம் வந்து நான் அவருக்காக பால் கொடுத்துவிட்டேன். இதனால் என் கணவர் அபூ ஹுதைஃபாவின் மனதில் நிலவிய அதிருப்தியும் மறைந்துவிட்டது என்று கூறினார். (முஸ்லிம் - 2879)

சாலிம் ﵁ அவர்கள் தொடர்பான சம்பவம் வஹீயின் அடிப்படையில் உள்ளதாகும். ஆகவேதான், நபி ﷺ அவர்கள் சஹ்லா அவர்களிடம் சாலிமிற்கு பால் கொடுக்க அனுமதித்தார்கள். நபி ﷺ அவர்கள் இச்சட்டத்தை சுயமாகக் கூறவும் முடியாது. மேலும் இது அல்லாஹ்வின் ஏற்பாட்டின் படி இருந்ததாலேயே அபூ ஹுதைஃபா ﵁ அவர்களின் மனதில் இருந்த அதிருப்தியும் நீங்கியது.

சஹ்லா ﵂ அவர்களுக்கு அந்நேரத்தில் கைக்குழந்தை ஏதுமில்லை. அப்படியிருக்க அவர்கள் பாலை எப்படி வழங்க முடியும் என்ற

குற்றச்சாட்டை இஸ்லாத்தை எதிர்ப்பவர்களில் குறிப்பாக கிறிஸ்துவர்கள், கிழக்கத்தியவாதிகள் எழுப்புகிறார்கள். அதே குற்றச்சாட்டை இவர்களும் வைக்கிறார்கள்.

நாம் முதலிலேயே தெரிவித்தோம், சாலிம் ﵁ அவர்களின் சம்பவம் வஹீயோடு தொடர்புடையதாகும். எனவே இதில் அது சாத்தியமா, இது சாத்தியமா? என்ற குருட்டுக் கேள்விகளுக்கு இடம் தராமல் இதனை ஏற்பது கடமையாகும். மேலும் சஹ்லா ﵂ அவர்களுக்கு முஹம்மத் என்ற மகன் இருந்தார்கள் என்பதற்கு ஆதாரப்பூர்வமான தகவல்களும் உள்ளது.

முடிவுரை

ஸஹீஹான ஹதீஸ்கள் ஒருபோதும் அல்குர்ஆனோடு முரண்படவே படாது என்பதுதான் ஹதீஸ் தொடர்பான நம்பிக்கையில் சரியான வழிமுறையாகும். அதைத் தெளிவுபடுத்தவே இந்நூலில் ஹதீஸ் தொடர்பான விதிகளை விரிவாக விளக்கிக் கூறியுள்ளேன். அத்தகைய விதிகளை மக்கள் அறிந்து ஹதீஸ் மறுப்புக் கொள்கையிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றேன்!

ஸஹீஹான ஹதீஸ்கள் அல்குர்ஆனுக்கு முரண்படும் என்று ஹதீஸ் கலையில் விதி இருக்கிறது என்று கூறும் இவர்களின் வாதம் அர்த்தமற்ற வாதமாகும். ஹதீஸ்கலையில் அப்படி ஒரு விதி இல்லவே இல்லை. இஸ்லாமிய வரலாற்றில் நேர்வழியில் சென்ற எந்த ஓர் அறிஞரும் ஆதாரப்பூர்வமான ஹதீஸென்று ஒப்புக் கொள்ளப்பட்ட எந்த ஒரு ஹதீஸையும் அல்குர்ஆனுக்கு முரண்படுகிறது என்று கூறி மறுக்கவில்லை.

ஸஹீஹான ஹதீஸ்களை மறுப்பது வழிகேடர்களின் வழியாகும். அத்தகைய வழிகேடர்கள் எழுப்பும் வாதங்களை அடிப்படையாக வைத்தே இவர்களும் ஸஹீஹான ஹதீஸ்களை மறுக்கிறார்கள்.

எனவே முன்சென்ற நல்லறிஞர்கள், ஹதீஸ்கலை வல்லுநர்கள் சென்ற வழியில் ஸஹீஹான ஹதீஸ்களை நிராகரிக்காமல் அதனை நாமும் ஏற்போம்!